விலை: 20.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 21 வெள்ளிக்கிழமை (04.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வெங்காயம், உருளைக்கிழங்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது

நிதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படுகின்ற பெரிய வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கிற்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்புகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு 23

2018 முதல் 3 மாதங்களில் எச்.ஐ.வி தொற்றால் 91 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் முதல் மூன்று மாத காலப்பகுதியில் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்ட 91 பேர் அடையாளம் காணப்பட்டிருப்பதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் திட்டம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் 31 பேர் ஆண்கள். இது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நாடு முழுவதும் முன்னெ 23

ஒரு தொகை வெடிபொருட்கள் முல்லை காட்டுப் பகுதியில் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இளங்கோபுரம் காட்டுப்பகுதியில் ஒரு தொகுதி யுத்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை தொடர்ந்து பொலிஸாரும் அதிரடிப்படையினரும் இணைந்து குறித்த வெடிபொரு 24

இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவால் ஆணைக்குழுவால்

ஜனாதிபதி மைத்திரியின் பிரதம அதிகாரி கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் பிரதம அதிகாரி கலாநிதி கே. மகாநாம மற்றும் மரக் கூட்டுத்தாபனத் தலைவர் பி.திஸாநாயக்க ஆகிய இருவரும் 24

துஸ்யந்த ராஜகுரு

இராணுவப் புலனாய்வு தளபதியாக நியமனம்

24

அரிசி இறக்குமதி இடை நிறுத்தம்

வர்த்தக அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

அரிசி இறக்குமதியை இடை நிறுத்த கைத்தொழில் 23

13-வது அரசியலமைப்பு சீர்திருத்தம்

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையவில்லை

இரா. சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு) 13-வது அரசியலமைப்பு சீர்திருத்தம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். மேலும் 13-வது சீர்திருத்தத்தில் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக சில விடயங்கள் முன் வைக்கப்பட்ட போதும் அது தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வாக அமையவில்லை எனவும் குறிப்பிட்டார். (23-ம் பக்.)

வட மாகாணத்தில் மலேரியா தொற்று அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

பிராந்திய மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மலேரியா தொற்று அதிகரிக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிராந்திய மலேரியா தடை இயக்க பொறுப்பு வைத்திய அதிகாரி நொறிஸ் மரியச் செல்வம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் 23

மேலதிகமாக 3 ஆயிரம் பில். அரசு கடனாக பெற்றுள்ளது

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்

(கொழும்பு)

கடன் பொறியில் இருந்து நாட்டை காப்பாற்ற போவதாக கூறி ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கம் நாட்டின் கடனை மேலும் சுமார் 3 ஆயிரம் பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். 2006 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை இலங்கை ஓரளவில் முன்னேற்றம் கண்டு வந்தது. இதனடிப்படையில் நாட்டின் பொரு 23

ஒட்டுசுட்டான் வீதிப் பகுதியிலுள்ள தேக்கமரச் சோலையில் தீபரவல்

23

மகாவலி கங்கையில் புலிகளின் இலக்கத் தகடுகள் மீட்கப்பட்டன

கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

மகாவலி கங்கையில் விடுதலைப் புலி உறுப்பினர்களின் இலக்க தகடுகள் மீட்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சூரியபுர பாலத்திற்கு அருகில் மகாவலி கங்கையில் மீனவர் ஒருவரின் வலையில் சிக்கிய பொதியில் இந்த தகடுகள் கிடைத்துள்ளன.

வலையில் சிக்கிய பொதியில் விடுதலைப் புலிகளின் 196 இலக்க தகடுகள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நான்கு இலக்கங்களும் தமிழ் மொழியில் எழுதப்பட்ட எழுத்துக்களும் தகட்டில் பொறிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசேட 23

பிரபாகரனின் புகைப்பட அல்பம்

முள்ளிவாய்க்காலில் நேற்று கண்டெடுப்பு

23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சேவை நயப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் முன்னாள் போசகரும் தற்போதைய நிபுணத்துவ ஆலோசகரும், இளைப்பாறிய யாழ்.வலய கல்விப் பணிப்பாளருமாகிய ந.தெய்வேந்திரராஜா அவர்களின் சேவை நயப்பு விழா நாளை 05.05.2018 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு செல்வச்சந்நிதி தொண்டைமானாறு வெளிக்கள நிலையததில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத் தலைவர் பேராசிரியர் திருமதி சி.குகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம)

ஊடகப் போராளிகளை நினைவு கூரும் நிகழ்வு நேற்று யாழில்

(யாழ்ப்பாணம்)

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு ஊடகப் போராளிகளை நினைவு கூரும் நிகழ்வு நேற்று றக்கா வீதியில் அமைந்துள்ள ஆட்கலறி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் சற்றர்டே ரிவூயூ பத்திரிகையின் ஆசிரியர் அமரர் காமினி நவரட்ண மற்றும் சற்றர்டே ரிவூயூ பத்திரிகையின் ஊடகவியலாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.ஜே.கனகரத்தினா ஆகியோருக்கான நினைவேந்தல் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்கள், ஊடக மாணவர்கள், அரசியல் வாதிகள், சமயப் பெரியார்கள் என பலரும் கலந்து கொண்டு அவர்களுக்கான அஞ்சலியினை செலுத்தியிருந்தனர்.

இந் நிகழ்வில் இருவருடைய வாழ்க்கை வரலாறு, ஊடகப் பணி தொடர்பில் அதிதிகளின் பேச்சுக்களும் இடம்பெற்றன. (ம-9)

பண்ணிசைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக்கழகத்தால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட விருந்த பண்ணிசைப்போட்டி மறுநாள் 07.05.2018 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெறும் என திருநெறிய தமிழ்மன்றக் கழகம் அறிவித்துள்ளது. (ம)

காணி வழங்குமாறு போராட்டம் நடத்திய குருநகர் வாழ் குடும்பங்களுக்கு ஆளுநர் கூரே மாற்று யோசனை

(யாழ்ப்பாணம்)

வதிவிடத்திற்கு காணி வழங்குமாறு போராட்டம் நடத்திய குருநகர் வாழ் குடும்பங்களுக்கு அரச உயர் அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர் மாற்று யோசனையினை ஆளுநர் வழங்கியுள்ளார்.

மதுவரித்திணைக்களத்திற்கு சொந்தமான காணியில் அத்துமீறி குடியமர்ந்த மக்கள் அண்மையில் நாவற்குழியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணியில் குடியமர்த்தப்பட்டனர். எனினும் காணி கிடைக்காத 15 குடும்பங்கள் பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்ட காணியில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து குடியமர்ந்தனர். எனினும் பொலிஸாரினால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் தமக்கு காணி வழங்குமாறு கோரி ஆளுநர் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றில் நேற்றையதினம் ஈடுபட்டிருந்தனர்.

அவர்களுடன் பேச்சு நடத்திய ஆளுநர் நாளை (இன்று) பொலிஸார் மற்றும் அரச உயர்அதிகாரிகளுடன் கலந்துரையாடி பதில் தருவதாக உறுதியளித்திருந்தார். இந்த நிலையில் போராட்டத்தினை கைவிட்டு சென்றிருந்தனர்.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், யாழ்ப்பாணம் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர்கள், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கிராமசேவையாளர்கள், காணித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை நேற்றுக் காலை அழைத்து பேசியிருந்தார்.

இதன்போது நாவற்குழியில் அரச காணிகள் அனைத்தும் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட நிலையில் மண்டைதீவு, யாழ்ப்பாணம் கல்லுண்டாய்வெளி, மருதங்கேணி போன்ற பகுதிகளில் காணப்படும் அரச காணிகளை குறித்த குடும்பங்கள் விரும்பும் பட்சத்தில் வழங்க முடியும் என்று அரசாங்க அதிபர் ஆளுநரிடம் தெரிவித்தார். அவர்களுக்கான குடிநீர் மற்றும் தற்காலிக கொட்டகைகளை உடனடியாக அமைப்பதற்கு உதவிகளை வழங்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த முடிவினை போராட்டத்தில் ஈடுபட்ட குடும்பங்களுக்கு அறிவிக்கப்பட்டு மேலதிக தேவைகளுக்காக அரசாங்க அதிபரை தொடர்பு கொள்ளுமாறும் ஆளுநர் கேட்டுக் கொண்டார். (ம-9)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் அமரர் பொன்னையா ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

யாழின் முன்னணி ஊடகவியலாளரான அமரர் ஈழகேசரி நா.பொன்னையா அவர்களின் ஞாபகார்த்த நிகழ்வு அன்னாரால் ஸ்தாபிக்கப்பட்ட குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சன்மார்க்க சபை உபதலைவர் பா.செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நினைவுரை நிகழ்த்தவுள்ளார்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உப அதிபரும் தலைசிறந்த நாடகக் கலைஞருமான நா.விமலநாதன் அவர்களுக்கு கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளது. தொடர்ந்து பிரதான நிகழ்வாக இன்றைய ஊடகங்கள் சமூக மேம்பாட்டிற்கு வரமா? சாபமா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும். யாழ்ப்பாண பல்கலைக் கழக பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் ச.லலீசன், இ.சர்வேஸ்வரா, ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ ஆகியோர் வரம் என்ற குழுவிலும் வே.சிவராசா, த.ஜங்கரன், ந.ஜங்கரன் ஆகியோர் சாபம் என்ற குழுவிலும் வாதிடவுள்ளனர். இறுதியாக அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவர்களின் கிராமிய சங்கமம் என்ற கலைநிகழ்வும் நடைபெறவுள்ளது. (ம)

பெயர்மாற்றம்

மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட தங்கவேல் டக்சி ஆகிய எனது பெயரை **தங்கவேல் டயானா** என மாற்றம் செய்து இன்று முதல் அப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள

தங்கவேல் டயானா (3841)

WESTERN UNION WU
moving money for better (M-2775)
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

வழி தவறிய வளர்ப்புப்பூனை

கடந்த ஞாயிறு (29.04.2018) யாழ் பிறவுண் றோட்டில் உள்ள யாழ் மிருக வைத்தியசாலை அருகில் (பிரம்மகுமாரிகள் இல்லத்திற்கு அண்மையாக) மஞ்சளும் சாம்பலும் சிறிது வெண்மையும் கலந்த நிறமுடைய நடுத்தர அளவிலான வளர்ப்பு பெண் பூனைக்குட்டி மிருக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வந்த சமயம் வழி தவறி சென்றுவிட்டது.

இப்பூனை பற்றிய தகவல் ஏதேனும் தெரிந்தவர்கள் தயவு கூர்ந்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல் தருபவர்கட்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3843)

தொலைபேசி இலக்கம்
071 2692639

Lanka Mass Media Institute

வழங்கும்

வெகுசன ஊடக (Mass Media) ஒருநாள் செயலமர்வு....

- ஒலிபரப்பாளராக (RJ) வேண்டுமா?
- நிகழ்ச்சி தொகுப்பாளராக வேண்டுமா?
- செய்தி வாசிப்பாளராக வேண்டுமா?
- திரைப்பட இயக்குனராக வேண்டுமா?
- ஒளி,ஒலிப்பதிவாளராக வேண்டுமா?
- ஊடகவியலாளராக வேண்டுமா?
- சோசல் மீடியாவில் சாதிக்க வேண்டுமா?

உங்களுக்குள் இருக்கும் திறமையை நாங்கள் வெளிக்கொண்டு வருகின்றோம்.

ஊடகங்களில் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டுகின்றோம்.

அனுமதிக்கு முந்துங்கள். மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கே அனுமதி

இடம் :
TCT Hall (நாவலர் மண்டபம் முன்பாக)
இல.527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம் :
12.05.2018 (காலை 9.30 - 2.30)

அனுமதிக் கட்டணம் 500/=
(சிற்றுண்டியும் மென்பானமும்)

077 488 92 28
jaffnamediastudies27@gmail.com

வளவாளர்கள் :
பிரபல அறிவிப்பாளர் லங்கேஸ்
ஊடகவியலாளர் ஜெயச்சந்திரன்

Lanka Mass Media Institute
No. 27, station road , kokuvil, Jaffna.

(சி-2488)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

1. **வாகனச் சாரதி தரம் 312/13**
   - சம்பளக் குறியீட்டு இலக்கம் 312/13 (சுற்றுநிருப இல.165/88இன்படி)
   - சம்பள அளவுத் திட்டம் - ரூபா. 14230-120X10 - 130X10 ரூபா. 16730 (சுற்றுநிருப இல 13/2015) இதற்கு மேலதிகமாக கூ.ஊ.ஆ.சுற்றுநிருபங்களுக்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படி, விசேடபடி என்பனவும் வழங்கப்படும்.
   - **தகைமைகள்**
     அ) 05ம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்டர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
2. **காரியாலயசேவகர் தரம் 317/17**
   - சம்பளக் குறியீட்டு இலக்கம் 317/17 (சுற்றுநிருப இல.165/88 இன்படி)
   - சம்பள அளவுத்திட்டம் - ரூபா.12800-100X10 - 110X10 ரூபா.14900 (சுற்றுநிருப இல. 13/2015) இதற்கு மேலதிகமாக கூ.ஊ.ஆ.சுற்றுநிருபங்களுக்கு அமைய வாழ்க்கைச் செலவுப்படி, விசேடபடி என்பனவும் வழங்கப்படும்.
   - **தகைமைகள்**
     அ) எட்டாம் (08) வகுப்பு கல்விச் சான்றிதழ்.
3. **விற்பனை உதவியாளர் தரம் 308/17**
   - சம்பளக் குறியீட்டு இலக்கம் 308/17 (சுற்றுநிருப இல.165/88 இன்படி)
   - சம்பள அளவுத்திட்டம் - ரூபா 12800-100X10 - 110X10 ரூபா 14900 (சுற்றுநிருப இல.13/2015) இதற்கு மேலதிகமாக கூ.ஊ.ஆ.சுற்றுநிருபங்களுக்கு அமையவாழ்க்கைச் செலவுப்படி, விசேடபடி என்பனவும் வழங்கப்படும்.
   - **தகைமைகள்**
     அ) கூட்டுறவு பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ் அல்லது
     ஆ) 8ம் வகுப்பில் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

பொது

- மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தினை ரூபா.20/= செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி 18.05.2018ம் திகதிக்கு முன்னதாக 'பொதுமுகாமையாளர் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து), கண்டி வீதி சாவகச்சேரி' என்னும் முகவரிக்கு தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.
- வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
- சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
- இப்பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து ரொக்கப்பிணையினை சங்கத்தில் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கண்டி வீதி, சாவகச்சேரி. 03.05.2018

(C-2486)

இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 32 கிலோ தங்கத்துடன் தமிழகத்தில் 6 பேர் கைது

(சென்னை)

இலங்கையில் இருந்து கடல் வழியாக இந்தியாவுக்கு கடத்திச் சென்ற 32 கிலோ கிராமுக்கு மேற்பட்ட தங்கத் துடன் 6 பேரை இந்திய கடலோர காவற்படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து கைப்பற்றிய தங்கத்தின் பெறுமதி 10 கோடி இந்திய ரூபாய்களுக்கும் மேல் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் சென்னை மற்றும் அதனை அண்டிய நகரங்களில் மேற்கொள்ளப் பட்ட தேடுதல்களில் தங்கத் துடன் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து கடல் வழியாக பாரியளவில் தங்கம் கடத்திச் செல்லப் படுவது அதிகரித்துள்ளது.

தமிழகத்தின் கடற்கரை பிரதேசங்களுக்கு கடத்தி செல்லப்படும் தங்கம், அங்கி ருந்து விற்பனைக்காக சென் னைக்கு கொண்டு செல்லப்ப டுவதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (இ-7)



(கேலிச்சித்திரம்)

தனக்குப் பின்னர் மகன்

நாமல் நாட்டை ஆள வேண்டும் மகிந்தவின் விருப்பம் இதுவே

குமார் குணரட்னம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தனக்குப் பின்னர் தனது மகன் நாமல் ராஜபக்ஷ நாட்டை ஆள வேண்டும் என் பதே முன்னாள் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷவின் விருப்பம் என முன்னிலை சோசலிசக் கட் சியின் தலைவர் குமார் குண ரட்னம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த முன்னிலை சோசலிசக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

"எதிர்வரும் காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாரை வேட்பா ளராக நிறுத்துவது என்பது தொடர்பாக கூட்டு எதிரணிக் குள் சிக்கல் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவிற்கு போட்டியிட முடியாத நிலையில், அவரது சகோதரர் கோத்தபாய ராஜ பக்ஷ தேர்தலில் போட்டியிடப் போவதாக தகவல்கள் வெளி யாகின. ஆனால், கோத்த பாய ஜனாதிபதி வேட்பாள ராக போட்டியிடுவதில் மகிந்த அதிருப்தி கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தனக்குப் பின்னர் ஜனாதிபதி ஆசன த்தில் மகன் நாமல் ராஜபக்ஷ அமர வேண்டும் என்பதே மகிந்தவின் விருப்பம்.

இந்த நெருக்கடி காரண மாகவே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலுக்கு இன்றி, பொதுத் தேர்தலுக்கு அழை ப்பு விடுத்து வருகிறார்" என வும் அவர் தெரிவித்தார். (இ-7)

என்னைக் குற்றவாளியாக்குவதே இந்த அரசின் பிரதான நோக்கம்

கோத்தபாய குற்றச்சாட்டு

(கொழும்பு)

தன்னைக் குற்றவாளியா க்கி சிறைவைக்க வேண்டு மென்பதில் இந்த அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டு வருவ தாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கல ந்துகொண்ட அவர், ஊடகவி யலாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

"போர் இடம்பெற்ற காலத் தில் நாட்டுக்காக அர்ப்பணிப் புடன் செயற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பலர் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள் ளனர்.

அதாவது நாட்டில் இடம் பெற்ற கொலை, கொள்ளை பற்றும் ஊழல் அனைத்துக் கும் நானே காரணமென வாக்குமூலம் அளித்த அதி காரிகளை மாத்திரம் அரசா ங்கம் விடுதலை செய்து விட்டு ஏனையவர்களை சிறையில் அடைத்து வைத்துள்ளது. வழக்குத்தொடுக்கப்படுபவர்கள், எனது பெயரைக் கூறுமாறு அழுத்தம் கொடுக்கப்படுகி ன்றனர். அவ்வாறு எனது பெயரைக் கூறினால் விடு விப்போம் என தெரிவிக் கின்றனர். இதுதான் இன்று நாட்டில் நடக்கின்றது.

குற்றவாளிகளை விட நாட்டைப் பாதுகாத்த படை யினரே இன்று அதிகமாக சிறையில் உள்ளனர்" என வும் அவர் குற்றம் சுமத்தி யுள்ளார். (இ-7)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு அவசியம்

ஆனந்த தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டு க்கு அவசியமென, அஸ்கிரிய பீடத்தின் உதவிப் பதிவாளர் நாரம்பனாவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், தேசிய அரசாங்கத்திலிருந்து, வில கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 15 நாடாளு மன்ற உறுப்பினர்கள், நாரம்ப னாவே ஆனந்த தேரரை சந் தித்த சந்தர்ப்பத்தில் அவர் இந் விடயத்தைக் தெரிவித்தார்.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு தாம் எதிர் ப்பை வெளியிடுவதாகவும், எனி னும் அந்த சந்தர்ப்பத்தில் அதனை நடைமுறைப்படுத்த வேண் டிய அவசியம் அப்போதைய ஜனா திபதிக்கு இருந்ததாகவும் குறிப்பிட்ட அவர், எனினும் நிறைவேற்று அதிகார ஜனா திபதி முறைமையை பாதுகா ப்பதற்குத் தேவையான உறுப் புரை 13 ஆவது திருத்தத்தில் சேர்க்கப்பட வேண்டுமென வும் வலியுறுத்தினார்.

தமது அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்வதற் காக, தமக்கென ஒரு நிகழ் ச்சி நிரலை வைத்திருக்கும் அரசியல் தலைவர்கள் அதனை விலக்கிக்கொள்ள வேண்டு மெனவும் அஸ்கிரிய பீடத் தின் உதவிப் பதிவாளர் நாரம் பனாவே ஆனந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

நாட்டைச் சீரழித்த பின்னர்

அமைச்சரவை மாற்றம் காலம் கடந்த ஞானம்!

ஜனாதிபதி மீது பிரசன்ன சாடல்

(கொழும்பு)

நாட்டைச் சீரழித்த பின் னரே, செயற்றிறன் மிக்க அமைச்சரவையின் அவசி யம் குறித்த ஞானம் ஜனாதிப திக்குப் பிறந்துள்ளது எனக் கூட்டு எதிரணியின் ஒருங்கி ணைப்பாளரும் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறு ப்பினருமான பிரசன்ன ரணா துங்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை தொகு தியில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற கட்சி ஆர் வலர்களுக்கு விழிப் புணர்வூட் டும் கூட்டமொன்றில் உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பத்து செயற்றி றன் மிக்க அமைச்சரவைக் குழுக்களை நியமித்தாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிற்கு நாட்டின் தலைமை கதிரையில் இன் னும் 15 மாதங்களுக்கு மாத் திரமே அமரலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, தொடர்ந்தும் அமைச்சரவைக் குழுக் களை அமைத்துக் கொண் டிருப்ப தைத் தவிர்த்து, இனி யேனும் மக்களுக்கு வழங்கிய வாக்கு றுதிகளை நிறைவேற்ற முன் வர வேண்டும் எனத் தெரிவித்தார். நாடு எதிர் நோக்கியுள்ள நெருக்கடி களை மூடி மறைக்கும் வகை யில் அரசாங்கம் பல்வேறு நாட கங்களை அரங்கேற்றி வரு வதாகக் குறிப்பிட்ட அவர், அந்த நாடகங்களின் புதிய வடி வமே இந்த அமைச்சரவை மாற் றம் என்றும் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இதுவரை மூன்றாண்டுகளேனும் பூர்த் தியாகாத நிலையில், அமை ச்சரவைக் குழு மாத்திரம் மூன்று, நான்கு தடவைக்கு மேல் மாற்றப்பட்டு விட்டது எனவும் சுட்டிக்காட்டினார். (இ-7)

முகமூடி அணிந்த மர்ம நபர்கள் எரிபொருள் நிலையத்தில் கொள்ளை

70 ஆயிரம் ரூபா அதிகாலை வேளை பறிபோனது

(கொழும்பு)

பன்னல பொலிஸ் பிரி வுக்குட்பட்ட கோனவில, மாகந்துர பகுதியில் அமைந் துள்ள எரிபொருள் நிலை யம் ஒன்றில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.

வாகனம் ஒன்றில் வந்த இரண்டு நபர்கள் தமது முக த்தை அடையாளம் தெரி யாத வகையில் மறைத்த நிலையிலேயே இந்த கொள்ளைச் சம்பவத்தை நிகழ்த்தியுள்ளனர்.

சந்தேக நபர்கள் எரி பொருள் நிலையத்தில் கட மையாற்றிய இரண்டு பணி யாளர்களை அச்சுறுத்தி அவர்களிடம் இருந்து சுமார் 70,000 ரூபாவை கொள் ளையடித்துள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

இந்த கொள்ளைச் சம்ப வம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற் றது.

சந்தேக நபர்கள் இது வரை அடையாளம் காணப் படாத நிலையில், பன்னல பொலிஸார் மேலதிக விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

இலங்கையின் இனப்பிரச்சினை, சிக்கல் யாழ். பல்கலையில் இன்று கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலி யாவிலுள்ள மோடொக் பல்கலைக்கழகப் பேராசிரியர் அமீர் அலி இலங்கையின் இனப்பிரச்சினையும் பொருளாதார சிக்கல்க ளும் எனும் தலைப்பில் தமிழ்மொழியில் கருத்துரை வழங்குவார்.

இக்கருத்துரை யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப் பீடத்தின் மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல் கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் கலா நிதி சி.விஜய குமார் அறிவித்துள்ளார். (இ)

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களே! வாரங்கி விட்டீர்களா?
மின்னல் புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் தொடுப்பு
10 மாவட்டங்களைச் சேர்ந்த 12 பிரபல ஆசிரியர்களின் தொகுப்பில் வெளிவந்துள்ளது
12 மாதிரி வினாத்தாள்கள் முழுமையான புள்ளித்திட்டத்துடனான விடைகளுடன்
தொடர்புகளுக்கு: 077 411 8950, 011 234 1942

கரைசேருமா ரோகித்தின் மும்பை?

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில் இன்று நடக்கும் முக்கிய லீக் போட்டியில், ரோகித் சர்மாவின் மும்பை அணி, வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில், அஷ்வினின் பஞ்சாப்பை எதிர்த்து களமிறங்குகிறது.

'நடப்பு சம்பியனாக' களமிறங்கிய மும்பை, 8 போட்டிகளில் 2ல் மட்டும் வெற்றி பெற்று, 4 புள்ளிகளுடன் கடைசி இடத்தில் பரிதாபமாக உள்ளது. மீதமுள்ள 6 போட்டிகளிலும் வென்றால் மட்டுமே, 'பிளே ஓப்' செல்ல முடியும் என்ற நிலையில் உள்ளது.

பாண்ட்யா நம்பிக்கை

தொடக்க வீரர் சூர்யகுமார் (283) பரவாயில்லை. லீவிஸ (194) தொடர்ந்து தடுமாறுகிறார். 8 போட்டிகளில், இரு முறை (8, 11, 102, 0, 1, 12, 69, 5 ஓட்.,) மட்டுமே தொடக்க ஜோடி கைகொடுத்தது. இஷான் கிஷான், பொலார்ட் ஏமாற்றம் தொடர்கிறது. சகல துறை வீரர் பாண்ட்யா (111 ஓட்., 11 விக்.,) மட்டும், அணிக்கு ஆறுதலாக உள்ளார். பந்துவீச்சில் இளம் வீரர் மார்க்ண்டே (11 விக்.,) நம்பிக்கை கொடுக்கின்றார். மெக்லீனகன் (9), முஸ்தபிசுர் (7) ஓட்டங்களை வாரி வழங்குவதால் பும்ராவுக்கு (9 விக்.,), நெருக்கடி ஏற்படுகிறது.

ஹெய்ல் பலம்

பஞ்சாப் அணி ஒருவார ஓய்வுக்குப் பின் இன்று களமிறங்குகிறது. புதிய அணித் தலைவர் அஷ்வின், சிறப்பாக அணியை வழிநடத்துகிறார். 7 போட்டியில் 5ல் வென்று, 10 புள்ளிகள் பெற்றுள்ளது. ஐ.பி.எல்., அரங்கில் அதிவேக (14 பந்து) அரைச்சதம் அடித்த லோகேஷ் ராகுல் (268), இத்தொடரில் முதல் சதம் விளாசிய 'புயல்' கெய்ல் (252) இணைந்து நல்ல ஆரம்பம் கொடுக்கின்றனர்.

பந்துவீச்சில் ஆப்கானிஸ்தானை சேர்ந்த முஜீப் அர் ரஹ்மான் (எக்கானமி 6.51), அஷ்வினுக்கு கைகொடுக்கிறார். 'வேகத்தில்' அன்ட்ரூ ரை (9 விக்.,), அன்கித் ராஜ்புட் (7) என, இருவரும் எதிரணிக்கு தொல்லை கொடுக்கின்றனர்.

சம பலத்தில்

மும்பை, பஞ்சாப் அணிகள் இதுவரை 20 போட்டிகளில் மோதின. இதில் இரு அணிகளும் தலா 10 போட்டிகளில் வென்று, சமபலத்தில் உள்ளன.

சாய்னா 'நம்பர் - 10'

பட்மின்டன் தரவரிசை பட்டியலில், இந்தியாவின் சாய்னா, 'ரொப்-10' பட்டியலில் இடம்பெற்றார்.

சர்வதேச பட்மின்டன் கூட்டமைப்பு சார்பில் புதிய தரவரிசை பட்டியல் வெளியானது. சமீபத்திய ஆசிய சம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்ற இந்திய வீராங்கனை சாய்னா நேவால், மீண்டும் 'ரொப்-10' பட்டியலில் நுழைந்தார். இவர், 2 இடங்கள் முன்னேறி, 'நம்பர்-10' ஆக உள்ளார். சிந்து தொடர்ந்து மூன்றாவது இடத்தில் நீடிக்கிறார்.

தொழிலாளர்களோடு ஒருவனாக

மே தினத்தில் இன்ப அதிர்ச்சி கொடுத்த 'தல' தோனி

தொழிலாளர்கள் தினமான மே 1ஆம் திகதி அன்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி, மைதானத்தை பராமரிக்கும் தொழிலாளர்களுக்கு இன்ப அதிர்ச்சி அளித்தார்.

11ஆவது ஐபிஎல் சீசன் போட்டிகள் நடந்து வருகின்றன. சூதாட்ட சர்ச்சையில் சிக்கி 2 ஆண்டுகள் தடைக்குப்பின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பங்கேற்று விளையாடி வருகிறது.

இதுவரை 9 போட்டிகளில் விளையாடியுள்ள சிஎஸ்கே அணி, 6 போட்டிகளில் வெற்றியும் 3 போட்டிகளில் தோல்வியும் அடைந்து, 12 புள்ளிகளுடன் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ளது.

சிஎஸ்கே அணியின் வெற்றிக்கு முக்கிய காரணம் வீரர்களின் உழைப்பு ஒருபுறம் இருந்தாலும், தோனியின் தலைமைத்துவம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அணியின் இக்கட்டான தருணங்களில் இவரின் கூலான அணுகுமுறையும் அனல்பறக்கும் துடுப்பாட்டமும் வெற்றிகள் பலவற்றை குவிக்க உறுதுணையாக இருந்துள்ளது.

களத்தில் ஆக்ரோஷமான துடுப்பாட்டத்தையும் கூலான தலைமைத்துவத்தையும் வெளிப்படுத்தும் தோனி, தனி மனிதராகவும் சிலநேரங்களில் அனைவரையும் நெகிழ்ச்சி அடையவைப்பார்.

கடந்த முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய நாளில் மைதானப் பராமரிப்பில் ஈடுபடும் ஊழியர்களைச் சந்தித்து அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட தோனி, அவர்களுடன் சில மணிநேரத்தை செலவிட்டுள்ளார்.

களத்தில் தொலைவில் மட்டுமே தோனியைக் கண்திக்கும் வாய்ப்பு பெற்ற களப் பராமரிப்பு ஊழியர்களுக்கு திடீரென தோனியை அருகில் சென்று அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டது இன்ப அதிர்ச்சியாக இருந்தது. தொழிலாளர்களுடன் தோனி எடுத்துக் கொண்ட புகைப்படங்களை சிஎஸ்கே அணி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு மே தின வாழ்த்துக் கூறியுள்ளது.

அதில் சுப்பரான நாள். கிரிக்கெட் போட்டியின் வளர்ச்சிக்கும், ரசனைக்கும் செலவிடும் ஒவ்வொருவருக்கும் சர்வதேச தொழிலாளர் தின வாழ்த்துக்கள்.

குறிப்பாக சென்னை சேப்பாக்கம் புல்லோகரில் மைதான பராமரிப்பு பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு மே தின வாழ்த்துக்கள். #விசில்போடு, #யெலோ என்று பதிவிடப்பட்டுள்ளது.

இந்த புகைப்படங்களை பார்த்த தோனியின் ரசிகர்கள் அவரை புகழ்ந்து வருகின்றனர். மனிதனுக்கு மனிதர், உண்மையான மனிதர், தொழிலாளர்களின் தோழர் என்றெல்லாம் அவருக்கு புகழாரம் சூட்டி அவரின் ரசிகர்கள் மகிழ்கின்றனர். ஏராளமானோர் இந்த புகைப்படத்தை பகிர்ந்துள்ளனர்.

இந்தியன் பிறிமியர் லீக் - 2018
புள்ளிகள் பட்டியல்

நிலை	அணி	போட்டி	வெற்றி	தோல்வி	புள்ளி
1	சன்ரைசர்ஸ் ஹைதராபாத்	8	6	2	12
2	சென்னை சுப்பர் கிங்ஸ்	9	6	3	12
3	கொல்கத்தா நைட் ரைடர்ஸ்	9	5	4	10
4	கிங்ஸ் XI பஞ்சாப்	7	5	2	10
5	பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்	8	3	5	6
6	டில்லி டேர்டெவில்ஸ்	9	3	6	6
7	ராஜஸ்தான் றோயல்ஸ்	8	3	5	6
8	மும்பை இந்தியன்ஸ்	8	2	6	4

கில்லி போல் ஆடினார் கில்
கோட்டைவிட்டது சென்னை

33ஆவது ஐ.பி.எல்., லீக் போட்டியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்திலும் கோட்டைவிட்ட சென்னை அணி, 6 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது. சுப்மன் கில் அரைச்சதம் விளாச கொல்கத்தா 5ஆவது வெற்றியை பதிவு செய்தது.

இந்தியாவில், 11ஆவது ஐ.பி.எல்., சீசன் நடக்கிறது. நேற்று, கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் சென்னை-கொல்கத்தா அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

வோட்சன் விளாசல்

சென்னை அணிக்கு வோட்சன், டு பிளசி ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. பியுஸ் சாவ்லா வீசிய 2வது ஓவரில், 2 பவுண்டரி அடித்த டு பிளசி, மிட்சல் ஜோன்சன் பந்தில் ஒரு சிக்சர் பறக்க விட்டார். பவுண்டரி அடித்து தனது ஓட்ட கணக்கை தொடக்கிய வோட்சன், ஜோன்சன் வீசிய 5ஆவது ஓவரில், ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். முதல் விக்கெட்டுக்கு 48 ஓட்., சேர்த்திருந்தபோது சாவ்லா 'சுழலில்' டுபிளசி (27) போல்டானார்.

தோனி நம்பிக்கை

அடுத்து வந்த ரெய்னா, சாவ்லா, ரசல் வீசிய 6, 7ஆவது ஓவரில் தலா 2 பவுண்டரி அடித்தார். குல்தீப் யாதவ் பந்தில் ஒரு சிக்சர் விளாசிய வோட்சன் (36), சுனில் நரைன் 'சுழலில்' சிக்கினார். நிதானமாக ஆடிய ரெய்னா (31), குல்தீப் பந்தில் சரண் டைந்தார். அம்பதி ராயுடு (21) சோபிக்கவில்லை. ஐந்தாவது இடத்தில் களமிறங்கிய அணித் தலைவர் தோனி, ஷிவம் மாவி, ஜோன்சன், குல்தீப் வீசிய பந்துகளை சிக்சருக்கு அனுப்பினார். சாவ்லா 'சுழலில்' ரவிந்திர ஜடேஜா (12) ஆட்டமிழந்தார்.

சென்னை அணி, 20 ஓவர்களில், 5 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் தோனி (43) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் கொல்கத்தா சார்பில் நரைன், சாவ்லா தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

உத்தப்பா ஏமாற்றம்

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய கொல்கத்தா அணிக்கு கிறிஸ் லின், சுனில் நரைன் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. லுங்கிடி வீசிய முதல் ஓவரில் தொடர்ச்சியாக 2 சிக்சர் விளாசிய லின் (12), அதே ஓவரில் ஆட்டமிழந்தார். ஆசிப் வீசிய 2 ஆவது ஓவரின் 4ஆவது பந்தை சிக்சருக்கு அனுப்பிய சுனில் நரைன், அடுத்த 2 பந்தில் ஜடேஜாவின் சொதப்பலால் 'பிடி' வாய்ப்பில் இருந்து தப்பினார். ரொபின் உத்தப்பா (6) ஏமாற்றினார்.



'கில்லி' கில்

அடுத்து வந்த சுப்மன் கில், வோட்சன் வீசிய 6வது ஓவரில, 3 பவுண்டரி விளாசினார். பொறுப்பாக ஆடிய நரைன் (32), ஜடேஜா 'சுழலில்' சிக்கினார். ரிங்கு சிங் (16) நிலைக்கவில்லை. ஆசிப் வீசிய 15வது ஓவரில், 2 சிக்சர் விளாசிய சுப்மன் கில், 32 பந்தில் அரைசதமடித்தார். ஆசிப் பந்தை சிக்சருக்கு அனுப்பிய அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், பிராவோ வீசிய 18வது ஓவரில் 3 பவுண்டரி அடித்து வெற்றியை உறுதி செய்தார். கொல்கத்தா, 17.4 ஓவரில் 4 விக்கெட்டுக்கு. 180 ஓட்., எடுத்து வெற்றி பெற்றது. சுப்மன் கில் (57), தினேஷ் கார்த்திக் (45) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அவுஸ்திரேலிய அணியின் தலைமை பயிற்சியாளராக லாங்கர் நியமனம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஜஸ்டின் லாங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கேப் டவுன் டெஸ்டில் (மார்ச் 22-25) பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் சிக்கினர். பான்கிராப்டிற்கு 9 மாத தடையும், மற்ற இருவருக்கு தலா 12 மாத தடையும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை விதித்தது.

இந்த சர்ச்சை காரணமாக, பயிற்சியாளர் டரன் லேமன் பதவி விலகினார்.

இந்நிலையில், புதிய பயிற்சியாளராக ஜஸ்டின் லாங்கர், (வயது-47), நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த 4 ஆண்டுகளுக்கு இவர் பதவியில் நீடிப்பார்.

முன்னாள் வீரர்

அவுஸ்திரேலிய முன்னாள் வீரரான இவர், 16 ஆண்டுகிரிக்கெட் வாழ்வில்

360 முதல் தர போட்டியில் 28,382 ஓட். குவித்துள்ளார். 105 டெஸ்டில் 7,696 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இவர், மேற்கு அவுஸ்திரேலியா மற்றும் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார்.

சீனியர் அணியை பொறுத்தவரை, இரண்டு தொடர்களுக்கு தற்காலிக பயிற்சியாளராக பணி புரிந்துள்ளார். கடந்த 2009-12 வரை துணை பயிற்சியாளராகவும் இருந்துள்ளார்.

எதிர்பார்ப்பு எப்படி?

இது குறித்து ஜஸ்டின் லாங்கர் கூறுகையில்,

"ஸ்மித், வோர்னர், பான்கிராப்ட் தவறு செய்தனர் என்பதை அறிந்தபோது, மிகவும் வியப்பாக இருந்தது. ஆனால் தவறிலிருந்து மீண்டு வர வேண்டும். இவர்கள் அணிக்கு திரும்புவதை வர வேற்கிறேன்.

அவுஸ்திரேலிய அணி இழந்த மதிப்பை மீண்டும் பெற வேண்டும். உலக கிரிக்கெட் அரங்கில் இது தான் மிகவும் முக்கியம். இதனால், என் மீதான எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கும்," என்றார்.

11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

நேவி சம்பத்தை தீவிரமாக தேடும் பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

11 தமிழர்களைக் கடத்தி சென்று சட்டவிரோதமாக தடுத்து வைத்து கப்பம் பெற்று கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய நேவி சம்பத்தை கைது செய்வதற்காக பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

சந்தன பிரசாத் ஹெட்டியாரச்சி என்றழைக்கப்படும் நேவி சம்பத்தை கைது செய்வதற்காக ஏற்கனவே கோட்டை நீதவான் நீதிமன்றம் திறந்த பிடியாணை பிறப்பித்துள்ளது.

வெல்லம்பிட்டிய - வென்னவத்தை பிரதேசத்தை சேர்ந்த குறித்த நபர் தொடர்பில் தகவல் அறிந்தால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் தொலைபேசி இலக்கங்களான 011 232 0141 / 145 அல்லது 011 242 2176 அழைத்து அறிவிக்குமாறு பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க விசேட வேலைத்திட்டம்

சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் அனைத்து கிராம உத்தியோகத்தர், பிரிவுகளிலும் மூவர் வீதம் தெரிவு செய்து அவர்களுக்கு விசேட பயிற்சி வழங்கும் திட்டமொன்றை முன்னெடுக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கிராம மட்டத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளங்கண்டு, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என அதிகாரசபையின் தலைவர் சட்டத்தரணி எச்.எம். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியில் சிறுவர் பாதுகாப்பு படையணியொன்றை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் மீதான கரிசனை குறைவடையும் போது, அவர்கள் துஷ்பிரயோகத்திற்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகரிப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-7)

வயோதிபப் பெண்ணை மோதிய மோட்டார் சைக்கிள் சாரதி கைது

(கரணவாய்)

வயோதிபப் பெண் ணொருவரை மோதி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிள் சாரதியொருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்தமுதலாம்திகதிமாலை 6.30 மணியளவில் வடமராட்சி வதிரிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மனோகரா அல்வாயைச் சேர்ந்த 74 வயது சிவபாதம் செல்வராணிஎன்ற வயோதிபப் பெண் காயமடைந்தார். வீதியால் நடந்து சென்ற குறித்த பெண்ணை மோதி விட்டுதப்பிச்சென்றவதிரியைச் சேர்ந்த இளைஞர் ஒரு வரை கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். வயோதிபப் பெண் ஆபத்தான நிலையில்யாழ். போதனாவைத்தியசாலையில்சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாத நோய்களின் தாக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்கள் தொகையில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையில், வயது முதிர்ந்தவர்கள் எதிர்கொள்ளும் நோய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பொது வைத்தியசாலையின், வாதநோயியலுக்கும் புனருத்தாபனத்துக்குமான பிரிவின் வைத்தியர், கலீல் கஸிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் சனத்தொகையில் 10 சதவீதத்துக்கும் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்களாக அறிவித்துள்ளது.

45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வாத நோய்களின் தாக்கம் இருக்கும் என வாதநோயியலுக்கும் புனருத்தாபனத்துக்குமான பிரிவின் வைத்தியர், கலீல் கஸிம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டின் சனத்தொகையில் 10 சதவீதத்துக்கும் அதிகமானோர் வயது முதிர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

இந்த தொகை 2030 ஆம் ஆண்டில், 22 சதவீதமாக அதிகரிக்கும். ஆகவே 2030 ஆண்டில் 5 இலட்சத்துக்கும் அதிகமான வயது முதிர்ந்தவர்கள், வாத நோய்களால்பாதிக்கப்படுவார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

ஆசிரியர்களுக்கு முன்சேவைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு கடந்த 2017 ஆம் ஆண்டில் புதிதாக ஆசிரிய சேவை நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களில் உயிரியல், உயிரியல் தொழில் நுட்பம், இரசாயனவியல், பொறியியல் தொழில்நுட்பம், கணிதம், இணைந்த கணிதம், பௌதீகவியல் விஞ்ஞானம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான முன் சேவைப் பயிற்சி எதிர்வரும் 08.05.2018 முதல் 28.05.2018 வரையான 21 நாட்கள் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி வட்டுக்கோட்டையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே குறித்த ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் பங்குகொண்டு தமது சேவை நிரந்தரமாக்கப்படுதலுக்கு தேவையான அடிப்படைத் தகுதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (இ

பாலியல் தொல்லை கொடுத்தவருக்கு இரண்டு வருடங்கள் கடுழியச் சிறை

(கரணவாய்)

பெண் ஒருவரை தள்ளி வீழ்த்தி பாலியல் தொல்லை கொடுத்த நபர் ஒருவருக்கு 24 மாதங்கள் கடுழிய சிறைத் தண்டனை விதித்த நீதிவான் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

கடந்த 2016.10.12 அன்று துன்னாலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதில் எதிரானி குற்றவாளி என வழக்காடி வந்த நிலையில் இதற்கானதீர்ப்புவழங்கப்பட்டது.

இதில் தள்ளி வீழ்த்திகாயம் ஏற்படுத்தியமைக்காக ஆறு மாதங்கள்கடுழியசிறைத்தண்டனையும், 1500 ரூபா தண்டமும் அதை செலுத்த தவறின் மேலும் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனையும் பாலியல் தொல்லை கொடுத்ததற்கான 18 மாதங்கள் கடுழியச் சிறைத் தண்டனையும் 1500 ரூபாதண்டமும் அதைக் கட்டத் தவறின் இரண்டுமாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடும் அதைச் செலுத்தத் தவறின் ஒரு வருட கடுழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார். (இ-60)

கண்ணீர் அஞ்சலி

மத்திய கல்லூரியின் மாணவனாய், நூலகனாய் அதன் வரலாற்றை வடிவமைத்தவனாய் இறுதி மூச்சுவரை கல்லூரியின் காவலனாயிருந்த மத்தியின் மைந்தன்

காசிப்பிள்ளை மாணிக்கவாசகர்

(முன்னாள் பிரதம நூலகர், யாழ். மத்திய கல்லூரி)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருறும் குடும்பத்தினர், கல்லூரி சமூகத்தினர் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

(சி-2485)

இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
கார்த்திகை- ரோகினி

சூரி புத
சுக்
ராகு
செவ் கேது
சனி சந்
குரு

04.05.2018
சித்திரை 21, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சதுர்த்தி முற்பகல் 11.02 மணிவரை
மூலம் முன்னிரவு 10.25 மணிவரை
சுபநேரம் 5.56- 7.26 மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
அக்கினிநாள் ஆரம்பம் வளவன்

மேஷம் மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிறர் உதவி உண்டு.

ரிஷபம் அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும்.

மிதுனம் அல்லல்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், தேக நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள்.

கடகம் ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

சிம்மம் சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

கன்னி பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம்கிடைக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

துலாம் நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள், தொழில் முன்னேற்றகரமாக அமையும்.

விருச்சிகம் தொழில் வளர்ச்சி கூடும் நாள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், அனைத்திலும் வெற்றிபெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

தனுசு எதிர்பாராத காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் தேவை, சவால்களை சமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

மகரம் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

கும்பம் எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசனசுகமுண்டு

வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2018.04.26 ஆம் திகதி எமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என பிரதி ஆணையாளர் வை.பரம்தாமன் அறிவித்துள்ளார்.

வாகன் இலக்கத் தகடுகள் AAB-3752, AAD-3314,AAG-1290,AAL-4044,AAM-2192,AAN-3132,AAO-6517,AAQ-1520,AAQ-8766,AAS-2488,AAT-8035, AAY-4151, AAZ-2424, ABF-3043, ABR-2491, ABR-2669, ABR-2678, ABR-2988, ABR-2998, ABR-3052, ABR-3056, ABR-3221, ABR-3241, ABR-3243, ABR-3285, ABR-3388, ABR-3396, ABR-3403, ABR-3700, ABR-3965, ABR-3973, ABR-3984, ABR-4008, ABR-4011, ABR-4021, ABR-4268, ABR-4308, ABR-4311, ABR-4314, ABR-4356, ABR-4377, ABR-4401, ABR-4537, ABR-4648, ABR-4697, ABR-9495, ABR-9779, ABS-0003, ABS-2003, ABS-2525, ABS-3239, BAA-9079, BAD-7232, BAG-2868,BAL-1925, BAU-5210, BAW-5936, BBL-0755, BBS-1794, BBU-2505, BBW-8076, BCN-6727, BCR-2096, BCW-8754, BDJ-2433, BDL-0411, BEB-9108, BEE-5272, BEG- 9889, BEL-1416, BEL-6958, BEP-5717,BER-2274, BEX-1501, BFS- 4290, BFZ-8190, BGG-8107, BGI-0780, CLL-0251, CAA-3161, CAC-7383, CAE-0967, CAE-1384, CAP-4508, CAV-4181,DAA-0591, DAA-4852, GA-8827, GC-9781,GE-9936, GF-3065, GG-3371, GG-4313,GG-4328,GH-0140, GI-1173,GK-9671,GO-0303,Go-1503,GO-7335, GP-3787, GP-4496,GP-6056,GQ-1105, GQ-2014, GQ-2340,GR-6557, GS-1910,GV-9209, GW-3805, HA-1647, HA-3592,HA-7036,HB-1612,HB-5296, HB-9493, HD-7873, HE-8675, HG-2432,HG-3058, HH-3773,HI-4978, HI-6503,HJ-0916,HK-6135, HN-1004,HM-2179, HO-9305, HQ-6373,HQ-8417, HZ-2877,JA-3502,JA-5243,JB-4787,JC-0107, GC-1379,JC-5129, JE-1889,JE-7018, JF-1814, JG-7459,JH-7297,JI-0675, JI-0746, JP-3044, JP-4079,JV-5953, JV-5962, JV-5967, JV-8578, JW-8166, JX- 1672, JZ-0224, JZ-6553, KA-3333, KP-5434, KP-7088, KC-5039, KE-1668, KE-3390,KE-8196, KJ-6216, KL-2644, KO-1790, KR-1388,KR-2448,KV-3954,LB-5235, LC-8927, LG-4085, LH-5724, LI-7835, LJ- 6213, LJ-9656, MF-6891,MF-7386,MR-1919,MT-6163, MT-7448, NA-7434, NP-4269, NB-7442, ND-0100, ND-8346,PA-7944,PA-8101,PA-9952,PB-4205, PB-7916,PC-0691,PC-2268,PC-9058,PD-3738, PD-5005,PD-7726,PD-9922,PE-4577,PE-4930, PE-6692,PF-0801,PG-0405,PG-2325,PG-2723, PG-5462,PJ-8558,PP-8829,PQ-3341,PR-4335, PS-1773,PU-0735,PV-2988,PW-0424,PX-1442, QA-1559,QA-5618,QA-9487,QC-1765,QC-2496, QC-4344,QC-5613,QC-9314,QD-3446,QD-6521, QE-0450,QE-2891,QF-2625,QG-0019,QG-0828, QG-3770,QG-6291,QG-6464,QG-8815,QH-0585, GI-4812,QJ-1973,QL-6857,QN-7645,QO-0744, QO-7041,QY-7166,QZ-9167,RB-4645,RB-4647, RB-4654,RB-4672,RB-4675,RD-1068,RD-7248, RV-8445,RV-8448,RV-8531,RV-8537,RV-8538, TA-1313,TI-5347,TI-6352, TJ-9398,TY-1951,TY-4709, UD-1111,UN-6664,UN-7831,UO-8679,US-7339, UU-6867,UW-4558,UY-3265,VB-0569,VB-8773, VC-8544,VK-1932,VP-0532,VQ-1179,VS-3920, WH-8125,WS-7188,XD-3462,XF-2971,XH-8103, XP-5501,XX-3215,YK-3456,YN-7703,YQ-1177, YV-4015,YV-7915,STICKER-GS-6616. (இ)

யாழில் 100 ஆலயங்களின் மீள்கட்டுமானப் பணிக்கு உதவும் வேலைத்திட்டம் இராணுவத்தால் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட, வசதியற்ற, வருமானம் குறைந்த இந்து ஆலயங்களில் புனருத்தாரண வேலைகள், குறை நிரப்புப் பணிகள் போன்றவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான மணல், சீமெந்து ஆகியவற்றை வழங்குகின்றவேலைத்திட்டம் ஒன்றை இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளை தலைமையகம் ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் எண்ணக் கருவுக்கு அமைய இந்து ஆலயங்களுக்கு உதவி செய்கின்ற வேலைத் திட்டங்கள் இம்மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முதல்கட்டமாக வசதியற்ற, வருமானம் குறைந்த 100 ஆலயங்களுக்கு பூசைகள், வழிபாடுகள் போன்றவற்றை மேற்கொள்வதற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குகின்ற வேலைத் திட்டம் ஒன்றை கடந்த மாதங்களில் ஆரம்பித்திருந்தனர் என இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்கள் இறைபக்தி நிறைந்தவர்கள். இவர்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த அம்சமாக ஆலய வழிபாடு உள்ளது. இவர்களின் உணர்வு, உணர்ச்சி, உயிர்ப்பு ஆகியவற்றோடு இரண்டறக் கலந்தவையாக ஆலயங்கள் உள்ளன. இந்நிலையிலேயே யாழ்ப்பாண மக்களின் மனங்களை வெல்கின்ற மக்கள் நலன் சார்ந்த ஏராளமான வேலைத் திட்டங்களை இதய சுத்தியுடன் இராணுவத்தின் யாழ்.மாவட்ட கட்டளை தலைமையகம்மேற்கொண்டு வருகின்ற நிலைமையில் இவற்றின் ஒரு பகுதியாகவே இந்து ஆலயங்களுக்கு உதவி செய்கின்ற வேலை திட்டங்களும் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

உதவி தேவைப்படுகின்ற ஆலயங்களைச் சேர்ந்தவர்கள் 070 209 5920 என்கிற கையடக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அவர்களின் கோரிக்கைகளை முன்வைக்க முடியும். நாம் வெறுமனே வாக்குகளாகஇவற்றைநாம்கூறவில்லை. எமது சக்திக்கு உட்பட்ட வகையில் மக்களின் தேவைகளை உடனடியாகவும் விரைவாகவும் செய்து கொடுத்து வருகின்றோம் என்பது யாவரும் அறிந்ததே.

அதேபோல தமிழ் தரப்பினர் அனைவரும் எமது மக்கள் நலன் சார்ந்த வேலை திட்டங்களில் பங்காளிகளாகவும் பங்குதாரர்களாகவும் செயற்பட முன்வர வேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன். இதன்மூலமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நீடித்த அமைதி, நிலையான சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்ட முடியும்என்பது எனது நம்பிக்கையும் விசுவாசமுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

13 வருட உத்தரவாதக் கல்வி 2 ஆம் பரீட்சார்த்த திட்டம் தொழிற்றுறைப் பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட யா/மத்திய கல்லூரி, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 13 வருட உத்தரவாத கல்வி-2ஆம் பரீட்சார்த்த திட்டம் 2018 (க.பொ.த.உத. தொழிற்றுறைப் பிரிவு) ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் 2017ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய வருடங்களிலும் க.பொ.த.சா/த பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் தொழிற்றுறைப் பிரிவில் இணைந்து கற்க முடியும்.

இவர்களுக்கு பாட நிறைவின் போது N.V.Q.-04 சான்றிதழ் வழங்கப்பவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை குறித்த பாடசாலைகளில் பெற்று 10.05.2018 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும் மாணவர்கள் மட்டுமே இத்தொழிற்றுறைப் பிரிவில் இணைத்துக் கொள்ளப் படவுள்ளனர் என யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சினால் இலங்கையின் அனைத்து மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாத்தல் மற்றும் திறன்களை விருத்தி செய்யும் நோக்கிலான சாதாரண தரப் பரீட்சையில் வெற்றி, தோல்வியை பொருட்படுத்தாது உள்வாங்கப்படக் கூடிய புதிய பாடத்துறை இவையாகும். இதன் மூலம் மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு அபிவிருத்தி தொழில்நுட்ப, தொழில் முறை மற்றும் சமூகத் திறன்களின் மேம்பாடு சுய அபிமான மற்றும் அபிவிருத்தி என்பவற்றுடன் வெற்றிகரமான இலங்கைக் குடிமகனாக திகழ்வதற்கு உரிய சந்தர்ப்பத்தை இப்பாடநெறிகள் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

'ஓர் எழுத்து மந்திரம்' கந்தபுராண விரிவுரை

வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் கந்தபுராண விரிவுரை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெற்று வருகிறது. இன்று "ஓர் எழுத்து மந்திரம்" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)

திருவுடையாள் பிரதேச மலருக்கு கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிதெற்கு-மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் பிரதேச மலரான "திருவுடையாள் பிரதேச மலர்- 07" இற்கான கட்டுரைகள் கோரப்படுகின்றன.

இக் கட்டுரைகள் வடமராட்சிப் பிரதேசத்தின் கலை, கலாசார, சமூக, வரலாறு தொல்லியல், பொருளாதாரம், விவசாயம் சார்ந்த விடயங்களாக இருப்பதுடன் கட்டுரைகள் யாவும் A4 தாளில் பாமினி Font இல் 12 அளவில் தட்டச்சு செய்யப்பட்டவன் பிரதியாகவும் மென் பிரதியாகவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக Vadaswds karaveddy@gmail.com ஊடாக அல்லது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் நேரடியாகவோ தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்பட வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப் பெறும் கட்டுரைகள் யாவும் தெரிவுக்குழுவினால் நிராகரிக்கப்படும் என்பதுடன் தெரிவுக்குழுவினால் தரமான கட்டுரைகள் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே "திருவுடையாள் பிரதேச மலர்- 07" பிரசுரிக்கப்படும் எனவும் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவைத் தலைவருமான ஈ.தயாரூபன் தெரிவித்துள்ளார். (இ)

அனுமதிப் பத்திரம் பெறாத வாகனங்களின் பதிவுகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத வாகனங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படவுள்ளதாக வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையர் நாயகத்தின் 2018.03.15 கடிதம் சார்பாக 2017.12.31 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாத வாகனங்கள் பயன்படுத்தாத வாகனங்களாக கருதி அது தொடர்பான ஆவணங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வடமாகாண சபையின் கீழ் 2017.12.31 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 5 வருடகாலம் வாகன வருமானவரிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பான விபரங்களை அனுப்பிவைக்குமாறு வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கோரியுள்ளது. (இ-60)

புலோலி புற்றளை சித்திவிநாயகர் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டியை விழாத் தலைவர் இ.அகிலன் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் முன்பள்ளி ஆசிரியை திருமதி பத்மலோஜினி உரையாற்றுவதையும் சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வொன்றையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு- இளைப்பாறிய செயலாளரும் ஆறுதல் நிறுவன முகாமைப் பணிப்பாளருமான சுந்தரம் டிவகலால் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

வரவேற்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பாசையூர் மக்களின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியத்தின் வழி நிற்கும் தன்யர்களை வரவேற்கும் நிகழ்வு நாளை மறுதினம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் வாகனப் பேரணியாக தந்தை செல்வா சதுக்கத்தில் இருந்து ஆரம்பிப்பதுடன் மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டம் பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இதில் விருந்தினர்களாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவை.சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சி.சிறீதரன், ஈ.சரவணபவன் ஆகியோரும் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (இ-7)

அரச சாரதிகள் சங்க விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் யாழ். மாவட்ட அரச சாரதிகளுக்கான விசேட கலந்துரையாடல் நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்ணையிலுள்ள பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண சங்கத்தின் யாழ்.மாவட்ட அரச சாரதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-9-60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

நம்பிக்கை இழக்க வேண்டாம்.
உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.
கை கொடுக்கும் நண்பர்கள்
யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் (மு.ப. 9.00 - பி.ப. 1.00)
வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு (மு.ப. 9.00 - பி.ப. 1.00)

நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அல்வாய் கிழக்கிலுள்ள நிறுவன மண்டபத்தில் மு.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேசசபை தவிசாளர் தங்கவேலாயுதம் ஜங்கரன், சிறப்பு விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ரஞ்சினி இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

சேவைநலன் பாராட்டு

திருமதி.
ஜெயந்தி தவனேசன்
(SLTS-I)

திருமதி.
ஜெகதீஸ்வரி சேவற்கொடியோன்
(SLTS-I)

எமது பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் ஆரம்பக்கல்வி ஆசிரியை திருமதி.ஜெயந்தி தவனேசன் அவர்களினதும் கணிதபாட ஆசிரியை திருமதி.ஜெகதீஸ்வரி சேவற்கொடியோன் அவர்களினதும் அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டுவதுடன் அவர்கள் ஓய்வுகாலத்தில் சிறப்புடன் வாழவும் வாழ்த்துகின்றோம்.

Congratulations

(3837)

பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையினால் யாழில் 171 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் குழந்தைகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் இணைக்கப்பட்ட மாணவர்களில் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 171 மாணவர்களுக்கு குறைந்தது 5000 ரூபா முதல் கூடியது 50,000 ரூபா வரை புலமைப்பரிசில் கொடுப்பனவும் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி பணிப்பாளர் கே.மகேஸ்வரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வி.செல்வம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (இ-7)

மணிவிழா அழைப்பு
60th
திருமிகு.
ஆறுமுகம் சிவநாதன்
அதிபர் யா/ புற்றளை ம. வி.

07.05.2018 திங்கட்கிழமை
காலை 9.00மணி
S.S.Complex
(கிராமக்கோடு, பருத்தித்துறை)

தலைமை
திரு.வ. செல்வராசா
(ஓய்வு நிலை மாகாணக் கல்வி பணிப்பாளர், வடமாகாணம்)
நிகழ்வுகள்
9.00-9.10 : விழாநாயகன் அழைப்பு
9.10-9.15 : மங்கல விளக்கேற்றல்
9.15-9.30 : மங்கல இசை
9.30-9.35- இறை வணக்கம்
9.35-9.45 : வரவேற்புரை
ஆசியுரைகள்
9.45-9.50 : சிவஸ்ரீ செயபாலசுந்தரக் குருக்கள்
(புற்றளை சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு)
9.50-9.55 : அருட் பணி. ஜோவின் அடிகளார்
(பருத்தித்துறை பங்கு பிரதான கோட்ட முதல்வர்)
9.55-10.05 : நூலமைமையுரை
வாழ்த்துரைகள்
10.05-10.15 : பேராசிரியர் கலாநிதி வ.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
10.15-10.25 : பேராசிரியர் கலாநிதி [illegible] (முன்னாள் துணைவேந்தர் யாழ்பல்கலைக்கழகம்)
10.25-10.35 : பேராசிரியர் பட. நடராசா (ஓய்வுநிலை பேராசிரியர் முன்னைய துணைவேந்தர் யாழ்பல்கலைக்கழகம்)
10.35-10.45- கலாநிதி க. [illegible]
(கௌரவ கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் வடமாகாணம்)
10.45-10.52 : கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம் (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
10.52-10.59: கௌரவ ச. சுகிர்தன் (வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
10.59-11.06: திரு.சி.ரத்தினசிங்கம் (செயலாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம்)
11.06-11.13: வைத்திய கலாநிதி ஆ.தேவேந்திரன் (சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்)
11.13-11.19: திரு. க.உதயகுமார் (மாகாண கல்வி பணிப்பாளர், வடமாகாணம்)
11.19-11.25: திரு.சி.நந்தகுமார் (வலயக் கல்வி பணிப்பாளர், வடமராட்சி)
11.25-11.35: தமிழருவி த.சிவகுமாரன் (தலைவர், வவுனியா மாவட்ட தமிழ்ச்சங்கம்)
11.35-11.40: திரு. ந. சிவலிங்கம் (தலைவர், ஆசிரியர் நலன்புரிச் சங்கம், புற்றளை மகா வித்தியாலயம்)
11.40-11.45: திருமதி. கோகிலா பூபாலசிங்கம் (செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)
11.45-11.50: கவிதை- செ.துஷ்யந்தன்(ஆசிரியர், யா/மணியகாரன் தோட்டம் அ.த.க பாடசாலை)
11.50-11.55 : மலர் வெளியீடு
11.55-12.10: வெளியீட்டுரை : பேராசிரியர் கலாநிதி மா.பாலசுந்தரம்
12.10-12.25: ஏற்புரை
12.25-12.30: நன்றியுரை
12.30-1.00: கௌரவிப்பு நிகழ்வுகள்
01.00: மதிய போசன விருந்துபசாரம்

congratulations

(தி-2481)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
-மணிவிழாக்குழு-

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு
மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 02 செவ் 12 இல்
உயரம்: 5'5
தகைமை/தொழில்: CIMA, BABF வங்கியாளர்
தொ.இ: B/7644

~~பிறப்பு: 1990 இந்து~~
நட்சத்திரம்: ஆயிலியம் செவ் 8 இல்
தகைமை/தொழில்: A/L/ அரசதொழில்
தொ.இ: B/7645

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'6
தகைமை/தொழில்: 7 ஆம் தரம்/ வியாபாரம்
தொ.இ: B/7646

பிறப்பு: 1984 இந்து
~~நட்சத்திரம்: பூரட்டாதி 1 ஆம்பாதம்~~
கி.பா: செவ் 7 இல்
உயரம்:170cm
தகைமை/தொழில்CIMA/முகாமையாளர்
தொ.இ: B/7652

இவர்களுக்கு
மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம் 1ம்பாதம்
கி.பா: 8 செவ் 2 இல்
உயரம்:5'4
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
தொ.இ: G/7711

~~பிறப்பு: 1989 இந்து~~
நட்சத்திரம்: மூலம்
உயரம்: 5'2
தகைமை/தொழில்: HNDA அரசதொழில்
தொ.இ: G/7713

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா:44 செவ் 7 இல்
உயரம்: 5'6
தகைமை/தொழில்:B.A
தொ.இ: G/7715

பிறப்பு: 1986 இந்து
~~நட்சத்திரம்: திருவோணம்~~
கி.பா: செவ் 7 இல்
உயரம்:5'2
தகைமை/தொழில்O/L தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/7716

கல்யாணமாலை
இல. 144, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட கரைச்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத் தலைவர்களான யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் பிரதேச செயலர் ரி. முகுந்தனின் அறிமுக உரையுடன் ஆரம்பமானது.

இக் கூட்டத்திற்கு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் சமுகமளிக்கவில்லை.

நேற்றைய கூட்டத்தில் காணி, கல்வி, வரட்சி உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

காணி விடயம் தொடர்பில் ஆராயப்பட்டபோது, விவேகானந்தாநகர் பகுதியில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணியில் பொலிஸார் என தம்மை அடையாளம் காட்டும் சிலர் இரவு நேரங்களில் புதையல் தோண்டுவதாக பிரதேச மக்களால் குறிப்பிட்டு கூறப்பட்டது. இதன்போது வருகை தந்திருந்த பொலிஸ் அதிகாரியிடம் குறித்த விடயம் தொடர்பில் அங்கஜன் எம்.பி. வினவினார். குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் அகழ்வு தொடர்பில் பிரதேச மக்களால் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் அங்கிருந்து பெறப்பட்ட மாதிரிகளை தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும், எனினும் அவர்களை அடையாளம் காண முடியாது உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் உள்ள ஆடை தொழிற்சாலையில் இளைஞர்,யுவதிகளை 10 மணிநேரத்திற்கு மேல் பணியில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் குறிப் பிடப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்ய தொழிலில் ஈடுபடுபவர்கள் முன்வரவில்லை எனவும் குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் பார்வையிட வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினை தொடர்பில் நீண்ட நேரம் ஆராயப்பட்டது. பொருத்தமான குடிநீர் விநியோகம் மற்றும் நிரந்தர குடிநீர் விநியோகத் திட்டங்களை வரைதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

வீட்டுத்திட்டம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. கிளிநொச்சி நகர் மற்றும் இதுவரை வீட்டுத்திட்டங்கள் கிடைக்காத மக்களுக்கு வீடுகளை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் இதன்போது குறிப்பிடப்பட்டது. பொன்னகர் பகுதியில் வாழும் குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டம் வழங்கல் மற்றும் புள்ளி அடிப்படை தெரிவில் ஒரு அங்கத்தவர் மற்றும் இரண்டு அங்கத்தவர்கள் விலக்களிக்கப்படுவது தொடர்பிலும் கருத்து முன்வைக்கப்பட்டது. இடம்பெயர்ந்து பல அங்கத்தவர்களாக சென்று மீள குடியேறும்போது உயிர்களை பறிகொடுத்த தனி அங்கத்தவர்களாக திரும்பி வந்தவர்கள் தொடர்பில் ஆராயப்பட்டு அவர்களுக்கும் வீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டது.

இவற்றோடு முக்கியமான விடயமாக கிளிநொச்சி நகர சபையை நிறுவுவதற்காக நகரசபை பிரதேசத்திற்குட்பட்ட மக்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது .

கிளிநொச்சி பிரதேசத்தில் 70 வயதிற்கு மேற்பட்டோரின் தொகை வீதம் குறைவாகக் காணப்படுவதனால் வயோதிபர்களுக்கான ஓய்வூதியத் தொகையை அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

சமுர்த்தி கொடுப்பனவை 33 சதவிகிதமாக அதிகரிப்பதற்கு நாடாளுமன்றில் விவாதிப்பதெனவும் இணை தலைமையினால் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் கூட்டத்தில் நிகழ்கால அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதோடு துறைசார் திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-315)

இரணைத்தீவில் அடையாளப்படுத்திய காணிகளை காணிப்பிரிவினர் பார்வை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைதீவு பகுதியிக்கு நேற்றைய தினம் பூநகரிப் பிரதேச செயலக காணிப் பிரிவினர் சென்று பார்வையிட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கடற்படையினரின் உதவியுடன் குறித்த பகுதிக்கு சென்ற குறித்த குழுவினர் ஏற்கனவே தம்மால் நிலஅளவீடு செய்து அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை பார்வையிட்டுள்ளதாக இரணைதீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த பகுதிக்கு நில அளவீட்டு குழு ஒன்று அங்கு சென்று அளவீட்டுப் பணிகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடதக்கது. (2)

குளவிக்கூடு கலைந்தமையை அடுத்து வவு.பரக்கும்.ம.வித்திக்கு விடுமுறை

(பனிக்கன்குளம்)

வவுனியா பரக்கும் மகா வித்தியாலயத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியதை அடுத்து அப்பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டு உடனடியாக மாணவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இது தொடர்பாக வவுனியா அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவித்தல் வழங்கப்பட்டபோதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையினால் நேற்றுக் காலை பாடசாலைக்கு மாணவர்கள் வருகை தந்திருந்த போதும் ஆபத்து நேர வாய்ப்புள்ளதாகையால் பாடசாலை அதிபரினால் மூடப்பட்டதையடுத்து மாணவர்களைப் பெற்றோர்கள் அழைத்துச் சென்றிருந்தனர்.

இதேவேளை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மூவரும் குளவிக் கொட்டுக்கு இலக்காகியமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் வவுனியா விபுலானந்தா கல்லூரி பாடசாலை, நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பாரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்ற நிலையில் இக் குளவிக்கூடுகள் பொது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்க வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் இதனை அழிப்பதற்கு ஏதுவான நடவடிக்கையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. (281-2)

மாங்குளம் இராணுவ முகாம் காணி அளவிடும் பணி மக்களால் தடுத்து நிறுத்தம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் கண்டி - யாழ்ப்பாண வீதி ஓரமாக இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள மக்களது காணிகளை அதிகாரிகள் நில அளவை செய்வதற்காக சென்றவேளை மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் கண்டி-யாழ்ப்பாண வீதியோரமாக இராணுவத்தின் 574 ஆவது படைப்பிரிவு முகாம் அமைந்துள்ளது. குறித்த முகாமானது மக்களது காணிகள் பலவற்றை மக்களின் விருப்பங்களுக்கு மாறாக சுவீகரித்து அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு பல தடவைகள் கோரியும் இந்தக் காணிகள் இராணுவத்தால் விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்றைய தினம் நில அளவை திணைக்கள அதிகாரிகள் குறித்த காணியை அளவிட செல்வதனை அறிந்த மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து இராணுவ முகாம் வாசலில் வைத்து நில அளவீட்டு பணிக்காக சென்றவர்களை திருப்பியனுப்பியுள்ளனர்.

அளவீடு தொடர்பில் காணி உரிமையாளர்கள் எவருக்கும் அறிவிக்கவில்லை எனவும் இரகசியமான முறையில் அளவீடு செய்து இராணுவத்துக்கு வழங்கும் சதித் திட்டமாக இதைப் பார்ப்பதாகவும் எல்லைப்படுத்தல் நடவடிக்கைக்காக காணிகளை அளவிடுவதாயின் உரிமையாளர்களான எங்களையும் அழைத்து காணிகளை அளந்து எமது காணிகளை எம்மிடம் தருமாறும் மக்கள் தெரிவித்தனர்.

மக்களுக்கு அறிவிக்காது காணி உரிமையாளர்களுக்கு தெரியாது இரகசியமாக காணி அளக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறும் அனைத்து காணி உரிமையாளர்களையும் அழைத்து காணி அடையாளப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதாயின் காணிகளை அளந்து எம்மிடம் ஒப்படைக்குமாறும் மக்கள் தெரிவித்ததை அடுத்து நில அளவையாளர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இந்த நில அளவீட்டுக்கு எதிப்புத் தெரிவித்து மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ.பிரேம்காந்த் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச உறுப்பினர்களான மு.முகுந்தகஜன், சத்தியசீலன் உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டு நில அளவீட்டு பணிகளை தடுத்து நிறுத்தியிருந்தனர்.

காணிக்கான ஆவணங்கள் மக்களிடம் இருப்பதாகவும் இராணுவம் அடாத்தாக பிடித்துள்ளதாகவும் இதனை தம்மிடம் மீட்டுத் தர சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனவும் கோருகின்றனர். (2-281)

முல்லை.மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தினர் வீடுகளின் சேத விபரங்களை பார்வையிட்டனர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் 3 மணியளவில் மழையுடன் கூடிய கடும் காற்று வீசியதால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள வீடுகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.காற்றின் கோரத் தாண்டவத்தில் குறித்த பகுதியில் இருந்த சுமார் பத்து வீடுகள் வரை பாதிக்கப்பட்டுள்ளதோடு பயன்தரும் மரங்கள் பலவும் சேதமாகியுள்ளன.

இதனையடுத்து நேற்றுக் காலை முல்லைத் தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரி

வினர் ,முல்லைத்தீவு மாவட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோர் குறித்த பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டதோடு முழுமையாக சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு தறப்பாள்களை வழங்கி வைத்தனர். அத்துடன் சேத விபரங்கள் தொடர்பில் பார்வையிட்டும் கேட்டும் அறிந்து கொண்டனர். (2-281)

மேய்ச்சல் தரவைகளை அமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும்

வடக்கு மாகாணசபை உறுப்பினர் புவனேஸ்வரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் திறந்த வெளி வளர்ப்பு முறைகளை மேற்கொண்டு வரும் கால்நடை பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரவைகளின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதனால் மேய்ச்சல் தரவைகளை அமைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டு 60 வீதமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 35 ஆயிரம் தொடக்கம் 40ஆயிரம் வரையான கால்நடைகள் திறந்தவெளி வளர்ப்பு முறைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பராமரிக்கப்பட்டு வருகின்ற கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளின்றி பயிர்ச்செய்கை காலங்களில் மேய்ச்சல் தரவைகள் இன்றி பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவான நிலமிருக்கின்றது.

மக்கள்ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொண்டு அல்லது மேய்ச்சல் தரவைகளுக்காக பயன்படுத்தப்பட்டு யுத்த காலத்தில் கைவிடப்பட்ட பெருமளவான நிலப்பகுதிகளை வன வளத்திணைக்களம் எல்லையிட்டு அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றது.

கடந்த 2013ஆம் ஆண்டு இந்த மேய்ச்சல் தரவைக்கான நிலங்களையும்ஏனைய நிலங்களையும் விடு விக்குமாறு கோரி பல்வேறு கூட்டங்களில் எடுத்துக் கூறப்பட்டது.

அதைவிட அவற்றை விடு விக்கும் படி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால், அந்த நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. குறிப்பாக, யானை வேலிகளை அமைப்பதற்குக் கூட அனுமதிகள் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

அடைக்கல அன்னை ஆலய அபிஷேகவிழா

(மன்னார்)

மன்னார் விடத்தல் தீவு புனித அடைக்கல அன்னை ஆலய அபிசேக விழாவும், புதிய ஆயர் வரவேற்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியளவில் விடத்தல் தீவு பங்குத்தந்தை தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட் கலாநிதி இம்மானுவல்பெனாண்டோ ஆண்டகை வரவேற்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிள் பவனியாக மறைமாவட்ட ஆயர் விடத்தல் தீவு பங்கில் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட பங்கின் பாதுகாவலியாம் புனித அடைக்கல அன்னை ஆலயம் நோக்கி அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து ஆயரினால் குறித்த ஆலயம் திறந்து வைக்கப்பட்டு அபிசேகம் இடம் பெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.(2-4)

ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை கூட்டி

உள்ளூராட்சி தேர்தல் விடயங்களை ஆராய்வது சாலச்சிறந்ததாகும்

செல்வம் எம்.பி. இரா.சம்பந்தனுக்கு கடிதம்

(மன்னார்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் முடிவுகள் எமக்கு சற்று பின்னடைவை ஏற்படுத்தியமையை நாம் ஏற்றுக் கொண்டு அதற்கான திருத்தங்களையும், தீர்வுகளையும் மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் புதன் கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது நீண்ட காலமாக கூட்டப்படாது இருப்பதனால் அதனை விரைவில் கூட்டி சமகால அரசியல் விடயங்கள் மற்றும் உள்ளூராட்சி தேர்தலின் முன், பின்னரான விடயங்கள் பற்றி ஆராய்வது உசிதமானதாக இருக்கும் என நம்புகின்றேன்.

கடந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் எமக்கு சற்று பின்னடைவை ஏற்படுத்தியமையை நாம்ஏற்றுக்கொண்டு அதற்கான திருத்தங்களையும், தீர்வுகளையும் மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது என கருதுகின்றேன்.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்திலும் கூட்டரசாங்கத்தின் இழுபறி நிலை அல்லது காலம் தாழ்த்தும் போக்கு எம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தி நிற்கின்றது.

இது விடயமாகவும் அரசுக்கு கூடுதலான அழுத்தங்களை பிரயோகப்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மேலும் இவ்வாண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலின் பரபரப்புக்கள் ஆரம்பித்திருப்பதால் தீர்க்கமான முடிவுகளை எடுத்து மக்களின் நம்பிக்கையை மீள கட்டியெழுப்பக் கூடிய வகையில் முன் கூட்டியே ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை தயார்படுத்தலின் அவசியம் எல்லோராலும் உணரப்படுகின்றது.

எனவே இவையனைத்தையும் கருத்தில் கொண்டு எமது கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைந்து நடத்த பொருத்தமான நாளினை ஒழுங்குபடுத்தி தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-4)

சின்னப்பல்லவராயன்கட்டு குள வான்பகுதியை திருத்துவதற்கு 28 மில்லியன் ரூபா தேவை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி சின்னப்பல்லவராயன்கட்டு குளத்தின் வான் பகுதியைத் திருத்துவதற்கு 28 மில்லியன் ரூபா நிதிதேவைப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னபல்லவராயன்கட்டுக் குளத்தின் சில புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், இக்குளத்தினுடைய வான்பகுதி புனரமைக்கப்படாமையினால் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வான் பகுதியைப் புனரமைத்துத்தருமாறு இப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் சின்னப் பல்லவராயன் கட்டுக்குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு மூன்று மில்லியன் ரூபா நிதி கிடைத்திருக்கின்றது. இதில் நீர் விநியோக வாய்க்கால்கள் புனரமைப்புப் பணி முன்னெடுக்கப்படவுள்ளன. இதேவேளை இக் குளத்தின் பல திருத்த வேலைகள் காணப்படுகின்றன.

இதற்கு நூறு மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வான்பகுதியை திருத்துவதற்கு மட்டும் 28 மில்லியன் ரூபா நிதி தேவையாகவுள்ளது என நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2-315)

நிலைமைகளைப் பார்வையிட்டு கலந்துரையாடி பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்குக!

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சியில் மீள்குடியேறியுள்ள 73 வரையான குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

இப்பிரதேசத்தின் நிலைமைகளைப் பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கான மின்சார இணைப்பை வழங்குமாறு நீண்டகாலமாக கோரி வருகின்ற போதும், அதனை வழங்கவில்லை என பிரதேச பொது அமைப்புக்கள் அண்மையில் நடைபெற்று முடிந்த பூநகரி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளன.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட கிராஞ்சிப் பகுதியில் 73 குடும்பங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் தமக்கான மின்சார வசதிகளை வழங்குமாறும் இந்த மக்கள் கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாக கோரி வருவதாகவும் தமக்கான மின்சார இணைப்புக்களைப் பெற்றுத்தருமாறு பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்று முடிந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இதனையடுத்து, அந்தப் பிரதேசத்தில் உள்ள நிலைமைகளைப் பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடி எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலருக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

களவாடப்பட்ட ஆட்டுடன் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது

(பூநகரி)

ஆலங்கேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த மூவர் அங்கிருந்தவர்களை மிரட்டி விட்டு வளர்ப்பு ஆடு ஒன்றை களவாடி தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து பூநகரி பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையை அடுத்து கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வைத்து பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் களவாடப்பட்ட ஆடும் களவுக்குப் பயன்படுத்தப்பட்ட மகேந்திரா ரக வாகனமும் கைப்பற்றப்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் பூநகரி பரந்தன் வீதியில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மகேந்திரா ரக வாகனத்தில் சென்ற மூவர் வீட்டினுள் நுழைந்து அங்கிருந்தவர்களை மிரட்டிய வேளை அவர்கள் கூக்குரலிடவே அயலவர்கள் உதவிக்கு வருவதற்கு முன்பாக ஆடொன்றை பிடித்து வாகனத்தில் ஏற்றி தப்பிச் சென்றுள்ளனர்.

திருட்டுக் கும்பல் தப்பிச் சென்ற பாதை வழியாக அயலவர்கள் சென்றுமாட்டுவண்டியொன்றை வீதிக்கு குறுக்காக நிறுத்திய வேளை மகேந்திரா வாகனத்தல்வண்டியைமோதித் தள்ளிவிட்டு தப்பியோட முயன்ற வேளையில் அயலவர்கள் இருவர் திருடர்களுடன் சண்டையிட்டதில் சிறுகாயங்களுக்குள்ளாகினர்.

இது தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் உரிமையாளரினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

பூநகரி பொலிஸ் குழுவினர் விரைந்து செயற்பட்டதையடுத்து உருத்திரபுரப் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டும் களவாடப்பட்ட ஆடும் களவுக்குப் பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப்பட்டு பூநகரி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டது.

இதன்பின்னர் கைதானவரிடம் மேற்கொண்ட விசாரணையையடுத்து உருத்திரபுரம் பகுதியில்வைத்துமேலும் இருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-84)

வெள்ளிவிழா ஆண்டில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 25ஆவது வருடாந்த ஆய்வு மாநாடு மே மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்புகள் பீடத்தில் இடம்பெறவுள்ளது. 1991ம் ஆண்டு மறைந்த பேராசிரியர் அ. துரைராஜா அவர்களின் தூரநோக்கான சிந்தனையில் வடமாகாணத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினை வளர்ப்பதில் முன்னோடியான நிறுவனமாக விளங்கவேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கமானது தூய விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், சுகாதார விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் எனும் நான்கு பிரிவுகளின் ஊடாக விஞ்ஞான அறிவினையும் சமூகத்திற்கு பயனுள்ள ஆராய்ச்சிகளையும் ஊக்குவிப்பதில் முன்னின்று செயற்படுகின்றது. இச்சங்கத்தின் பிரதான செயற்பாடுகளாக துறைசார்ந்த நிபுணத்துவம் உடைய அறிஞர்களுடைய பேருரைகளினை நிகழ்த்துதல், விஞ்ஞான தொழில்நுட்ப அறிவில் ஏற்பட்டுவரும் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான தகவல்களினை சமூகம் மத்தியில் பரவலடையச் செய்தல், பாடசாலை மாணவர்கள் மத்தியில் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட போட்டிகளை நடத்துதல்,மாதம் தோறும் விஞ்ஞான அறிவு தொடர்பான கட்டுரைகளை பத்திரிகைகளில் பிரசுரித்தல், சஞ்சிகைகளை வெளியிடுதல், வருடாந்த ஆய்வு மகாநாடுகளை நடத்துதல் போன்றன அடங்கும்.

அந்த வகையில் இந்த வருடம் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் தன் வெள்ளிவிழா ஆண்டில் 25ஆம் வருடாந்த ஆய்வு மாநாட்டினை மே மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகள் பீடத்தில் நடத்தவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கொட்வின் ரோஜர் கொன்ஸ்டன்டைன் (Professor in Cardiology and Head of Clinical Medicine, Faculty of Medicine, University of Colombo) கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.15ற்கு ஆரம்பமாகவுள்ள ஆரம்ப அமர்விற்கு திருமதி சாந்தகுமாரி மகேந்திரன் அலோசியஸ் தலைமை தாங்கவுள்ளார். இவ்வமர்வில் பேராசிரியர் கந்தையா பாலசுப்ரமணியம் ஞாபகார்த்த விருது வழங்கப் படவுள்ளதோடு பேராசிரியர் கந்தையா பாலசுப்ரமணியம் ஞாபகார்த்த உரையினை பிரதம விருந்தினர் பேராசிரியர் கொட்வின் ரோஜர் கொன்ஸ்டன்டைன் புதிய சிகிச்சை முறைகளினூடாக நீரழிவு நோயினை கட்டுப் படுத்துதல் (Aiming for Better Control of Diabetes through New Therapeutic Options) எனும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார். தொடர்ந்து 25ஆவது ஆண்டில் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் எனும் ஆவணப்பட வெளியீடும், வெள்ளிவிழா மலர் வெளியீடும், பிரயோக விஞ்ஞானச்சுடர் மற்றும் யாழின் தேடல் சஞ்சிகைகள் வெளியீடும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் செய்திமடல் (News Letter) வெளியீடும் இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10.45ற்கு ஆரம்பமாகவுள்ள இரண்டாவது அமர்வை பேராசிரியர். எஸ். சிறீசற்குணராஜா தலைமை தாங்கி நடத்தவுள்ளதோடு விஞ்ஞான பாடத்திட்டத்தின் ஊடாக வேலைவாய்ப்புத் திறன்களை ஊக்கு வித்தல் (Promoting Employa bility Skills within the Science Curriculum) எனும்தலைப்பில்தலைமை உரையினை கலாநிதி ஜி. சசிகேஷ் மற்றும் கல்வியும் வேலைவாய்ப்பும் (Education and Employment) எனும் தலைப்பில் பேருரையினை கலா நிதி. பி. அபிமன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிற்பகல் 1.30ற்கு ஆரம்பமாகவுள்ள மூன்றாவது அமர்வை கலாநிதி. எஸ். மகேசன் தலைமை தாங்கி நடத்தவுள்ளதோடு செயற்கை நுண்ணறிவு யுகத்தில் நிலைதகு வேலைவாய்ப்பு (Sustainable Employment in the Era of Artificial Intelligence) எனும்தலைப்பில்தலைமை உரையை கலாநிதி ஈ. வை. ஏ. சாள்ஸ் மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு வினைத்திறனான விவசாயத்தினை மேற்கொள்வதற்கு உள்வாங்கப்பட்ட பயிர்ச் செய்கை முறைகள் (Adaptive Packages of Agronomic Practices for Climate Smart Agriculture) எனும் தலைப்பில் பேருரையினை கலாநிதி. திருமதி. எஸ். சிவச்சந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிற்பகல் 3.15ற்கு ஆரம்பமாகவுள்ள நான்காவது அமர்வை வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் தலைமை தாங்கி நடத்தவுள்ளதோடு தரமான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பில் தாதியர் பராமரிப்பின் பிரதிபலிப்பு (Standard of Nursing Care reflects on quality care and safety of points) எனும் தலைப்பில் தலைமை உரையை திருமதி. எல். கமலரூபன் மற்றும் இலங்கையின் வடமாகாணத்தில் முதிய வர்களினை பராமரிக்கும் சமூக அமைப்புக்கள் எதிர்கொள்ளும் வாய்ப்புக்களும் சவால்களும் (Community based Elderly Care in Northern Sri Lanka: Opportunities & Challenges) எனும் தலைப்பில் பேருரையினை கலாநிதி. பீ. ஏ. டீ. கூஞ்ஞே ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாள் 9ஆம் திகதி. புதன்கிழமை காலை 9மணியளவில் ஆரம்பமாகவுள்ள 5ஆவது அமர்வானது தொழில்சார் அபிவிருத்தியினூடாக நிலை பேண் வேலைபெறுமாற்றல் (Career Development For Sustainable Employability) எனும் கருப்பொருளின் கீழ் பேராசிரியர் ரீ. வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் விஞ்ஞான முறையியல் ஆய்வுகளினூடாக தொழில்சார் அபிவிருத்தி (Career Development through Scientific Research) எனும் தலைப்பில் பொறியியலாளர் யோகேஸ்வரன் உரையினை யாற்றவுள்ளதோடு நிலை பேறான தொழில் வாய்ப்புக்கு விஞ்ஞான அறிவினை பிரயோகித்தல் (App lication of science for sustai nable employment) எனும் தலைப்பில் திரு. பாலதாசன் சயந்தன் பேருரை ஆற்றவுள்ளார். அதனைத் தொடர்ந்து இலங்கையில் ஆரோக்கியமான மனித வளங்கள் (Health Human Resource in Sri Lankan Context) எனும் தலைப்பில் கலாநிதி. டி. சில்வா (சுகாதார அமைச்சு) அவர்களும் உரை நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து 6ஆவது அமர்வில் பிற்பகல் 1.15 தொடக்கம் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன.

மூன்றாம் நாள் 10ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30ற்கு ஆரம்பமாகவுள்ள 7ஆவது அமர்வை கலாநிதி S. ராஜ உமேஷ் தலைமை தாங்கி நடத்த வுள்ளதோடு வடமாகாணத்திற் கான இளைஞர் கொள்கை உருவாக்கத்துக்கான தேவை (Need for Policy formation for the Northern Province Youth) எனும்தலைப்பில்தலைமை உரையை கலாநிதி. எஸ். ஜீவசுதன் மற்றும் சுற்றுலாத்துறை யின் விருத்தியினூடாக தொழில் துறையின் எழுச்சி (Career Prosperity in Service Sec tor: Tourism as a Budding Profession) எனும் தலைப்பில் பேருரையினை திரு. கோஷ்வரன்றுஷாங்கன் (Managing Director, Sikaram Academy of Hospitality Management) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக்குழுத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

மேலும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 25ஆவது வருடாந்த ஆய்வு மாநாட்டின் இறுதி அமர்வு பிற்பகல் 2மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பசுமை இரசாயனவியல் (Green Chemistry) பற்றி தலைமை உரையை கலாநிதி. பீ. ஜங்கரன் வழங்கவுள்ளதோடு தொடர்ந்து பாடசாலைமட்ட விஞ்ஞான நிகழ்வின் கீழ் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவிகளான மதுஷா சிரிசேன மற்றும் நிகேதனா கேசவன் ஆகிய இருவரும் நிலை பேண்தகு அபிவிருத்திக்கான விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் எனும் தலைப்பில் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றவுள்ளதோடு பேராசிரியர் கந்தையா குணரட்ணம் ஞாபகார்த்த விருது வழங்கல் நிகழ்வுகளும் இடம்பெறும்.

ந. சிவகரன்
2017/2018 நிர்வாகக் குழு உறுப்பினர்.
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 25 ஆவது வருடாந்த ஆய்வு மாநாடு – ஓர் சிறப்புத் தொகுப்பு

ஆசிரிய விண்ணப்பதாரிகள் உண்ணாவிரதப் போராட்டம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாமைக்கு எதிர்ப் புத் தெரிவித்து விண்ணப் பதாரிகள் ஊவா மாகாண சபையின் முன்னால் நேற்று முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் 505 ஆசிரியர்களுக்கு நியமனங் களை வழங்குவதாக கூறி போட்டிப் பரீட்சை நடை பெற்று ஒரு வருடமாகியும் நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இப் போட்டிப் பரீட்சையில் 3500 பேர் தோற்றியுள்ள போதிலும் 1500 பேர் சித்திய டைந்துள்ளனர்.

இப் போட்டி பரீட்சையில் தவறு இருப்பதாகக் கூறி ஊவா மாகாண சபையின் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் சமந்த வித்தியாரத்ன நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இதனால் ஆசிரிய நியமனங்கள் வழங்குவது இடை நிறுத்தம் செய்யப்பட்டது. குறித்த வழக்கை வாபஸ் பெற்று ஆசிரியர் நியமனங்களை உடன் வழங்கக் கோரியே சாகும் வரை உண் ணாவிரதத்தை விண்ணப்ப தாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

(இ-7)

சிங்கப்பூர் உடன்படிக்கை எட்காவை விட மோசம்!

விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

சிங்கப்பூருடனான வியாபார உடன்படிக்கை இலங்கையின் தேசிய வியாபார நடவடிக்கைகளை முழுமையாக அழிக்கும . இந்தியாவின் எட்காவை விடவும் சிங்கப் பூர் உடன்படிக்கை மோச மானதாக அமையும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச எம்.பி.எச்சரித்துள்ளார்.

நாடு பாரிய நெருக்கடிக்குள் உள்ள நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்கும் 20 ஆம் திருத்தம் அவசியமற்றது எனவும் அவர் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் கட்சித் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடிகளை சந்திக்க வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடிகள், அரசியல் சிக்கல்கள், சர்வதேச அழுத்தங்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் என எம்மை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒருபுறம் யாழ்ப்பாணத்தில் முன்னாள் புலி உறுப்பினர்களின் பெயர்களில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர். மறுபுறம் புராதன அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டும் நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சி கண்டும் வருகின்றது.

இவற்றிற்கு மத்தியில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை நீக்க ஜே.வி.பி .முயற்சித்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் நாட்டினை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும்.

மேலும் இலங்கை- சிங்கப்பூர் வியாபார உடன்படிக்கை ஒன்றை இலங்கை அரசாங்கம் செய்து கொள்ளவுள்ளது. இது சிங்கப்பூர் பொருளாதாரத்தில் வெற்றிகரமான நிலைமைகளை வெளிப்படுத்த முடியும். ஆனால் இலங்கைக்கு இது சாதகமாக அமையாது. சிங்கப்பூரின் உடன்படிக்கை மூலம் நாட்டின் தேசிய உற்பத்தியை வீழ்த்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. தொழிற்சங்கங்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாது, அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாது, அமைச்சரவை அனுமதி இல்லாது இந்த அரசாங்கம் சிங்கப்பூர் அரசாங்கத்துடன் பொருளாதார உடன்படிக்கையினை முன்னெடுத்துள்ளது.

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை செய்துகொள்ள அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தது. எனினும் தொழிற்சங்க அழுத்தம் காரணமாக அவை தடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இப்போது சிங்கப்பூர் அரசுடன் உடன்படிக்கை செய்து அவர்களின் தொழிலாளர்கள் இங்கு வந்து தொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்கின்றனர்.

இதன் மூலம் இந்தியா, சீனா, சிங்கபூர் ஆகிய நாடுகளின் தொழிலாளர்கள் இங்கு வந்து தொழில் செய்யும் வாய்ப்பினை அரசாங்கம் உருவாக்கி கொண்டிருக்கின்றது. இதனால் எமது நாட்டில் தொழிலாளர் அனைவரும் பாதிக்கப்படுகின்றனர். எமது தொழிலாளர்கள் அனைவரும் நெருக்கடியினை சந்திக்கும் நிலைமை உருவாகும்.

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டிய அவசியம் இனி இருக்காது. மாறாக சிங்கப்பூர் உடன்படிக்கை மூலமாக இந்தியாவும் நேரடியாக வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வாய்ப்புகள் அமையும்.

இந்த உடன்படிக்கை மே மாதம் முதலாம் திகதியில் இருந்து செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாது இதனை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. பாராளுமன்றத்தின் அனுமதியினைப் பெற இப்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த உடன்படிக்கை பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற இடமளிக்கக்கூடாது.

இதனால் இலங்கையில் தொழில்வாய்ப்பு முழுமையாக பாதிக்கப்படும். சிங்கப்பூரில் இருந்து இங்கு நேரடியாக வியாபாரம் செய்ய முடியும்.

ஆனால் இலங்கையில் இருந்து அங்கு சென்று தொழில் செய்ய முடியாது என்ற நிபந்தனையும் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஆகவே அரசாங்கம் எமது மக்களை பழிவாங்கவா இவ்வாறு முயற்சித்து வருகின்றது. பிரதமரின் அதிகாரங்களை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம கையில் எடுத்துக் கொண்டு தன்னிச்சையாக தீர்மானங்களை எடுத்து வருகின்றார். அரசாங்கத்தில் பூரண அங்கீகாரம் இல்லாத நாட்டிற்கு சாதகமான வாய்ப்புகள் இல்லாத தீர்மானங்களை எடுத்து இந்த நாட்டினை பாரிய நெருக்கடிக்குள் தள்ளவே ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்து வருகின்றது என வும் விமல் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

பல்கலை.நடவடிக்கைகள் பாதிப்பு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

சைட்டம் பிரச்சினை காரணமாக பல்கலைக்கழக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதற்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும் என உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த பிரச்சினைகளுக்கு வெகு விரைவில் தீர்வொன்றை எடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராக நியமிக்கப்பட்ட அவர் பதவி ஏற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

திருடினால் நல்லது ரஞ்சன் ராமநாயக்க

(கொழும்பு)

திருடினால் நல்லது என தனது மனதில் எண்ணம் உதயமாகின்றது என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூர்த்தி பெறுவோருக்கு கூடுதல் சேவையை வழங்கவும், வறியவர்கள் என்ற போர்வையில் போலியாக இந்த திட்டத்தில் நலன் பெற்றுக் கொண்டவர்கள் குறித்து விசாரணை செய்யவும் முடியும் என கருதுகின்றேன்.

களவு, மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு அதிகம் கிடைக்கின்றது. அவ்வாறானவர்களுக்கே அதிகம் கிடைக்கப் பெறுகின்றது. இதுதான் அடிப்படைத் தகுதி போல் தோன்றுகின்றது.

கடந்த அரசாங்கத்துடன் ஒப்பீடு செய்யும் போது எமது அரசாங்கம் நல்ல விடயங்களை செய்கின்றது. 30 வீதமான திருடர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-7)

சிலர் ஆடையணிந்து கொண்டு கருத்துத் தெரிவிப்பதில்லை

விஜயதாஸ மீது பாலித விமர்சனம்

(கொழும்பு)

ஆடையணிந்து கொண்டல்ல சிலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். காலையில் கூறியதை மாலையாகும் போது மாற்றிக் கொள்கின்றனர் என பிரதியமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியை பொறுப்பேற்பதில்லையென ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

தற்பொழுது அவர் அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளார்.

இது குறித்து தங்களது கருத்து என்னவென ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனக்குக் கிடைத்துள்ள அமைச்சை நானே கேட்டு எடுத்தேன்.

முடியுமானால், செய்வேன். இல்லாது போனால் விஞ்ஞான முறைப்படி கேட்டு விலகிக் கொள்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

சட்டம்,ஒழுங்கு அமைச்சுப்பதவி பொன்சேகாவிடம் போவதைத் தடுத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர்-நவீன்

(கொழும்பு)

இராணுவ அதிகாரி ஒருவரை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்க வேண்டாம் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரே ஜனாதிபதிக்கு கூறியுள்ளார் என்று அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை மாற்றத்தின் போது சட்டம் ஒழுங்கு அமைச்சர் பதவி சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அவருக்கு அந்தப் பதவி வழங்கப்படாதமை ஐ.தே.கவினர் பலருக்கும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

சரத் பொன்சேகாவை சட்டம் ஒழுங்கு அமைச்சராக நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியதாகவும், ஆனால் மைத்திரிபால சிறிசேன அதனை நிராகரித்து விட்டார் என்றும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இந்த நிலையில் இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் நவீன் திஸா நாயக்க, இராணுவ அதிகாரி ஒருவரை இந்தப் பதவிக்கு நியமிக்க வேண்டாம் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் ஜனாதிபதியிடம் கோரியிருந்தார் என்றும் அது தனக்குத் தெரியும் என்றும் அமைச்சர் நவீன் தெரிவித்தார். (இ-7)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	சாவகச்சேரி	கொழும்பு	கிளிநொச்சி	மருதனார் மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	50	50	50	50	60	50
உருளைக்கிழங்கு	80	80	80	72	100	85
பச்சைமிளகாய்	60	60	50	70	100	50
தக்காளி	60	60	40	20	80	40
மரவள்ளிக்கிழங்கு	30	30	50	25	40	45
கோவா	40	50	40	25	80	40
கரட்	100	120	100	80	200	100
பூசணி	40	20	30	20	40	30
புடோல்	80	60	60	30	80	80
வாழைக்காய்	40	40	40	35	60	60
சின்ன வெங்காயம்	120	200	180	180	200	140
பெரிய வெங்காயம்	70	80	70	55	100	60
பாகற்காய்	120	160	80	120	120	120
வெண்டிக்காய்	50	60	80	45	160	60
கருணைக்கிழங்கு	60	100	60	–	100	60
பயற்றங்காய்	80	100	80	70	80	100
லீக்ஸ்	180	250	220	–	240	190
பீற்றூட்	40	50	40	30	60	50
கறிமிளகாய்	220	100	60	40	80	60
முருங்கைக்காய்	200	100	100	70	120	150
போஞ்சி	200	200	200	–	200	200
கத்தரிதம்புள்ள	40	20	–	–	50	50
கீரை-1பிடி	30	20	30	20	30	20
தேசிக்காய்	220	100	200	160	200	180
தேங்காய்ஒன்று	70	80	75	25-60	75	90
இராசவள்ளி	200	200	140	–	120	160
வெங்காயப்பூ	300	–	–	–	–	–
முள்ளங்கி	40	–	60	30	80	80
பொன்னாங்காணி	40	–	40	10	30	30
வல்லாரை	15	–	20	10	20	30
ஈரப்பலா	–	–	–	–	–	–

பாரதம்

காவிரி நீர் விடயத்தில் நிரந்தரத் தீர்வு கிடைக்கும்

நிர்மலா சீதாராமன் உறுதி

(சென்னை)

காவிரி மேலாண்மை வாரிய விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக செயற்பட முடியாது என, மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே மத்திய அமைச்சர் இதனை தெரிவித்தார்.

காவிரி விடயம் தொடர்பில் மாநிலங்களுடன் கலந்தாலோசித்து அதனடிப்படையில் நீதிமன்றின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியுமென தெரிவித்தார்.

குறித்த விடயத்தில் மத்திய அரசு எந்த வேலையும் செய்யாமலிருக்கிறது என எண்ணுவது தவறாகும். மத்திய அரசு எல்லோரோடும் கலந்தாலோசித்தபடியே தான் உள்ளது.

எனவே நிச்சயம் ஒரு சுமுகமான முடிவை மத்திய அரசு முன்வைக்கும். காவிரி விடயத்தில் நிரந்தர தீர்வொன்று கிடைக்குமென நிர்மலா சீதாராமன் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

குட்கா போதைப்பொருள் விவகாரம் தி.மு.க. கண்டனப் போராட்டம்

(சென்னை)

குட்கா விவகாரத்தில் தற்போதைய ஆளும் அரசு ஆதாரங்களை அழிக்க முற்படுவதாகவும் அதை எதிர்த்து போராடுபவர்கள் கைது செய்யப்படுவதை கண்டித்தும், தி.மு.க. சார்பில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தி.மு.க. தொண்டர்கள் பலரையும் பொலிஸார் கைது செய்திருந்ததோடு, அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்திருந்தனர்.

இந்நிலையில் நீதிகோரி வெளிப்படையாக போராடுபவர்கள் கைது செய்யப்படுவதை வன்மையாக கண்டித்த தி.மு.கவினர், நேற்று முன்தினம் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்துள்ளனர். (7)

கர்நாடகத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு அழிவு ஆரம்பம் – பிரகாஷ்ராஜ் ஆரூடம்

(நகரி)

கர்நாடக தேர்தல் முடிவுகள் பா.ஜனதாவுக்கு பெரும் தோல்வியாக அமையும் என்றும் பா.ஜனதாவின் அழிவு இங்கு இருந்துதான் ஆரம்பமாகும் என்றும் நடிகர் பிரகாஷ் ராஜ் தெரிவித்தார்.

கர்நாடக மாநில தேர்தல் வருகிற 12ஆம் திகதி நடைபெறுகிறது. இதையடுத்து அங்கு தேர்தல் பிரசாரம் சூடு பிடித்துள்ளது.

பிரதமர் மோடியும், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இங்கு காங்கிரசுக்கும், பா.ஜனதாவுக்கும் கடும் போட்டி நிலவுகிறது.

நடிகர் பிரகாஷ்ராஜ் பா.ஜனதாவை கடுமையாக விமர்சித்து வருகிறார். தேர்தல் குறித்து ஒரு தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு.

கர்நாடக மாநிலத்தில் பத்திரிகையாளர் கவுரிலங்கேஷ் கொலை செய்யப்பட்ட பிறகு, பாரதிய ஜனதாவின் செல்வாக்கு சரிந்து விட்டது. பா.ஜனதாவுக்கு கடும் எதிர்ப்பு உள்ளது.

2019 தேர்தலுக்கு பிறகு பிரதமர் மோடிக்கு எந்த வேலையும் இருக்காது. அவர் ஓய்வு எடுக்க கர்நாடகத்துக்கு வந்தால் அவரை உட்கார வைத்து கன்னட மொழி கற்றுக்கொடுக்க ஆட்கள் இருக்கிறார்கள்.

அதன் பிறகு கன்னட மொழியில் அவர் நன்றாக பிரசாரம் செய்யலாம். அவர் இங்கு பல கூட்டங்களில் கன்னட மொழியில் பேசியதை கேட்க முடியவில்லை.

நான் எந்த கட்சியையும் சார்ந்தவன் அல்ல. உண்மையை சொல்ல எனக்கு எந்த பயமும் இல்லை. யார் என்ன சொன்னாலும் எனக்கு கவலை இல்லை.

கர்நாடக தேர்தலுக்கு பிறகு சுனாமி வரும் என்கிறார்கள். அந்த சுனாமியால் நாட்டுக்கு ஏதாவது நல்லது கிடைக்குமா? கிடைக்காது.

வருகிற 15ஆம் திகதி வெளியாகும் கர்நாடக தேர்தல் முடிவுகள் பா.ஜனதாவுக்கு பெரும் தோல்வியாக அமையும். பா.ஜனதாவின் அழிவு இங்கு இருந்துதான் ஆரம்பமாகும்.

பாராளுமன்ற தேர்தலில் பா.ஜனதா தோல்வி அடையும். ஆட்சிக்கு வர முடியாது. இவ்வாறு பிரகாஷ்ராஜ் தெரிவித்துள்ளார். (7)

அமெரிக்க இராணுவத் உருவாக்க ஜனாதி

பாதுகாப்புத் தலைமை

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க பாதுப்பிற்காக விண் வெளி படையை உருவாக்க திட்டமிட்டுள்ளார்.

விண்வெளி படையை உருவாக்குவதன் மூலம் பூமியில் சுப்பர் பவர் நாடாக இருக்கும் அமெரிக்கா விண் வெளியிலும் சுப்பர் பவர் நாடாக மாறும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் மனதில் பெரிய திட்டங்களை வைத்துக் கொண்டு இதை உருவாக்கியதாக தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில் அமெரிக்க விமானப்படையில் தற்போது 5 படைகள் இருக்கிறது.

தரைப்படை, விமானப் படை, 2 கடற்படை, ஒரு கடலோரக் காவல்படை ஆகியவை இருக்கிறது. இந்த படைகள் மட்டும் இல்லாமல் இதனுடன் ஆறாவதாக ஸ்பேஸ் போர்ஸ் எனப்படும் விண் வெளி படையை உருவாக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதற்கான திட்டம் எல்லாம் தயார் அனுமதிக்கு மட்டும் காத்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

இப்போது உலக நாடுகள், தனியார் நிறுவனங்கள் விண்வெளி துறையில் சிறந்து விளங்குகிறது. அவர்கள் எதிர்காலத்தில் அமெரிக்காவுடன் பிரச்சினை செய்யலாம். அதேபோல் எங்காவது ஒரு கிரகத்தில் புதிய உயிரினம் கண்டுபிடிக்கப்பட்டு

ரஷ்யா மூன்றாம் உலகப் போரு சிரியாவில் போர் விமானங்களை



(டமாஸ்கஸ்)

சிரியாவில் அமெரிக்காவும், இங்கிலாந்து தாக்குதல் நடத்துவதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னர் ரஷ்யா தனது படைகளுடன் மூன்றாம் உலக போருக்கு தயாரானதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் இரசாயன தாக்குதல் நடத்தியதாக கூறி அங்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டுப்படையினர் தாக்குதல் நடத்தினர்.

இதற்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் தனது கடும் கண்டனங்களை பதிவு செய்தார். இந்நிலையில் இந்த தாக்குதல் நடப்பதற்கு 24 மணி நேரத்துக்கு முன்னால் அதாவது ஏப்ரல் 14ஆம் திகதி ரஷ்யா மூன்றாம் உலகப் போர் தாக்குதலுக்கு தயாரானதாக தெரிய வந்துள்ளது.

இது குறித்த ஆதாரமான செயற்கைக் கோள் புகைப்படத்தை இராணுவ வரலாற்றாசிரியரும், பத்திரிகையாளரு

அப்பலோவில் ஜெயல ஒரே அமைச்சர் நி

டாக்டர் சிவக்குமார் வாக்குமூலம்

(சென்னை)

அப்பலோ மருத்துவமனையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்டிருந்த போது அவரை அருகிலிருந்து பார்த்த ஒரே அமைச்சர் நிலோபர் கபில் என டாக்டர் சிவக்குமார் விசாரணை ஆணையத்தில் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருப்பதாக எழுந்த புகாரை தொடர்ந்தே நீதிபதி ஆறுமுகசாமி தலைமையினான விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் பணியாற்றியவர்கள், சசிகலாவின் உறவினர்கள், ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் உள்ளிட்ட பலதரப்பினரிடமும் பொலிஸ் அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் குடும்ப டாக்டரான டாக்டர் சிவக்குமாரிடமும் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது.

சசிகலாவின் உறவினரான இவர் தான் போயஸ் கார்டனில் அவ்வப்போது ஜெயலலிதாவின் உடல் நிலையை பரிசோதித்து வந்தார்.

அந்த வகையில் அவரிடம் விசாரணை நடத்துவதற்காக ஏற்கனவே சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இதனை ஏற்று நீதிபதி ஆறுமுகசாமி

வெளிநாடு

த்தில் விண்வெளிப்படையை

திபதி டிரம்ப் புதிய திட்டம்

லமையகம் எதிர்ப்பு

அவை நம்மீது போர் தொடுக்க கூட வரலாம். இதை எல்லாம் தடுக்கத்தான் இந்த விண்வெளி படையை உரு

ருக்கு தயார்
ளை குவித்தது

மான பபக்தக்வே வெளியிட்டுள்ளார்.

அந்த புகைப்படத்தில் சிரிய அரசுக்கு சொந்தமான விமானத் தளத்தில் ஆயுதங்கள் ஏந்திய அதிகளவிலான ரஷ்யாவின் இராணுவ விமானங்கள் நிற்கிறது.

இதில் 28 போர் விமானங்களும் அடக்கமாகும். இந்தப் புகைப்படங்களானது லட்டகியா நகரில் உள்ள விமான தளத்தில் எடுக்கப்பட்டுள்ளது. Sukhoi Su-30,Su-24M2,Su-25SM3 போன்ற சக்தி வாய்ந்த ரஷ்யாவின் போர் விமானங்கள் அங்கு நின்றுள்ளன. பெரியளவிலான மோதலுக்காகவே இதை ரஷ்ய ஜனாதிபதி புடின் தயாராக வைத்திருந்ததாக பபக்தக்வே தெரிவித்துள்ளார். (7)

வாக்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மற்ற படைகளுக்கு மிகவும் பயிற்சி அளித்து ஆட்களை எடுப்பது போலவே இதற்கும் ஆட்களை எடுக்க இருக்கிறார்கள்.

ஆனால் இவர்கள், சாதாரண பயிற்சிகளை பெறாமல் புதிய பயிற்சிகளை பெறுவார்கள். இவர்களுக்காக புதிய ஆயுதங்கள் உருவாக்க வேண்டும். புதிய தொழில்நுட்பம் மூலம் இந்த மொத்த படையும் வடிவமைக்கப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகமான "பென்டகன்" இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இப்போதைக்கு ஸ்பேஸ் ஃபோர்ஸ் உருவாக்கும் எண்ணமெல்லாம் இல்லை என்று கூறியுள்ளது. அதன்படி பூமியில் இருக்கும் ஐந்து படைகளிலும் தன்னிறைவு பெற்று, போர் பயம் சென்ற பின் ஆகாய படை குறித்து யோசிக்கலாம் என்று கூறியுள்ளது. அதேபோல் செனட் சபையும் இதற்கு ஒத்துழைப்பு அளிக்காது என்று கூறப்படுகிறது. (7)

அமெரிக்க தேர்தலில் ரஷ்யா தலையீடு விசாரணை நடத்த ட்ரம்புக்கு சம்மன்

(வோஷிங்டன்)

அமெரிக்க தேர்தலில் ரஷ்ய தலையீடு விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்புக்கு சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரணை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை தோற்கடித்து, குடியரசு கட்சி வேட்பாளராக களம் இறங்கிய டொனால்ட் ட்ரம்பை வெற்றி பெறச் செய்வதற்கு ரஷ்யா நேரடியாக தலையிட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்து மறுத்து வருகிறார். ரஷ்யாவும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற குழு ஒரு விசாரணை நடத்துகிறது.

அதே நேரத்தில் ராபர்ட் முல்லர் தலைமையிலான சிறப்பு குழுவின் விசாரணையும் நடத்தப்படுகிறது.

இந்த குழு, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு சம்மன் அனுப்பி வரவழைத்து விசாரணை நடத்த உள்ளதாக தகவல்கள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளன. இதை ட்ரம்பின் முன்னாள் சட்டத்தரணி ஜான் தாவ்த் உறுதி செய்து உள்ளார். இந்த விசாரணை தொடர்பாக முல்லர் குழுவினருக்கும், ட்ரம்ப் சட்டத்தரணிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்துள்ளது. ட்ரம்பிடம் விசாரணையின் போது கேட்பதற்காக கேள்விகள் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பதவியில் அமர்ந்து கொண்டு, ட்ரம்ப் பிரமாண வாக்கு மூலம் அளித்து, விசாரணை குழுவினரின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய தர்ம சங்கடமான சூழல் உருவாகியுள்ளது. (7)

ராஜஸ்தானில் புழுதிப்புயலால் 74 பேர் பரிதாபமாகப் பலி!
மின்சாரம் துண்டிப்பு

(ராஜஸ்தான்)

வட இந்தியாவின் ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசத்தில் வீசிய புழுதி புயலில் சிக்கி 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வீசிய இந்தப் புயலில் மரங்கள் வேரோடு சாய்ந்ததோடு, வீடுகள் மற்றும் கட்டடங்களும் பாரிய சேதத்துக்கு உள்ளாகியுள்ளன.

போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதோடு, பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இரவு வேளையில் வீசிய இந்தப் புயலில் உறங்கிக் கொண்டிருந்தவர்களே அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ராஜஸ்தான் முதல்வர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நான்கு இலட்சம் ரூபாய் (இந்திய ரூபாய்) நட்டஈடு வழங்கப்படுமென இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. (7)

உலகில் காற்று மாசு அதிகம் உள்ள 20 நகரங்களில் 14 இந்தியாவில்
உலக சுகாதார அமைப்பு தகவல்

(டில்லி)

உலகில் காற்றுமாசு அதிகம் கொண்ட 20 நகரங்கள் பட்டியலை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

உலக அளவில் காற்று மாசு பாதிப்பு அதிகம் உள்ள 20 நகரங்களின் பட்டியலை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் 14 இந்திய நகரங்கள் இடம் பெற்று இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக சுகாதார அமைப்பான (WHO) உலக அளவில் காற்றுமாசு அதிகம் பதிவாகும் நகரங்களை கடந்த 2016ஆம் ஆண்டு முதல் கண்காணித்து வருகிறது. இதில் இந்தியாவில் லக்னோ, பரிதாபாத், வாரணாசி, கயா, பாட்னா, டில்லி, ஆக்ரா, முசாபர்பூர், ஸ்ரீநகர், குர்கான், ஜோத்பூர், பாட்டியாலா, உள்ளிட்ட 14 பெரிய நகரங்கள் காற்றுமாசால் அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

மேற்கூறிய நகரங்களில் காற்றில் உள்ள மாசு பி.எ 2.5 என்ற அளவில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில், குவைத்தில் உள்ள அலி சுபா அல்-சலீம் மற்றும் சீனா, மங்கோலியா ஆகிய நாடுகளில் உள்ள சில நகரங்களும் இடம் பெற்றுள்ளன.

அதேபோல், உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள தரவுகளின் படி, உலகில் வசிக்கும் 10 பேரில் 9 பேர் அதிக அளவு மாசு கொண்ட காற்றை சுவாசிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பி.எம் 2.5இல் சல்பேட், நைட்ரேட், பிளாக் கார்பன் ஆகியவை அடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை மனித உடலுக்கு பெரும் தீங்கை ஏற்படுத்தக் கூடியதாகும். (7)

லலிதாவை பார்த்த
லோபர் கபில்தான்

முன்பு டாக்டர் சிவக்குமார் ஆஜராகி விளக்கம் அளித்தார்.

இதற்கிடையே, மீண்டும் அவரிடம் விசாரணை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதன்படி 2ஆவது முறையாக டாக்டர் சிவக்குமாருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான விசாரணை கமிஷன் முன்பு நேற்று டாக்டர் சிவக்குமார் மீண்டும் ஆஜரானார்.

சேப்பாக்கத்தில் உள்ள விசாரணை ஆணையத்தில் ஆஜரான அவரிடம் நீதிபதி ஆறுமுகசாமி விசாரணை நடத்தினார்.

விசாரணையின் போது, ஜெயலலிதாவுடன் சசிகலா மட்டுமே தினந்தோறும் மருத்துவமனையில் இருந்தார். மருத்துவமனையில் இருந்த போது அப்போதைய ஆளுநர் வித்யாசாகர் ராவ் கண்ணாடி வழியாகவே பார்த்தார், ஆளுநரை ஜெயலலிதா பார்க்கவில்லை.

அமைச்சர் நிலோபர் கபில் மட்டுமே ஜெயலலிதாவை மிக நெருக்கமாக பார்த்துள்ளார்.

காவிரி விவகாரம் தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டார் ஜெயலலிதா என விசாரணை ஆணையத்தில் மருத்துவர் சிவக்குமார் வாக்கு மூலம் அளித்தார். (7)

சீனாவில் வித்தியாசமான முறையில் கொண்டாடப்பட்ட தொழிலாளர் தினம்

(பீஜிங்)

சீனாவின் ஷாங்ஸி மாகாணத்தின் தலைநகரான சியான் பகுதியில் அற்புதமான, சுவாரஸ்யமான, வண்ணமயமான நிகழ்வொன்றை ஏற்பாடு செய்து தொழிலாளர் தினக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

வண்ணமயமான விளக்குகள் மின்ன சுமார் ஆயிரத்து 347 ஆளில்லா விமானங்கள், பண்டைய நகரத்தின் மேலே வானில் பறக்கவிடப்பட்டு தொழிலாளர்தினம் வித்தியாசமான முறையில் கொண்டாடப்பட்டது.

இதேவேளை, மே தினத்தின் மகத்துவத்தையும், நகரின் வரலாற்று பெருமைகளையும் வெளிப்படுத்தும் வகையில் ஆளில்லா விமானங்கள் வானில் வரிசைப்படுத்தப்பட்டு ஆளில்லா விமானங்களின் சாகச நிகழ்வும் அரங்கேற்றப்பட்டது. (7)

அமைச்சரவை மறுசீரமைப்பு நடவடிக்கையால் அனைவரது பாராட்டையும் பெறமுடியவில்லை

கடந்த பல தசாப்தங்களாகவே இந்நிலை நீடிப்பதாக ஜனாதிபதி மைத்திரி விரக்தியுடன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களாக நியமனம் பெற்ற உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். எமது தாய் நாட்டிற்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கான பலமும் சக்தியும் அதிர்ஷ்டமும் உங்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும். அத்துடன் பிரதமரும் நானும் உங்களுக்கு தேவையான சகல உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவோம் என்பதையும் இங்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அமைச்சரவை நியமனம், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் நியமனம் என்பவை தொடர்பில் கடந்த பல தசாப்த காலமாகவே எந்தவொரு அரச தலைவருக்கும் நூறு சதவீதமாக அனைவரது பாராட்டையும் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்களை நீங்கள் உரியவாறு நிறைவேற்றுவீர்கள் என நான் நம்புகின்றேன். உரிய வர்த்தமானியின் விடயப்பரப்பில் உள்ள டக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் மட்டுமன்றி எந்தவொரு இராஜாங்க அமைச்சரும் பிரதி அமைச்சரும் தமது விடயப் பரப்பிற்கு மேலதிகமாகவும் பல சேவைகளை நிறைவேற்ற முடியும். தத்தமது ஆற்றல், திறமை, அறிவு என்பவற்றிற்கு ஏற்ப அனைவரும் தமது கடமைகளை சிறந்தவாறு நிறைவேற்ற முடியும். ஆகையினால் தமது துறையின் எல்லைகள் தொடர்பாக சிந்திப்பதை விடுத்து, தமது விடயப் பரப்பிற்கு உட்பட்டும் அதற்கு அப்பாலும் எவ்வாறு கடமைகளை நிறைவேற்றலாம் என்பது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

தற்போது இந்த வருடத்திலும் 4 மாதங்கள் கடந்து விட்டன. அத்துடன் தாமதமடைந்துள்ள செயற்பாடுகளைப் போலவே நிறைவேற்ற வேண்டிய ஏனைய பணிகளையும் வருடாந்த அபிவிருத்தி திட்டத்தினுள் உள்வாங்கி குறித்தவொரு இலக்குடன் வினைத்திறனான முறையில் செயற்படுவதற்கான ஆற்றல், தேவை மற்றும் புரிந்துணர்வு ஆகியன எம் அனைவருக்கும் காணப்படுகின்றது. எனவே நாம் அரசாங்கம் என்ற வகையில் எமது நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தற்போதுள்ள பொருளாதார நிலைமைகள் மற்றும் அரசியல் நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காக விரைவாகவும் வினைத்திறனுடனும் ஒன்றிணைய வேண்டியது அவசியமாகும்.

அமைச்சரவை, அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நிறைவேற்றப் போகும் பணிகள் தொடர்பில் நாட்டு மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

அரசாங்கத்திற்கு எதிராக தற்போது எழுந்துள்ள விமர்சனங்களுக்கு மத்தியில் விஞ்ஞான ரீதியில் அமைச்சரவை வகைப்படுத்தப்படும் எனக் கூறப்பட்ட போதிலும் தற்போது அவ்வாறு இடம் பெறவில்லையே என்று அதிக விமர்சனங்கள் காணப்படுகின்றன. நான் அந்தக் குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்ள மாட்டேன். இந்த அமைச்சரவையினை புதிதாகத் திட்டமிடுகையில் பிரதமரும் நானும் கலந்துரையாடி பல்வேறு தவறுகளை நிவர்த்தி செய்தோம். அதேபோல் அமைச்சுக்களின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணிகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிடும் போதும் இந்த விஞ்ஞான ரீதியான பகுப்பு தெளிவாக கருத்திற் கொள்ளப்படும் என நான் தெரிவிக்க விரும்புகின்றேன். அது தொடர்பில் எவரும் கவலை கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் நாட்டு மக்கள் அனைவருமே நாம் தெரிவித்த விடயங்களை சரிவர நிறைவேற்றுவோமா என எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நான் அறிவேன். இதன் காரணமாகவே பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் செயற்பட்டு வந்த பல அமைச்சுக்களில் தற்போது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்ததாக நிறுவன ரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்களை பிரதமரும் நானும் தெளிவாகக் கலந்துரையாடி, விஞ்ஞான ரீதியில் நிறுவனங்களை வகைப்படுத்தி உரிய வர்த்தமானியை வெளியிட எதிர்பார்க்கின்றோம். ஆகையினால் எம் அனைவருக்கும் இவ்விடயத்தில் பாரிய பொறுப்பு காணப்படுகின்றது. எமது செயற்பாடுகள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என மக்கள் எம்மை அவதானித்துக் கொண்டிருக்கின்றார்கள். எதிர்க்கட்சியினர் எத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்திய போதிலும் நாம் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட்டு, எமது அரசாங்கத்தை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல வேண்டும். அதன்மூலமாக எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி இலக்குகளுடன் சிறந்த பொருளாதாரத்தையும் சிறந்த சமூக சூழலையும் ஏற்படுத்தக்கூடிய ஜனநாயக அரசியல் சமூகத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நட்புடன், ஒருவருக்கொருவர் உதவி, ஒத்தாசைகளை வழங்கி உண்மையாக செயற்படுவோம் என்ற கௌரவமான வேண்டுகோளினை உங்கள் முன் வைத்து விடை பெறுகின்றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (இ-7)

கீத் நொயர் கடத்தல்-பொன்சேகாவிடம் மீண்டும் விசாரணை நடத்த உத்தரவு

(கொழும்பு)

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் வாக்குமூலத்தை பதிவு செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் கல்கிஸை நீதிமன்றத்தில் நீதவான் லோசன அபேவிக்கிரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் சட்டவாளர்கள், போர்க் காலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா மீதே பிரதானமாக குற்றம் சாட்டப்பட்டது என்றும் எனவே அவரும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

அப்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சரத் பொன்சேகாவிடம் ஏற்கனவே வாக்குமூலம் பெறப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவித்தனர்.

எனினும், சரத் பொன்சேகா முறைப்படி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் சட்டவாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, சரத் பொன்சேகாவிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்ட நீதவான், தேவைப்பட்டால் அடுத்த விசாரணையின் போது, அதனை சுருக்கமாக வெளிப்படுத்த தயார் நிலையில் இருக்குமாறும் உத்தரவிட்டார்.

அதேவேளை இந்த வழக்கில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவத்தின் முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

பஹ்ரய்ன் பிரதிப் பிரதமரை சந்தித்த நாமல்



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பஹ்ரய்ன் பிரதிப் பிரதமர் காலிட் பின் அப்துல்லாஹ் அல் காலிபாவை, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

அவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தை மிகவும் மகிழ்ச்சியாக அனுபவிப்பார் எனத் தாம் நம்புவதாகவும் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து அவர் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

இன்று ஒரு தகவல்

எல்லாம் நாமாக நினைத்துக் கொள்வதுதான்

காவல்துறை ஆய்வாளர் ஒருவருடன் வேறு ஒருவர் ஒரு முச்சந்தியில் நின்று பெருமையுடன் பேசிக் கொண்டிருப்பார்.

இவர் அப்படிப் பெருமைப்படக் காரணம் என்ன தெரியுமா? அந்த ஆய்வாளர் இவருக்கு நெருங்கிய நண்பராம்.

ஆனால் இதில் பரிதாபம் என்னவென்றால் இவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டே போகிற பலரும் இந்த மனிதர் ஏதோ தவறு செய்துவிட்டு அந்த இன்ஸ்பெக்டரிடம் செமத்தியாக மாட்டிக் கொண்டார் போலிருக்கிறது? என்று பரிதாபப்பட்டுக் கொண்டே போவதுதான்.

ஒரு நேர் எதிரான காட்சி, ஒருவன் தவறு செய்துவிட்டு இதே ஆய்வாளரிடம் சிக்கிக் கொண்டுவிட்டான். ஆனால் பார்க்கிறவர்கள், இவர் அவருக்கு நண்பர் போலிருக்கிறது! என்று எண்ணிக் கொள்வார்கள்.

ஒருவர் அடிக்கடி வெளிநாடு போவார். அவர் வட்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் அவரைப் பாராத்துப் பொறாமைப் படுவார்கள். அவரிடம் நான் கேட்டேன். அடிக்கடி வெளிநாடு போகிறீர்களே, சிரமமாக இல்லையா?

ஆமாம் லேனா. என்ன வொழப்பு இது? நிம்மதியா இருந்தமா, தொழில் செஞ்சமான்னு இல்லாம சரியான தூக்கம் இல்லை. சாப்பாடு சரியில்லை. உடம்புக்கு இதெல்லாம் சுத்தமா ஒத்துக்கலை என்றார். இது எப்படி இருக்கிறது?

நாம் பார்க்கிற கோணத்தில் மட்டும் இந்த உலகம் பார்ப்பதில்லை என்பதற்காக இந்த உதாரணங்கள்.

ஒருமுறை ஒரு நிகழ்ச்சிக்குப் போன போது என் சட்டையின் கொலர் கிழித்து இருந்ததைக் கவனித்தேன். பாதி வழி போய்விட்டதால் மாற்ற முடியவில்லை. அதற்கு நேரமும் இல்லை. நிகழ்ச்சி முழுக்க ஒரு மாதிரியாகவும் என்னவோ போலும் இருந்தது எனக்கு. எல்லோரும் என் சட்டையின் கொலரையே பார்ப்பது போன்ற உணர்வு எனக்கு.

என் நண்பர் நான் ஒருவித காம்ப்பிளக்ஸில் சிக்கிக் கொண்டதைக் கவனித்துவிட்டு "என்ன விடயம்?" என்றார். சொன்னேன். கொலர் கிழிந்திருக்கிறதா? பார்க்கத் தெரியவில்லையே! நீங்கள் சொன்ன பிறகுதான் கவனித்தேன் என்று ஒரே போடாகப் போட்டார்.

நாம் படும் அவமானங்களையும் நம் சிறுமைகளையும் இந்த உலகம் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது என்றெல்லாம் நாமாகத்தான் நினைத்துக் கொள்கிறோம். இதற்காகச் சிறுத்துப் போகிறவர்கள் உண்டு. இவ்வளவு ஏன்? தற்கொலை செய்யுமளவிற்குக் கூட சிலபேர் போய்விடுவார்கள்.

ஆனால் இந்த உலகத்திற்கு நம் விடயத்தைவிடக் கவலைப்பட எவ்வளவோ விடயங்கள் இருக்கின்றன!

லேனா தமிழ்வாணன்

தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்

(கொழும்பு)

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் III ஆம் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன் பொருட்டு பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும் என்பதோடு, சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பதவிக்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பது கட்டாயமாகும். மேலதிக விபரங்களுக்கு 2018.04.27 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்க்கவும்.

ஆட்சேர்ப்பிற்கான தகைமைகள், இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும், விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையோராக இருத்தல் வேண்டும், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 35 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள் (அ) (I) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களுக்கு திற்மைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். மற்றும்

(II) கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்திலேனும் (பொது அறிவுப் பரீட்சையை விடுத்து) சித்தியடைந்திருத்தல் மற்றும் (ஆ) (I) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டாம் மொழியாக மற்றைய அரசக ரும மொழியில் (சிங்களம்/ தமிழ்) சாதாரண சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியைப் பெற்றிருத்தல்.

அல்லது (II) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 6 மாதத்திற்குக் குறையாத மற்றைய அரசகரும மொழிக்கான (சிங்களம்/தமிழ்) சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு : விண்ணப்பதாரிகள் மேற்குறித்த கல்வித் தகைமைகளுள் (அ) வின் கீழான தகைமைகள் அனைத்தையும் மற்றும் (ஆ) வின் கீழான தகைமைகளுள் ஒன்றினையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறித்த பரீட்சை தொடர்பாக 27.04.2018 ஆம் திகதிக்குரிய வர்த்தமானியில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில், 6.1 விடயத்தின் கீழ் (ஆ) (I) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் இச் செய்திப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலானது 11.05.2018 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படும்.

2017.03.31ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப இந்தப் பதவிக்கான குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை முன்வைத்துள்ள விண்ணப்பதாரிகள் முன்பு வழங்கப்பட்டிருந்த கல்வித்தகைமைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் மட்டும் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் மீண்டும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணங்கள் செலுத்தாது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வைத்தல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்கான கடமைகளை ஆற்றுவதற்குமான போதிய உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் இரண்டாம் மொழித்திறன் வினாத்தாளுக்கு 50 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் மற்றும் பொது உளச்சார்பு வினாத்தாளுக்கு 40 புள்ளிகளுக்கும் அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் அனைத்து விண்ணப்பதாரிகளையும் பேச்சு மற்றும் செவிமடுத்தல் திறன் பரீட்சைக்கு உட்படுத்தி அப் பரீட்சையில் 50 புள்ளிகளுக்கு அதிகமாகப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகளுள் முன்னுரிமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கானோரை பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றச் செய்து, அடிப்படைத் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டு, பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஒழுங்கில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள், இப் பதவி நிரந்தரமானது என்பதுடன் ஓய்வூதியம் குறித்து அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

சம்பள அளவுத் திட்டம், (பொ.நி. சுற்றறிக்கை 03/2016 பிரகாரம்)MN 1-2016 27140 - 10 x 300 -11 x 350 - 10 x 495- 10 x 660 -45540

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை, 2018.04.27 ஆம் திகதிய வர்த்தமானியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு ஏற்ப தயாரித்து, பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2018.05.25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, இல.40, புத்கமுவ வீதி, ராஜகிரிய" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் என தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளர்,எம்.வை.எஸ். தேஷப்பிரிய அறிவித்துள்ளார். (இ-9)

வரிச்சட்டத்திற்கு எதிராக வீதியில் இறங்குவோம்

மகிந்த எச்சரிக்கை

(கொழும்பு)

வரிச் சட்டத்திற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அமைச்சரவை மாற்றமானது சீட்டுக் கட்டில் சீட்டுக்களை கலைப்பது போன்றதேயாகும்.

இதனால் அரசாங்கம் தொடர்ந்தும் மக்களை விட்டு விலகிச் செல்கின்றது.

அரசாங்கத்தினால் மக்கள் துயரங்களை அனுபவிக்கின்றார்கள். அரசாங்கம் செய்யும் காரியங்கள் பற்றி அரசாங்கத்திற்கு தெரியவில்லை.

பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் என்ன நடக்கும் என்பது பற்றி அரசாங்கத்திற்கு தெரியும்.

நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து செல்லும் அரசாங்கத்தினால் தாங்கள் செய்தோம் என்று கூறுவதற்கு எதுவுமில்லை.

வரிச் சட்டத்திற்கு எதிராக நாம் வீதியில் இறங்கும் போது அரசாங்கத்திற்கு கண்களில் நட்சத்திரங்கள் தென்படும். மக்கள் இப்போது எம்முடன் இருக்கின்றார்கள்.

கடந்த ஆண்டு மே தினக் கூட்டத்தின் போது காலிமுகத்திடலில் அணி திரண்ட மக்களை விடவும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் எதிர்வரும் 7ஆம் திகதி அணி திரள்வார்கள் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

மலையகத்தில் அதிசயம் படையெடுக்கும் மக்கள்

(திம்புள்ள)

திம்புள்ள - பத்தனை குயின்ஸ்பெரி தோட்டத்தில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் ஒரே வாழைக் குலையில் மூன்று வாழைப் பூக்கள் பூத்துள்ளன.

இப்பிரதேசத்தில் முதல் முதலாக இவ்வாறான ஒரு அதிசயம் நடந்துள்ளது.

பத்தனை குயின்ஸ்பெரி கீழ்ப்பிரிவு தோட்டத்தில் கே.எல்.சிரியாவதி என்பவரின் வீட்டுத்தோட்டத்திலேயே இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

10 - 12 அடி உயரத்திலான இந்த வாழை மரத்தில் வாழைச்சீப்புடன் மூன்று வாழைப்பூ வளர்வது சிறப்பம்சம். இதனை இப்பிரதேசத்திலுள்ள பெருந்திரளான மக்கள் பார்வையிட்டு செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

நான்கு மாதத்துக்குள் 17000 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

இந்த வருடத்தின் ஏப்ரல் மாதம் வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் 17,028 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் 7 ஆயிரத்து 173 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 4 ஆயிரத்து 395 டெங்கு நோயாளர்களும், மார்ச் மாதம் 3 ஆயிரத்து 303 டெங்கு நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 2 ஆயிரத்து 152 டெங்கு டெங்கு நோயாளர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் போது ஏப்ரல் மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30.9% டெங்கு நோயாளர்கள் மேல்மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர்.

நுளம்பு பரவக்கூடிய இடங்களை சுற்றாடலில் இருந்து அப்புறப்படுத்துவதன் அவசியம் மற்றும் காய்ச்சல் ஏற்பட்டால் உடனேயே எடுக்க வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக மக்களை தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை இது எடுத்துக் காட்டுவதாக தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-7)

12 ஆயிரம் பசுக்களை இறக்குமதி செய்து

பால் உற்பத்தித் தொழிலை மேம்படுத்த வணிக பண்ணை

(கொழும்பு)

பால் உற்பத்திக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கிலான வணிகபண்ணை தொழில் முயற்சி அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்காக கடந்த ஆண்டு 5000 கறவை பசுக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஆறு கட்டங்களின் கீழ் மேலும் 12 ஆயிரம் பசுக்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கறவை பசுவும் இரண்டு இலட்சம் ரூபாய் என்ற சலுகை விலையில் தருவிக்கப்படும். பண்ணை விவசாயத்தில் ஆர்வம் காட்டும் முதலீட்டாளர்கள் கறவை பசுக்களை இறக்குமதி செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு இரு யச்சை அனகொண்டாக்கள்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய மிருகக்காட்சிச்சாலையிலிருந்து இந்தியாவின் மைசூர் சமராஜேந்திர விலங்கியல் பூங்காவிற்கு இரு பச்சை அனகொண்டாக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஊர்வனவற்றின் சுகாதார நிலைமைகள் நல்ல முறையில் உள்ளதாகவும், அவைகள் விலங்கியல் பூங்காவில் தனிமைப்படுத்தப்பட்ட இடத்திலுள்ளதாகவும் பூங்காவின் இயக்குநர் சி. ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

குறித்த இரு அனகொண்டாக்களும், 6 முதல் 8 அடி நீளமும், 15 கிலோ எடை கொண்டது.

இதேநேரம், மைசூர் விலங்கியல் பூங்காவிலிருந்து நான்கு அரியவகை மான்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக பூங்காவின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஆறு ஆண்டுகளின் பின்னர் இந்த விலங்குப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

பால்மா இறக்குமதி இடைநிறுத்தம்

(கொழும்பு)

உலக சந்தையில் பால் மாவின் விலை அதிகரித் துள்ளதால் அதன் இறக்கு மதியை தற்போது இடை நிறுத்தியுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் தெரி வித்துள்ளனர்.

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் பால்மாவின் விலை 3,250 இல் இருந்து 3,350 அமெரிக்க டொலர் களாகும், ஆனால் அடுத்த ஜூன் மாதம் வரை 3,400 இல் இருந்து 3,500 அமெரி க்க டொலர்களாக உயர்வ டைய கூடும், என்பதனால் இறக்குமதி தடைப் பட்டுள்ள தாக சுட்டிக காட்டியுள்ளனர்.

இந்த சூழ்நிலையை தற் போது பிரதமர் ரணில் விக்கி ரமசிங்கவிற்கு அறிவித்துள் ளதாக பால்மா இறக்குமதி யாளர்கள் கூறியுள்ளனர்.

அதுமட்டுமன்றி இறக்கு மதியில் ஏற்படும் செலவீனங் களை தவிர்ப்பதற்கு தாங்கள் ஒரு கிலோ இறக்குமதி செய் யப்பட்ட பால்மா விலையை 100 ரூபாயினால் அதிகரிக்க வேண்டும் என நுகர்வோர் விவகாரங்கள் ஆணையத் திடம் கோரிக்கை விடுத் துள்ளோம் என அவர்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும் தற்போது உள்ளூர் சந்தையில் காண ப்படும் பால்மாக்களின் பங்குகள் அடுத்து 1 அல்லது இரு வாரங்களுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என அவர்கள் தெரிவித்துள் ளனர்.

இந்த நிலைமைக்கு கடந்த நாட்களாக டொல ருக்கு நிகரான இலங்கை பெறுமதியில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே காரணம் என் பதும் குறிப்பிடத்தக் கது. (இ-7)

2017 இல் இலங்கை-சீனா வர்த்தக நடவடிக்கைகளில் முன்னேற்றம்

(கொழும்பு)

கடந்த ஆண்டு இலங்கை க்கும் சீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற வர்த்தகத்தின் மொத்த பெறுமதி 460 கோடி டொலரை எட்டியதாக அமை ச்சர் றிசாத் பதியுதீன் தெரி வித்துள்ளார்.

அதற்கு முன்னைய வரு டத்துடன் ஒப்பிடுகையில் அது மூன்று சதவீத அதிகரி ப்பு என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன வர்த்தகத் தூதுக்குழுவு டனான கலந்துரையாடலில் அவர் அது தொடர்பிலான புள்ளி விபரங்களை வெளி யிட்டார்.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை சீனாவின் யுனான் மாநிலத்தில் நடை பெறவுள்ள கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு சீனத் தூதுக் குழு அமைச்சர் றிசாத் பதியுதீனிடம் கோரிக்கை விடுத்தது. இதனுடன் இணை ந்ததாக கும்மிங் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக மாநாடும் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் ஊடாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர் களின் உற்ப த்திகளுக்கு சீனச் சந்தையில் ஸ்திரமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்குத் திட் டமிடப்பட்டுள்ளது.

யுனான் மாநிலத்தில் கூட்டு வர்த்தக முயற்சிகளில் முதலீடு செய்வதன் மூலம் புதிய வர்த்தகங்களை ஆரம் பிக்க இலங்கை முதலீட்டா ளர்களுக்கு வாய்ப்பு கிடை க்கும் என சீனத் தூதுக் குழு வின் அங்கத்தவர் ஷுஷுன் காவோ தெரிவித்தார்.

தமது மாநில அரசாங்கம் விவசாயம், ஒளட்த உற்பத்தி, சுற்றுலாத் துறை, தாவர இனப்பெருக்கம் முதலான துறைகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

ஆபரண அதிகார சபையின் புதிய தலைவராக பேஷல

(கொழும்பு)

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் புதிய தலைவராக வும் பணிப்பாளர் சபை உறுப் பினராகவும் பேஷல பண் டார ஜயரத்ன நியமிக்கப் பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் தனது நியமனக் கடிதத்தைப் பெற் றுக்கொண்டார். (இ-7)

கரவெட்டி பிரதேச செய லகத்தில் சிறுவர் உள நல மேம்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதில் பிரதேச செயலர் ஈ.தயாரூபன், உதவி பிரதேச செயலாளர் ரஜீவ் ஆகியோர் கலந்து சிறப்பித்த னர். (படங்கள்: மகாலிங்கம்)

மகிந்தவுக்கு கண்வைத்த மாணவர்களால் சர்ச்சை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, இல ங்கை சட்டப் பீட மாணவர்கள் அவமதித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

மகிந்தவை அவமதிக்கும் வகையில் நடத்தப்பட்ட புத் தாண்டு கொண்டாட்டம் தொடர் பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

சட்ட பீட மாணவர்களி னால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு விளையாட்டில் யானைக்கு கண் வைத்தல் உட்பட பல்வேறு விளையாட் டுகள் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தன. எனினும் இந்த மாண வர்களினால் யானைக்கு கண் வைக்கும் போட்டி வித்தியா சமான முறையில் செய்யப்பட் டுள்ளது.

யானைக்கு கண் வைப் பதற்கு பதிலாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் உருவத்தை வரைந்து மகிந்தவுக்கு கண் வைப்பது போன்று இந்த விளையாட்டு நடத்தப்பட்டுள்ளது. இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பேஸ்புக் உட்பட சமூக வலைத் தளங்களில் பகி ரப்பட்டுள்ளன.

எனினும் புகைப்படத்தை பார்த்தவர்கள் யாரும் அதற்கு சிறப்பான கருத்துக்களை வெளி யிடவில்லை எனவும், அதிகம் விமர்சிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டி யுள்ளது. (இ-7)

கயிலாச யாத்திரை

ஓர் அனுபவப் பகிர்வு 37

பரமசாமி பஞ்சாட்சரம்

கணேஸ் குண்டு (குளம்)

கணேஸ் குண்டைக் கண் டதும் யாத்திரிகர்களின் அரோகரா ஒலி கேட்டது. நானும் அரோகரா என்று சொல்லிக் கும்பிட்டேன். கீழே பார்த்ததும் பெரிய பள்ளத்தாக்குத் தெரிந்தது. இப் பள்ளத்தாக்கின் அடியில் ஒரு குளம் தெரிந்தது, அது மிகவும் பிரசித்தி பெற்ற கணேஸ் குண்டு என்று சொன்னார்கள். இந்த இடம் தான் விநாயகரின் இருப்பிட மாகும். எங்கு சென்றாலும் முதலில் கும்பிட வேண்டிய கடவுள் விநாயகர் தானே. ஆகவே முக்கியமான இடங் கள் இனி வரப் போவது தெரிந்துவிட்டது.

ஒருமுறை பார்வதி அம் மனுக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாகக் கோபம் வந்து கௌரி குண்டிலிருக்கும் அந்தப்புரக் காவலுக்கு ஒரு பிள்ளையை வைக்க எண் ணினார். அந்தக் கோபமான எண்ணம் எழுந்ததும் அம் மனுக்கு வியர்வை துளி களாகப் பெருகிற்று. அந்த வியர்வையில் தன் சக்தியை உபயோகித்து ஓர் குழந்தையை உருவாக்கினார். அதுபற்றி அவர் சிவனுக்குச் சொல்ல வில்லை. அப்போது சிவன் கயிலாயத்தில் இல்லை. சர்வ லட்சணத்தோடும், களையோ டும் வீரத்தோடும் பிறந்த பிள் ளையைக் காவலுக்கு நியமி த்து நான் ஜலக்கிரீடையோ நிஷ்டையோ செய்யும் சமயங் களில் யாரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று கட்டளையும் இட்டார்.

அவ்வாறே அப்பிள்ளை காவல் புரியும் போது, ஒரு நாள் பரமசிவன் நந்திதேவர் உட்பட சிவ கணங்களுடன் கயிலை வந்தார். கட்டியம் கூறுவதற்கு முன்னே வந்த நந்தி தேவரை அந்தப் பிள்ளை மறித்தார். சண்டை ஏற்பட்டது. நந்தி தேவரால் வெல்ல முடிய வில்லை. சிவன் வந்ததும் நீ யார்? என்று வினவினார். நான் அன்னையாற் காவலு க்கு அமர்த்தப்பட்டவன் என்று அப்பிள்ளை கூறியது. சிவன் திருஷ்டியால் எல்லாவற் றையும் அறிந்தார். ஒரு திரு விளையாடல் புரியத் திருவு ளம் கொண்டார். அப்பிள் ளையின் தலையை எடுத்துக் கடலில் வீசி விட்டார். ஜலக்கி ரீடையில் இருந்து வந்த பார் வதி அம்மன் நிலைமையை அறிந்து கவலை கொண்டு எனக்கு அந்தப் பிள்ளை வேண்டும் என்று செல்லி விட் டார்.

சிவன் தனது கணங்களைப் பார்த்து வடக்குப் பக்கத்தில் இறந்து கிடக்கும் எந்த உயிரி னத்தை முதலில் காண்கிறீர் களோ அந்த உயிரினத்தின் தலையைக் கொண்டு வாரு ங்கள் என்று உத்தரவிட்டார். அதன்படி சிவ கணங்கள ஒரு இறந்து கிடந்த யானையின் தலையைக் கொண்டு வந்தார் கள்.

யானைத் தலையை அப் பிள்ளைக்குப் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும் மூர்த்தி களும் சேர்ந்து பொருத்தி உயிரூட்ட அம் மையின் பிள்ளை ஆனைமுகன் ஆனார் என் றும் உயிரூட்டிய இடம் கௌரி குண்டென் றும் ஸ்ரீகணேச புராணம் கூறுகிறது.

ஒரு முறை பிரம்ம தேவர் தனது படைத்தல் தொழி லைத் தொடர்ந்து செய்ய முடியாமல் இருக்கின்றது என்று சிவபெருமானிடம் முறையிட அவர் விநாயகரை முதலில் வழிபட வேண்டும், அவரை வழிபட்டுத் தொட ங்கினாலே தான் எந்தக் காரி யமும் கைகூடும் என்று திருவாய் மலர்ந்தார். பின்னர் பிரமதேவர் இந்த இடத் திற்கு வந்து விநாயகரை வணங்கித் தனது குறையைக் கூறி விநாயகரிடம் பலத்தைப் பெற்று மிகுதிப் படைப்பைச் செய்தார் என்று ஸ்ரீகணேச புராணம் கூறுகிறது. நாங்கள் தொடர்ந்து சென்று கொண் டிந்தோம். இங்கிருந்து தான் மலை உச்சிப் பாதை ஆரம் பிக்கின்றது. பயங்கரமான கற்களுக் கூடாகச் செல்ல வேண்டும். எட்டிப் பார்த் தால் பெரிய பாதாளம் தெரியும். கணேஸ் குண்டு க்கு மிகவும் அருகாமையில் உள்ள பள்ளத்தாக்கில் சிவ ஸ்தல் மயானம் இருக்கின் றது என அறிந்தேன்.

(தொடரும்)

சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு குறித்து அரசாங்கத்திடம் விளக்கம் கோரும் கம்மன்பில

(கொழும்பு)

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலை குறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக நல்லாட்சி அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்சித்தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை அண்மையில் 245 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு ஆயிரத்து 675 ரூபாவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 580 அமெரிக்க டொலராக விருந்த ஒரு தொன் சமையல் எரிவாயுவின் விலை ஏப்ரல் மாதத்தில் 475 டொலராகக் குறைவடைந்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை இவ்வாறு குறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, எந்த அடிப்படையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறித்து மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (இ-7)

தமிழர்களின் பலத்தை உடைக்க பெரும்பான்மையினர் முயற்சி

கோடீஸ்வரன் எம்.பி.சாடல்

(அம்பாறை)

பெரும்பான்மையினக் கட்சிகள் தீர்வுத்திட்டம் என்ற போர்வையில் தமிழர்களின் பலத்தை உடைப்பதற்கான மூலோபாயங்களைப்பற்றி சிந்திப்பதாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மட்டக்களப்பு மாணவ மீட்பு பேரவையின் மாணவ ஊக்குவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு- கிழக்கிலுள்ள அனைத்து தமிழர்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பலத்தை பலப்படுத்த வேண்டிய கடமைப்பாடு உள்ளது.

அதற்கான அனைத்து தமிழர்களும் ஒன்றுபட வேண்டிய காலக்கட்டத்தில் நாம் காணப்படுகின்றோம்" எனத் தெரிவித்தார்.

கல்முனை குருந்தையடி மாடிவீட்டுத்திட்டத்தில் பேரவையின் தலைவரும், பொறியியலாளருமான கலாநிதி எஸ்.கணேசானந்தம் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆர். முரளீஸ்வரன், கல்முனை மாநகரசபை பிரதம பொறியியலாளர் எஸ்.சர்வானந்தா மற்றும் விசேட விருந்தினர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

இன-மத ஒற்றுமையுடன் நாட்டைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் தேவை

அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு



(கொழும்பு)

சகல இன- மத மக்களையும் ஒன்றிணைத்து இந்த நாட்டை கட்டியெழுப்புவதே இன்று எமக்கு உள்ள தேவைப்பாடாகும் என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பௌத்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"பௌத்தர்கள் என்ற வகையில் இன்று நாம் வெசாக் தினத்தை கொண்டாடி வருகின்றோம். இதேபோலவே பிற மதங்களுக்கும் நாம் மதிப்புக் கொடுத்துள்ளோம்.

அந்தவகையில், நத்தார் தினத்தை முன்னிட்டு காலிமுகத்திடலில் மிகப்பெரிய நத்தார் மரத்தை நிர்மாணித்தோம். அதேபோன்று இஸ்லாமிய விழாக்களையும் நடத்தியுள்ளோம்.

நாடு மற்றும் இனம் என்ற ரீதியில் நாங்கள் ஒருபோதும் பிளவுபடவில்லை. நாடு என்ற வகையில் எல்லோருடனும் ஒன்றிணைந்து செல்லக் கூடியதாக எம்மால் உள்ளது" எனத் தெரிவித்தார். (இ-7)

facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1402

Search for people, places and things Nagendram Home

ஆதித்யா

சில மனிதர்கள் பணந்தால் ஏழையாக இருக்கலாம்

ஆனால் குணத்தால் கோடீஸ்வரர்கள்

அபிதா

வறுமை இல்லாமல் வாழ வேண்டும் என்று கடவுளிடம் வேண்டுவதை விட...

வறுமையையும் தாங்கக்கூடிய சக்தியைக் கொடு என்று வேண்டுங்கள்

அருண்

கெட்டவனுக்குக்கூட நன்மை செய், அது தப்பில்ல

நல்லவனுக்கு மட்டும் கெடுதல் செய்யாதே அது தர்மமல்ல...!

அஜிந்தன்

விட்டுக்கொடுத்தால் விருப்பங்கள் நிறைவேறும்

மன்னிப்புக் கொடுத்தால் தவறுகள் குறையும்!!
மனம் விட்டுப் பேசினால் அன்பு அதிகமாகும்!

ஆரூரன்

அழுவதும் தவறில்லை
விழுவதும் தவறில்லை
ஆனால்...
அழுத பின்
சிரிக்காமல்
இருப்பதும்
விழுந்த பின்
எழாமல்
இருப்பதும்
தான் தவறு!



ஆரணி

வயதுக்கு வந்த பெண்ணுக்கு லெக்கிங்ஸ் போட்டு விட்டு 5 வயசு பெண்ணுக்கு புடவை தாவணி போட்டு அழகு பார்க்கிறது நம் தமிழ்ச் சமூகம்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ளூராட்சி சபைகளில் தமிழர் பிரதிநிதித்துவம்

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள 7 மாகாணங்களில், 17 மாவட்டங்களில் 673648 இலங்கைத் தமிழர் வாழ்வதாக 2012 குடிக்கணிப்பு கூறுகின்றது. இத்தொகை நாட்டில் வாழும் இலங்கைத் தமிழரில் 29.66% மாகும்.

இந்த ஏழு மாகாணங்களில் வாழும் இந்தியத் தமிழர் தொகை 2012 இல் 828564 ஆக இருந்ததுடன் நாட்டின் மொத்த இந்திய தமிழரில் 98.37% மாகவும் இருந்தது. இவ் 7 மாகாணங்களில் வாழும் இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் இன்று பல வழிகளில் நெருக்கமாக வாழ்கின்றனர். இதனால் இவ்விரு பகுதியினரைத் தமிழர் என்றே கணிக்க வேண்டும். முன்பு கரையோரச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என வெவ்வேறு பிரிவாகக் கணக்கெடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது இரு பிரிவினரையும் இணைத்து சிங்களவர் எனப் புள்ளி விபரங்கள் தரப்படுகின்றன.

இலங்கைச் சோனகர், மலாயர் மற்றும் முஸ்லிம்கள் எல்லோரையும் சேர்த்து முஸ்லிம்கள் எனக் குறிப்பிடும் போக்கு அண்மையில் அதிகரித்துள்ளது. இதனால் வருங்காலத்தில் இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் புள்ளி விபரங்கள் தமிழர் என்ற பிரிவுக்குள் வருவதே நல்லது. இலங்கையில் 7 மாகாணங்களில் வாழும் மொத்த இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழரில் 1502212 பேர். அதாவது மொத்த தொகையில் 48.25% த்தினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள ஏழு மாகாணங்களில் வாழ்கின்றார்கள்.

மாவட்ட அடிப்படையில் இலங்கைத் தமிழர், மொத்த தமிழர் விபரங்கள் 2012 குடிக் கணிப்பின்படி பின்வருமாறு;

மாவட்டம்	இலங்கைத் தமிழர் குடித் தொகை	இந்தியத் தமிழர் குடித் தொகை	இரு பிரிவுகளிலும் தமிழர் குடித் தொகை
கொழும்பு	231318	27336	258654
கம்பஹா	80071	10879	90950
களுத்துறை	24362	23612	47974
கண்டி	71640	83234	154874
மாத்தளை	24756	23400	48156
நுவரெலியா	31867	375795	407662
காலி	15228	5641	20869
மாத்தறை	8562	11984	20546
அம்பாந்தோட்டை	2111	136	2247
குருநாகலை	18763	3582	22365
புத்தளம்	47523	2503	50026
அநுராதபுரம்	5065	957	6022
பொலநறுவை	7356	1190	8546
பதுளை	20335	149662	169997
மொனராகலை	9783	4590	14373
இரத்தினபுரி	54658	62595	117253
கேகாலை	20250	41468	61718
மொத்தம்	673648	828544	1502212

இலங்கைத் தமிழர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து காலாகாலமாக இடம் பெயர்ந்து வாழ்பவர்கள். இவர்களில் மிகக் கூடிய எண்ணிக்கை கொழும்பு நகரிலும் இதன் அயல் நகரப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். மேலும் நாட்டில் குடியுரிமை பெற்ற பின்னர் இந்திய தமிழர்களில் ஒரு பகுதியினர் தங்களை இலங்கைத் தமிழர் எனவும் வெளிப்படுத்தியுள்ளனர். இப்பிரிவுகளை விட பொலநறுவை, புத்தளம் மாவட்டங்களில் பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். பொலநறுவை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் பல தமிழ்க் கிராமங்கள இருக்கின்றன. முத்துக்கல், கருப்பொல, கந்தக்காடு, குடா பொக்கன, சேனபுர, மன்னம் பிட்டி, திம்புலகலை ஆகியன முக்கிய தமிழ் கிராமங்களாகும். புத்தளம் மாவட்டத்தில் 50,000 இலங்கைத் தமிழர் வாழ்வதுடன் உடப்பு, ஆண்டிமுனை, பூனப் பிட்டி, கருங்காலிச்சோலை, குசல, முனீஸ்வரம், திம்பில்ல, அனவாசல், நாவற்குடா போன்ற பல கிராமங்களில் பூர்வீகமாக வாழ்கின்றார்கள்.

இந்திய வம்சாவளித் தமிழர்களின் பரம்பலுக்குத் தேயிலை, இறப்பர் தோட்டப் பரம்பலுக் கும் மிகவும் நெருங்கிய உறவு காணப்படுகின்றது. மத்திய மாகாண நகரங்களில் இவர்களின் செறிவும் குறிப்பிடத்தக்கது.

2018 பெப்ரவரி 10 ஆம் திகதி கடந்த உள்ளூராட்சித் சபைத் தேர்தலில் இந்த ஏழு மாகாணங்களில் இருந்து 328 தமிழர்கள் வட்டார ரீதியாகவும் விகிதாசாரப் பட்டியல் நியமனங்கள் ஊடாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை,

ஏழு மாகாணங்களில் தமிழர் உள்ளூராட்சி சபைகளில் 328 ஆசனங்களைப் பெற்று இருக்கின்ற பொழுதும் இம் மாகாணங்களில் இருக்கின்ற தமிழர் தொகைக்கு ஏற்ப பிரதிநிதிகள் எண்ணிக்கை போதாது. பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணம் ஏனைய சகோதர இனங்கள் போல் அரசியலில் தங்கள் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதில் சிரத்தை காட்டுவதில்லை. இம் முறை தேர்தல் வட்டார முறையையும் விகிதாசார முறையையும் கொண்டது. இம்முறை சிறுபான்மையாக வாழும் சமூகத்திற்கு சிறந்த முறையாகும். இதனால்தான் இம்முறை கொழும்பு மாநகர சபையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தமிழர் தெரிவாகியுள்ளனர். இதேபோல் முதல்முறையாக மாத்தறை மாவட்டத்தில் கொட்டப்பொல பிரதேச சபைக்கு மூன்று தமிழர்தெரிவாகியுள்ளனர்.

தென்னிலங்கையில் தமிழ் அரசியல் கட்சிகள் நுவரெலியா, கொழும்பு, பதுளை, கண்டி போன்ற மாவட்டங்களிலேயே ஓரளவு செயற்படுகின்றனர். காலி, மாத்தறை, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை, குருநாகலை மாவட்டங்களில் இந்தியத் தமிழர்கள் குறிப்பிடத்தக்க தொகையில் வாழ்ந்த பொழுதும் இவர்கள் பற்றி இந்தியத் தமிழர் அரசியல் கட்சிகள் கரிசனை கொள்

மாவட்டம்	எண்ணிக்கை
கொழும்பு	
கொழும்பு மா.ந.	22
கொலன்னாவை ந.ச	01
சித்தவாக்கபுர ந.ச	03
சித்தவாக்கபுர பி.ச	02
கம்பஹா	
நீர்கொழும்பு மா.ச	02
வத்தளைமாபோலை ந.ச	03
வத்தளை பி.ச.	02
களுத்துறை	
கொறணை பி.ச.	02
மதுறாவெலப் பி.ச.	01
புளத்சிங்கள பி.ச.	01
தொடங்கொட பீ.ச.	01
பலிந்துநுவர பி.ச.	01
காலி	00
மாத்தறை	
கொட்டப்பொல பி.ச.	03
அம்பாந்தோட்டை	00
கண்டி	
கண்டி மா.ச.	02
நாவலப்பிட்டி ந.ச	02
பன்வல பி.ச.	07
மெததும்பர பி.ச.	03
குண்டசாலை பி.ச.	03
பாத்தஹெவாஹெற்ற பி.ச.	05
உடபலாத்த பி.ச.	06
ஹங்கஇஹல பி.ச.	03
மாத்தளை	
மாத்தளை மா.ந.	03
அம்பன்கங்கைகோறளை பி.ச.	02
மாத்தளை பி.ச.	02
யட்டாவத்தை பி.ச.	01
உக்குவெல பி.ச.	02
இரத்தோட்ட பி.ச.	03
நுவரெலியா	
நுவரெலியா மா.ச	09
ஹற்றன்-டிக்கோயா ந.ச	10
தலவாக்கலை ந.ச	06
மஸ்கெலியா பி.ச.	13
நோர்வூட் பி.ச.	20
அம்பேகமுவ பி.ச.	06
அக்கரைப்பத்தனை பி.ச.	12
கொட்டக்கலை பி.ச.	15
நுவரெலியா பி.ச.	13
கொத்மலை பி.ச.	21
ஹங்குரான்கெத்த பி.ச.	08
குருநாகல்	
குருநாகல் மா.ச	02
ரிதிகம பி.ச.	01
புத்தளம்	
சிலாபம் ந.ச	02
கற்பிட்டி பி.ச.	03
புத்தளம் பி.ச.	02
வனாத்தவில்லு பி.ச.	01
ஆராச்சிக்கட்டு பி.ச.	02
நாத்தாண்டிய பி.ச.	01
பதுளை	
பதுளை மா.ச	01
பண்டாரவளை மா.ச	02
ஹப்புத்தளை மா.ச.	01
மீகஸ்வெல்ல பி.ச.	01
கந்தேகட்டிய பி.ச.	01
பசறை பி.ச.	05
லுணுகல பி.ச.	07
பதுளை பி.ச.	11
ஹாலிஎல பி.ச.	06
ஊவா பறணகம பி.ச.	03
வெலிமடை பி.ச.	02
பண்டாரவளை பி.ச.	01
எல்ல பி.ச.	04
ஹப்புத்தளை பி.ச.	08
ஹல்துமுல்ல பி.ச.	05
மொனராகலை	
மொனராகல பி.ச.	02
இரத்தினபுரி	
இரத்தினபுரி மா.ச	01
இரத்தினபுரி பி.ச.	02
பெல்மதுள்ளை பி.ச.	03
பலாங்கொடை பி.ச.	04
இம்புள்பே பி.ச.	03
கொட்டவெல பி.ச.	05
நிவத்திக்கல பி.ச.	01
அயகம பி.ச.	01
கொலன்ன பி.ச.	01
கேகாலை	
எட்டியாந்தோட்டை பி.ச.	03
புளத்சிங்கள பி.ச.	01
ருவான்வெல பி.ச.	02
தெரணியகல பி.ச.	01
தெஹியோவிற்ற பி.ச.	01

வதில்லை. இதனால் இவர்கள் தங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவத்தைப் பெற முடியாதுள்ளனர். தற்போதைய வட்டார, விகிதாசார முறையில் மக்கள் தொகைக்கு ஏற்ப கட்சிகள் பேரம் பேச முடியும்.

தமிழ்மக்கள் இனத்தவர்கள் தங்கள் சமூகத்திற்கு மாத்திரம் வாக்களிக்கும் பண்பு இல்லாமல், பலருக்கும் வாக்களிப்பதால் வாக்குகள் சிதறப்பட்டு பிரதிநிதித்துவத்தை இழந்து விடுகின்றனர்.

பெரிய கட்சிகள் வட்டார ரீதியில் கூடிய ஆசனங்களைப் பெற்றாலும் விகிதாசாரப் பட்டியலில் குறைவான ஆசனங்களைப் பெறுகின்றனர். விகிதாசாரப் பட்டியலில் பெயர்கள் கட்சிச் செயலாளர் மூலம் அனுப்பப்படும் நிலையில் தமிழ் பேரம் பேசும் சக்தி, அரசியல் சக்தி இல்லாததால் இவர்களுக்குரிய இடம் கிடைப்பதில்லை.

கொழும்பு மாவட்டத்தில் தெஹிவல, இரத்மலானை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, மொறட்டுவ போன்ற நகர சபைகளில் தமிழர் எண்ணிக்கை பிரதிநிதித்துவத்தைப் பெற தகுதியிருந்தும் மத்திய தர மக்களின் அலட்சியப் போக்கும் அரசியலில் ஈடுபாடற்ற பண்பும் பிரதிநிதித்துவத்தைப் பெறமுடியாது போயிற்று.

காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, தவளம, நெலுவ, நாகொட, யக்கமுல்ல பிரதேச சபைகளில் ஓரிரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கக்கூடிய தமிழர் தொகை இருக்கின்றது. இங்கு பிரதான அரசியல் கட்சியின் மூலம் பிரதிநிதித்துவத்தை இரண்டொரு வழிகளில் பெற்றிருக்கலாம். தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஈடுபாடு காட்டவில்லை. இதுபோல மாத்தறை மாவட்டத்தில் பிற்றபத்தர பிரதேச சபையிலும் ஒரு பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கலாம். களுத்துறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் சரியாக வழிநடத்தப்படாததாலும் தலைமைத்துவ வெற்றிடத்தாலும் பிரதிநிதித்துவத்தை இழந்துள்ளனர்.கேகாலை மாவட்டத்தில் கோறளைப் பிரதேசத்தில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கின்ற பொழுதும் தமிழர் தொகைக்கு குறைவாகவே இருக்கின்றது. இது போல கண்டி மாவட்டத்தில் கண்டி, கம்பளை, நாவலப்பிட்டி நகரங்களில் தமிழ்மக்கள் தொகைக்கு பிரதிநிதித்துவம் இல்லை. கம்பளை நகரில் பெரும் எண்ணிக்கையான தமிழர் இருந்தும் இவர்கள் வாக்குகள் சிதறியதால் ஒரு பிரதிநிதியையும் பெறமுடியாது போயிற்று. இரத்தினபுரி மாவட்டத்திலும் தமிழர் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் பெறப்படவில்லை. குருநாகலை மாவட்டத்தில் மாவத்தகம பிரதேச சபையில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் பெற வாய்ப்பிருந்தும் தமிழர் பெறத் தவறிவிட்டனர். குருநாகல் மாவட்டத்தில் ரிதிகம பிரதேச சபைக்குள் வெலிகந்த, கிந்துல்வல கிராமசேவகர் பிரிவில் தமிழர்கள் இருக்கின்றனர். இப்பிரதேச சபைக்கு விகிதாசாரப் பட்டியலில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவ பிரதேச சபைக்கு ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். கெக்கிராவை பட்டன சபை தலைவராக ஒரு காலத்தில் தமிழர் இருந்துள்ளார். இன்றும் குறிப்பிடத்தக்க தமிழர் இங்கு வாழ்வதுடன் ஒரு தமிழ் பாடசாலையும் இயங்குவது குறிப்பிடத்தக்கது. பொலநறுவை மாவட்டத்தில் கருப் பொலி, திம்புலாகல வட்டாரங்களிலிருந்து இரு தமிழர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். புத்தளம் மாவட்டத்தில் இருந்து பதினொரு அங்கத்தவர்கள் பரவலாக தமிழ் பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏழு மாகாணங்களிலும் 76 உள்ளூராட்சி சபைகளில் தமிழருக்கு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களிலும் இம்முறை உள்ளூராட்சி சபைகளில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் கூடியிருந்தாலும் தமிழ்மக்கள் தொகைக்கு ஏற்ப பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. கலப்புத் தேர்தல் முறை மூலம் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை கூட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் இருந்த பொழுதும் தமிழர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தவறிவிட்டனர். இதைத் தவிர்க்க தென்னிலங்கை தமிழர்கள் அரசியலில் கூடுதலான ஈடுபாடு காட்டுவதுடன் தேர்தல் சுளிவு நெளிவுகளை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். தென்னிலங்கை தமிழ் அரசியல் நுவரெலியா, பதுளை, கொழும்பை மாத்திரம் மையப்படுத்தாது தென்னிலங்கை முழுவதும் பரவலாக்கப்படவேண்டும் களுத்துறை, காலி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகலை, மொனராகலை மாவட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் வலுப்படுத்தப்படவேண்டும். அவர்களின் விழிப்புணர்வுகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

மேலும் தமிழ்க் கட்சிகள் தமிழர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக்கூடிய தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து பெரிய கட்சிகளுடன் கூட்டுச்சேர வேண்டும். இப்புதிய தேர்தல் முறையில் கட்சிச் செயலாளர்கள் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருப்பதால் தேர்தலுக்கு முன்னர் சொல்வதும் பின்னர் செய்வதும் பெரிதும் வேறுபடுகின்றது. இதனால் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இம்முறை பாதிக்கப்பட்டிருக்கிறது. இக்குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

அரசிலுள்ள பலருக்கு வெட்கமில்லை

"வாக்குறுதியளித்து விட்டு ஏமாற்றி விட்டார்கள் உள்ளிருந்து போராடுவேன்" -ரங்கே அதிருப்தி

(கொழும்பு)

நான் அமைச்சரவை அமைச்சுப் பதவியையே எதிர் பார்த்தேன். எனினும் அப்ப தவி எனக்கு கிடைக்கவில்லை. எனக்கு அமைச்சு பதவி வழ ங்குவதாகவே வாக்குறுதி அளித்தனர் என்றாலும் வழ ங்கவில்லை. அதற்காக நான் அரசாங்கத்தில் இருந்து வெளி யேற மாட்டேன். நாமே இந்த ஆட்சியை உருவாக்கினோம்.

ஆகவே உள்ளே இருந்து கொண்டு நேர்வழிக்காக போராடுவோம் என நீர்ப் பாசன, நீர்வள முகாமைத் துவ மற்றும் அனர்த்த முகா மைத்துவ இராஜாங்க அமை ச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தில் உள்ள பலருக்கு வெட்கமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கை களின் ஒரு அங்கமான இரா ஜாங்க மற்றும் பிரதி அமைச் சுகளுக்கான புதிய நியமன ங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதி பதி செயலகத்தில் நடைபெற் றது.

அந்த நிகழ்வு நிறைவ டைந்த பின்னர் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பு இரு ந்த ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

நான் அமைச்சு பதவி யையே எதிர்பார்த்தேன். எனினும் அப்பதவி எனக்கு கிடைக்கவில்லை. தற்போது இருந்ததை விட மேலதிக மாக அனர்த்த முகாமைத் துவ இராஜாங்க அமைச்சு பொறுப்பு கிடைக்கப்பெற்றுள் ளது.

எனினும் எனக்கு அமைச் சரவை அமைச்சு பதவி வழ ங்குவதாகவே வாக்குறுதி அளித்தனர். என்றாலும் வழ

ங்கவில்லை. அதற்காக நான் அரசாங்கத்தில் இருந்து வெளி யேற மாட்டேன். நாமே இந்த ஆட்சியை உருவாக்கி னோம். ஆகவே உள்ளே இரு ந்துகொண்டு போராடுவோம்.

எனக்கு அமைச்சு பதவி வழங்காவிட்டாலும் பிரச்சி னையில்லை. இராஜாங்க அமைச்சினை கொண்டே நான் மக்களுக்கு சேவை செய் வேன். ஆரம்பத்தில் மகிந்த சமரசிங்கவினால் எனக்கு எதனையும் செய்ய முடியா மல் போனது. இந்த அமை ச்சை கொண்டு மக்களுக்கு ஏதாவது சேவை செய்ய முடி யும் என நம்புகின்றேன்.

அத்துடன் ஐக்கிய தேசி யக் கட்சியின் தலைமை பத வியில் மாற்றம் வர வேண் டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக உள்ளோம். அந்த கொள்கையில் எந்தவொரு மாற்றமும் இல்லை. மறுசீரமை ப்பு என்பது வெறும் மாயை யாகும் எனவும் அவர் தெரி வித்தார். (இ-7)

ஆட்டோவில் கடத்தப்பட்ட இளம் தாய் சடலமாக மீட்பு

(களுத்துறை)

களுத்துறை - மத்து கமை வோகன் தோட்டத்தி ற்கு அருகில் ஆட்டோவில் கட த்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக கூறப்ப டும் இளம் தாயொருவர் தொட ர்பான விசாரணைகள் தொட ர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரு வதாக மத்துகமை பொலி ஸார் தெரிவித்தனர்.

கடந்த இரண்டு தினங் களுக்கு முன்னர் மத்துகமை நகரத்தில் தினசரி வேதனத் திற்கு வேலை செய்யும் 28 வயதுடைய தாயொருவர் வேலையை முடித்து விட்டு ஆட்டோவில் வீடு திரும்பி யுள்ளார்.

குறித்த தாய் வழமையாக செல்லும் ஆட்டோவிலேயே அன்றும் பயணித்துள்ளார்.

அவர் பயணித்த ஆட்டோ மத்துகமை நகரத்தின் காண ப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்டோ தரிப்பு நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒன்றா கும்.

இந்நிலையில் 28 வயது டைய குறித்த தாயை இறக் கவேண்டிய இடத்தினை தவி ர்த்து அவரது வசிப்பிடத்தை யும் கடந்து ஆட்டோ வேக மாக பயணித்துள்ளது.

அச்சமுற்ற 2 பிள்ளை களின் தாயான அவர் கூச்ச லிட்டு ஆட்டோ சாரதி நிறுத் தாமல் சென்றுள்ளார்.

தனது பிள்ளைகளை கவ னத்திற்கொண்டு தனது உயிரை காப்பாற்றிக்கொள்ள குறித்த தாய் ஆட்டோவில் இருந்து பாய்ந்துள்ளார்.

ஆட்டோவிலிருந்து பாய்ந்த தாய்க்கு கடுமையாக உடலில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மக்கள் கூச்சலிட்ட தினை தொடர்ந்து குறித்த ஆட்டோ சாரதி பிறிதொரு ஆட் டோவின் சாரதியின் உதவி யுடன் குறித்த இடத்தில் இரு ந்து வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

சுமார், மூன்று கிலோ மீற் றர் வரையிலான தூரமே வைத்தியசாலைக்கு காணப் படுகின்ற போதிலும் படுகா யத்திற்கு உள்ளான தாய் வைத் தியசாலையில் அனுமதிக் கப்படவில்லை.

உறவினர்களின் கோரிக் கைக்கு இணங்க அயலவர்க ளின் உதவியுடன் தாயை தேடும் நடவடிக்கைகள் தொடர் ந்தும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இந்நிலையில் , தாய் மர ணமடைந்த நிலையில் வீதி யின் கரையில் நிர்மாணிக் கப்பட்டுள்ள வடிகாலில் வீசப் பட்டு சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

இது தொடர்பில் பொலி ஸாருக்கு முறைப்பாடு செய் யப்பட்டுள்ள போதிலும் பொலி ஸார் மெத்தனப்போக்குடன் செயற்பட்டு வருகின்றனர்.

நகரில் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட ஆட்டோ சாரதிகள் சங்கத்தின் அங்கத் தவர் ஒருவரை இனங்காண் பது கடினமாகவுள்ளதா? என பொலிஸாரிடம் உறவினர் கள் கோரியதற்கு பொலிஸார் பொருட்படுத்தாது அவர்களை நிந்தித்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

களுத்துறை மாவட்டத் தின் இந்த இளம் தாயின் மரணத்துடன் ஏற்கனவே இடம்பெற்ற சம்பவங்களை நோக்கினால் இது மூன்றா வது சம்பவமாகும்.

இது தொடர்பில் , தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பொலி ஸாருடன் தொலைபேசி வாயிலாக உரையாடியுள்ள தாக தெரிவித்துள்ளனர்.

ஆனால், சம்பவ இடத்தி ற்கு சென்று சம்பவத்தின் பின்னணியில் காணப்படும் அரசியல் காய்நகர்த்தல்களை உடைத்தெறிய இதுவரை எவரும் முன்வரவில்லை.

சம்பவத்தில் உயிரிழந்த வர் 3 மற்றும் 6 வயதுடைய பிள்ளைகளின் 28 வயதான இளம் தாயாவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் புகையிரதப் பணியாளர்கள்

(கொழும்பு)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து புகையிரத ஊழி யர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தீர்மானித் துள்ளனர். எதிர்வரும் 8ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட போவதாக புகையிரத சாரதி கள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்தார். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப் படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த வேலை நிறுத்தப் போரா ட்டத்தை முன்னெடுக்கப் போவதாக அவர் தெரிவித்தார். (இ-7)

செய்தித்துளிகள்

கிளைபோசெட் தடை நீக்கம்

(கொழும்பு)

தேயிலை மற்றும் இறப்பர் செய்கைகளுக்கு கிளை போசெட் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முன் தினம் முதல் நீக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நவீன் திஸா நாக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்கு சீனாவினால் கட்டுப்பாடு விதிக்கப்படும் அபாயம் இருப்பதால் இந்த தடை நீக்கப்படுவதாக அவர் கூறினார். (இ-7)

கிருலப்பனையில் தீ விபத்து

(கிருலப்பனை)

கிருலப்பனையில் இரு மாடி கட்டடத்தில் நேற்றுக் காலை தீ பரவல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு மாநகர சபை தீயணைப்பு பிரி வுக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து தீயணைப்பு படை யினர் தற்போது தீயினை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். குறித்த தீ விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிருலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

ஹிருணிகா கூறியது பொய்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர வெளியிட்ட கருத்தை அக்கட்சியின் உறுப்பினர்கள் மறுத் துள்ளனர். கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கையில் அதிருப்தி கொண்டுள்ள ஐ.தே.கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் நிகழ்வுகளை புறக்கணிக்கப் போவதாக ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்திருந்தார். எனினும் இந்த கருத்தை தாம் மறுப்பதாக அந்தக் கட்சியின் பின்வரிசை உறுப் பினர்கள் மறுத்துள்ளனர். எனினும், அவ்வாறான முடிவை தாம் எடுக்கவில்லை என்றும், தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மீது நம்பிக்கை கொண்டுள்ள தாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (இ-7)

பாகிஸ்தானின் ஒத்துழைப்புடன்

கரும்புச் செய்கையை மேம்படுத்தத்திட்டம்

(கொழும்பு)

புதிய நடைமுறைகளை பயன்படுத்தி கரும்பு செய் கையை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு பாகிஸ்தானின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளதுடன் இதற்காக பாகிஸ்தானைச் சேர்ந்த மூன்று விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் இலங்கையின் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றவுள்ளன. இதன் கீழ் இரு நாடுகளுக்கு இடையில் வணிக நோக்கில் கரும்பு வகைகள் பரிமாறிக் கொள்ளப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கையும் பாகிஸ்தா னும் கைச்சாத்திடவுள்ளன. (இ-7)

கோல்டன் பீகொக் விருது மாயம்

(கொழும்பு)

உலகைவிட்டு பிரிந்த கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரி ஸிற்கு கிடைத்த கோல்டன் பீகொக் (Golden Peacock) விருது காணாமல் போயுள்ளது. அவருடைய வீட்டில் இரு ந்த குறித்த விருது நேற்று அவருடைய இறுதிக்கிரியையின் போது காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 1965 ஆம் ஆண்டு டில்லியில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸிற்கு இந்த விருது மற்றும் பதக்கம் கிடைத்திருந்தது குறிப்பிட்டத்தக்கது. (இ-7)

தென்னைச் செய்கையில் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவம்

உரு: 04 தூவல் நீர்ப்பாசனம்

இதனைவிட பானைப் பாசனத்தில் இயற்கையாக கிடைக்கும் மழை நீரை வழிந்தோடச் செய்து பானைகளுக்கு சேர்ப்பிப்பதன் மூலம் நீரானது வீண்விரயமாகாது வினைத்திறனாகப் பயன்படுத்தப்படும். இதற்காக தென்னங்கன்றினைச் சூழ சிறிய மண் அணைகள் அமைக்கப்பட்டு நீரானது பானையை நோக்கி ஓடி வரச்செய்யப்படுகின்றது. பானையில் சேரும் நீருடன் மண், வேறு பொருட்கள் சேர்வதைத் தடுப்பதற்கு துளையிடப்பட்ட தேங்காய்ச் 'சிரட்டை பானையின் வாய்ப்பகுதியில் வைக்கப்பட்டு சிரட்டையினுள் மண் நிரப்பப்படும்.

எனவே பானையினுள் செல்லும் நீரானது வடிகட்டப்படுகின்றது. இம்முறையில் நீர்ப்பாசனம் செய்யப்படல் eyebrow bund and pitcher irrigation எனப்படுகிறது. பானைப் பாசனத்தில் பசளைகள் கலந்து விடப்படலாம். இதனால் இவை வினைத்திறனாக தென்னைக்கு கிடைக்கும்.

பானைப் பாசனத்தின் நன்மைகள்

➢ இலகுவாக செய்யக் கூடிய முறையாகும்.

➢ மணல் இருவாட்டி மண்ணுக்கு பொருத்தமானது.

➢ நீரை வினைத்திறனாக வேர் வலயத்தற்கு வழங்க முடியும்.

➢ நீருடன் பசளை, பூச்சி நாசினிகளையும் கலந்து விநியோகிக்க முடியும். இதனால் பயிருக்கு வினைத்திறனாக வழங்க முடியும்.

➢ சிறந்த பராமரிப்பின் கீழ் 3-6 வருடம் வரை பயன்படுத்தலாம்.

➢ விசேட தொழில்நுட்ப அறிவு தேவையில்லை.

தூவல் நீர்ப்பாசனம் (spirinkler irrigation)

தென்னை நீர்ப்பாசன முறைகளில் மற்றுமொரு வினைத்திறனான நீர்ப்பாசன முறை தூவல் நீர்ப்பாசனம் ஆகும். தூவல் நீர்ப்பாசனம் என்பது நீரினை நுண்ணிய துளிகளாக தூவச் செய்யும் ஓர் முறையாகும். தொகுதியில் காணப்படும் தூவல் முனைகளில் உள்ள நுண் துளைகளினூடாக கூடிய அமுக்கத்துடன் வெளியேறுகின்றது. (உரு:04). இங்கு அமுக்கமானது நீர்ப் பம்பி மூலம் வழங்கப்படுகின்றது.

தூவல் நீர்ப்பாசனத் தொகுதியின் பாகங்கள்

➢ நீர்ப்பம்பி (water pump).

➢ பிரதான குழாய் (main pipe).

➢ கட்டுப்பாட்டு அலகு (control unit).

● அமுக்கமானி (pressure gauge).

● அமுக்கம் விடுவிக்கும் வால்வு (pressure release valve).

● பசளைத் தாங்கி (fertigation tank).

● வடிகட்டி (filter).

➢ உப பிரதான குழாய் (sub main pipe).

➢ பக்கக் குழாய்கள் (laterals).

➢ உயர்த்திகள் (erisor).

➢ விசிறும் முனை (spirinkler head).

தூவல் நீர்ப்பாசனத்தின் நன்மைகள்

➢ வாய்க்கால் மூலம் இழக்கப்படும் நீர் இழப்பு இங்கு இல்லை.

➢ கடுமையான களித் தரையைத் தவிர ஏனைய மண் வகைகளுக்குப் பொருத்தமானது.

➢ நீர் வீண் விரயமாகாது சேமிக்கும் வினைத்திறன் அதிகம்.

➢ தென்னையில் விளைச்சல் அதிகரிக்கும்.

➢ இந்நீர்ப்பாசனத் தொகுதியினூடாக கரையக்கூடிய பசளைகளையும், நாசினிகளையும் விசிறலாம்.

➢ தென்னைக்கு அருகே நுண் காலநிலையை உருவாக்குவதால் சிறப்பான வளர்ச்சியும், உற்பத்தியும் கிடைக்கும்.

தூவல் நீர்ப்பாசனத்தின் பிரதிகூலங்கள்

➢ ஆரம்பச் செலவு அதிகம்.

➢ பராமரிப்பு மிக அவசியம்.

➢ களி சார்ந்த மண்ணுக்குப் பொருத்தமற்றது.

இவ்வாறான பிரதிகூலங்கள் காணப்பட்ட போதிலும் இம்முறை வினைத்திறனான நீர்ப்பாசன முறை என்பதால் எல்லா வயதுடைய தென்னைக்கும் இதனைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் தெங்கு விளைச்சலையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

சொட்டு/துளி நீர்ப்பாசனம் (drip irrigation)

தென்னைக்கு பல்வேறு

உரு: 5 துளி நீர்ப்பாசனம்

தொகுதியின் பாகங்கள்

➢ நீர்ப்பம்பி (water pump).

➢ பிரதான குழாய் (main pipe).

➢ கட்டுப்பாட்டு அலகு (control unit).

● அமுக்கமானி (pressure gauge).

● அமுக்கம் விடுவிக்கும் வால்வு (pressure release valve).

● பசளைத் தாங்கி (fertigation tank).

● வடிகட்டி (filter).

➢ உப பிரதான குழாய் (sub main pipe).

➢ பக்கக் குழாய்கள் (laterals).

➢ உயர்த்திகள் (erisor).

➢ விசிறும் முனை (spirinkler head).

தூவல் நீர்ப்பாசனத்தின் நன்மைகள்

➢ வாய்க்கால் மூலம் இழக்கப்படும் நீர் இழப்பு இங்கு இல்லை.

➢ கடுமையான களித் தரையைத் தவிர ஏனைய மண் வகைகளுக்குப் பொருத்தமானது.

➢ நீர் வீண் விரயமாகாது சேமிக்கும் வினைத்திறன் அதிகம்.

➢ தென்னையில் விளைச்சல் அதிகரிக்கும்.

➢ இந்நீர்ப்பாசனத் தொகுதியினூடாக கரையக்கூடிய பசளைகளையும், நாசினிகளையும் விசிறலாம்.

➢ தென்னைக்கு அருகே நுண் காலநிலையை உருவாக்குவதால் சிறப்பான வளர்ச்சியும், உற்பத்தியும் கிடைக்கும்.

தூவல் நீர்ப்பாசனத்தின் பிரதிகூலங்கள்

➢ ஆரம்பச் செலவு அதிகம்.

➢ பராமரிப்பு மிக அவசியம்.

➢ களி சார்ந்த மண்ணுக்குப் பொருத்தமற்றது.

இவ்வாறான பிரதிகூலங்கள் காணப்பட்ட போதிலும் இம்முறை வினைத்திறனான நீர்ப்பாசன முறை என்பதால் எல்லா வயதுடைய தென்னைக்கும் இதனைப் பயன்படுத்தலாம். இதன்மூலம் தெங்கு விளைச்சலையும் அதிகரித்துக் கொள்ளலாம்.

சொட்டு/துளி நீர்ப்பாசனம் (drip irrigation)

தென்னைக்கு பல்வேறு பட்ட நீர்ப்பாசன முறைகள் காணப்பட்ட போதிலும் ஏனைய நீர்ப்பாசன முறைகளுடன் ஒப்பிடும் போது முதிர்ச்சியடைந்த தென்னை மரங்களுக்கு சொட்டு நீர்ப்பாசனமானது சிறந்த நீர்ப்பாசன முறையாக காணப்படுகின்றது. இவ்வாறு கருதப்பட பின்வருவன காரணமாக அமைகின்றது.

❖ சொட்டு நீர்ப்பாசனத் தொகுதி மூலமாக நீர் மிக வினைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றது. (நீர்ப்பாசன நீரில் 40% ஆன நீர் சேமிக்கப்படுகின்றது).

❖ போசணை இழப்புகள் குறைவாக காணப்படுகின்றது.

❖ குறைந்தளவு வேலையாட்கள் தேவை.

❖ ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும்.

❖ வேர் வலயத்துக்கு மட்டும் நீர் வழங்கப்படுவதால் களை வளர்ச்சி குறைவு. இதனால் முகாமைத்துவம் இலகுவாகும்.

❖ வேர் வலயத்துக்கு காற்றூட்டல் அதிகரிக்கும்.

சொட்டு நீர்ப்பாசனம் ஆனது நீர்த்தாங்கியில் இருந்து வருகின்ற நீரை குழாய்கள் மூலமாக தென்னையின் வேர் வலயத்திற்கு வழங்கும் முறையாகும். (உரு: 05). இக் குழாய்த் தொகுதியானது 4 பிரதான குழாய்களையும் வழங்கிக் குழாய்களையும் கொண்டது. இங்கு பிரதான குழாயானது 20mm விட்டம் கொண்டதாகவும் வழங்கிக் குழாயானது 12mm விட்டம் கொண்டதாகவும் காணப்படும். இக் குழாய்கள் 6mm விட்டமுடைய குழாய்களையும் கொண்டதாகவும் காணப்படும்.

இவை தென்னையின் அடியிலிருந்து 1m இடைவெளியில் அமைக்கப்பட்டிருக்கும். எல்லா வழங்கிக் குழாய்களிலும் வால்வுகள் காணப்படும். இதன்மூலம் நீரின் வெளியேறும் வீதம் கட்டுப்படுத்தப்படும். (உரு: 06). நீரோட்ட வேகத்தை மாற்றுவதன் மூலமாக தொகுதிக்கு அமுக்கம் வழங்கப்படுகிறது. இதனால் எல்லாத் துளைகளுக்கும் சீரான நீர் வழங்கல் கிடைக்கின்றது.

சொட்டு நீர்ப்பாசனத்தின் நன்மைகள்

❖ இந்த முறை வினைத்திறன் வாய்ந்த நீர்ப்பாசன முறையாக இருப்பதால் ஒப்பீட்டளவில் நீர் தேவை குறைவு.

❖ நீர்ப்பாசனத்துடன் சேர்த்து பசளைப்பாசனமும் செய்ய

உரு: 6 துளி நீர்ப்பாசன மற்றுமொரு வகை

முடியும். இதனால் பசளைப் பாசனத்துக்கான செலவு குறையும். அத்துடன் பசளை மிக வினைத்திறனாக பயன்படுத்தப்படும்.

❖ இந்த முறையில் எளிதான மாற்றங்களைச் செய்து இடைப்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும்.

❖ தொழிலாளர் தேவை குறைவு.

❖ நேரம் மீதப்படுத்தப்படும்.

பிரதிகூலம்

❖ இந்நீர்ப்பாசனத்தொகுதியை அமைப்பதற்கான ஆரம்பச் செலவு அதிகம்.

❖ பராமரிப்பு கடினம்.

❖ தொழில்நுட்ப அறிவு அவசியம்.

தென்னைப் பயிர்ச் செய்கையில் நீரை வினைத்திறனாகப் பயன்படுத்தும் நுண் நீர்ப்பாசன முறைகள்

நுண் நீர்ப்பாசனத்தில் நீர் மிகவும் சிக்கனமாக பயன்படுத்தப்படுகின்றது. நுண் நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளும் போது விளைச்சலானது அதிகரிக்கிறது. நுண் நீர்ப்பாசனத்தின் கீழ் திட்டமிடப்பட்ட குழாய்த்தொகுதியைப் பயன்படுத்தி, பொருத்தமான அமுக்கத்தின் கீழ் தென்னையின் தேவைக்கேற்ப நீர் வழங்கப்படுகிறது. இதனால் ஒரே சீரான காய்களைக் கொண்ட அதிக விளைச்சலைப் பெற முடியும்.

இந் நீர்ப்பாசனத்தின் அடிப்படைப் பண்பானது மண்ணின் குறிப்பிட்ட பிரதேசத்தை மாத்திரம் நனைக்கக் கூடியவாறு குறிப்பிட்ட அளவான நீரை குறித்த அமுக்கத்தின் கீழ் வழங்குவதே ஆகும். இங்கு தென்னையின் வேர்க் கோளத்துக்கு (bole) மாத்திரமே நீர் வழங்கப்படும். தென்னையின் நாளாந்த சிறப்பான வளர்ச்சியை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு அவசியமான நீரை எவ்விதமான தடையும் இல்லாது தென்னை உறிஞ்சக்கூடியவாறு அதன் வேர்க் கோளத்துக்கு அண்மையில் மண்ணின் ஈரப்பதனை புலக் கொள்ளளவில் (field capacity) பராமரிப்பதே நுண்நீர்ப்பாசனத்தின் அடிப்படை நோக்கமாகும். இந் நோக்கத்தை பூர்த்தி செய்வதற்கு வசதியாக குறுகிய கால இடைவெளியில் நீரை வழங்கி மண்ணின் ஈரப்பதனை எப்போதும் சரியான அளவில் பராமரிக்க வேண்டும். இதனால் மண்ணின் மேற்பரப்பில் கடினப்படை உருவாவது தடுக்கப்படுகின்றது. மண் கூறுகளுக்கி டையே சிறப்பான காற்றோட்டம் உருவாக்கப்படுவதால் வேர்கள் சிறப்பான வளர்ச்சியைக் காட்டும்.

மண் வெப்பநிலையும் சிறப்பாக சீராகப் பேணப்படும். இதனால் உயர் விளைச்சலைப் பெற சாதகமாக இருக்கும்.

தென்னைக்கான நவீன நீர்ப்பாசன் முறைகளை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

❖ தற்காலத்தில் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு பல்வேறு நீர்ப்பாசன முறைகள் காணப்படினும் அவற்றை வினைத்திறனாக பயன்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகள் நிலவுகிறது.

❖ ஆரம்ப முதலீடு அதிகம்

❖ சொட்டு நீர்ப்பாசனம் தூவல் நீர்ப்பாசன முறைகளை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடு அதிகமாக உள்ளது.

❖ இந் நீர்ப்பாசன முறைகள் தொடர்பான அறிவு போதாமை. அநேக விவசாயிகளுக்கு சொட்டு தூவல் நீர்ப்பாசன முறைகள் பற்றியும் அவற்றின் தொழிற்பாடு போன்றன தொடர்பாகவும் போதிய தொழில்நுட்ப அறிவு இல்லாமை.

இதனால் மானியமாக வழங்கப்படும் இந் நீர்ப்பாசன தொகுதிகள் கூட இன்று பயனற்றுப் போகும் நிலை உள்ளது.

❖ தொடர்ச்சியான பராமரிப்பு இல்லாமை.

❖ இந் நீர்ப்பாசன தொகுதிகள் குறித்த கால இடைவெளியில் சிறந்த முறையில் சுத்திகரிக்கப்படல் வேண்டும். தொடர்ச்சியான பராமரிப்பு இல்லாத படியால் இவை குறைந்த காலப் பாவனையுடன் பயனற்றுப் போகின்றது.

❖ தோட்டத்தில் உள்ள நீரின் தரம்.

தென்னந் தோட்டத்தில் கிடைக்கும் நீரானது உப்பு மாசுக்கள் கொண்ட நீராக இருந்தால் அவை நீர்ப்பாசன தொகுதியில் அடைப்பை ஏற்படுத்தும். இதனால் இவற்றின் பாவனைக் காலம் குறையும்.

❖ இந் நீர்ப்பாசன முறைகள் தொடர்பான போதியளவு விரிவாக்க சேவைகள் இல்லாமை.

இந் நீர்ப்பாசன அமைப்புக்களை வழங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் இவற்றை விவசாயிகளுக்கு கையளிப்பதுடன் தமது சேவையை முடிக்கின்றது.

ஆனால் அதன் பின் அவை தொடர்பான மேலதிக தகவல்கள் விரிவாக்கம் என்பன விவசாயிகளுக்கு வழங்கப்படுவதில்லை. இதனால் விவசாயிகள் இதனை கைக்கொள்ள முன்வருவதில்லை.

(முற்றும்)

ஈஸ்வரன் சற்குணன் BSc (Agri)MSc(Aqua) BSc
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி,
தென்னைப்பயிர்ச்செய்கை சபை,
யாழ்ப்பாணம்.

வெகுகாலம் சென்று ஞாபகத்துக்கு வரும்போது தான் அவர்கள் செய்த தீய செயல்கள் எம்மை துன்புறுத்தும். – சூஸோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

பார்வதி அம்மாவைப் பார்க்காதவர்கள் இப்ப புலிப் பாட்டுப் போடுகினம்

நம் தமிழ் மண்ணில் நடக்கின்ற அரசியல் கலாசாரத்தை நினைக்கும் போதெல்லாம் ஊழிக்காலம் ஆரம்பித்து விட்டதோ என்று எண்ணத் தோன்றும். அந்தளவுக்கு பித்தலாட்டம் சிரசுக்கேறி நின்று ஆடுகிறது.

விடுதலைப் புலிகள் தொடர்பில் எதிரான கருத்துக்களை முன்வைத்த தமிழ் அரசியல் வாதிகள் சிலர் இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரித்தால், விடுதலைப் புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறினர்.

ஐயா! விடுதலைப் புலிகள் இல்லாதபோது புலிகள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறுவது எந்தளவுக்கு நியாயம் என்று அந்த அரசியல்வாதிகள் சார்ந்த கட்சியினர் கேட்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப்புலிகள் ஆரம்பிக்கவில்லை என்பார் ஒரு தமிழ் அரசியல்வாதி ஒருவர்.

சரி, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இல்லாது துணிச்சலில் எல்லாம் நடக்கிறது என்று விட்டால்,

இப்போது மீண்டும் விடுதலைப் புலிகளின் புகழைப் பாடுவதில் சில தமிழ் அரசியல்வாதிகள் அதிதீவிரம் காட்டுகின்றனர்.

ஆம், மே தின நிகழ்வை நடத்திய ஒரு அரசியல் கட்சி விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்களை ஒலிபரப்பியுள்ளது.

மே தினக் கூட்டத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக இத்தந்திரம் பின்பற்றப்பட்டதாகப் பலரும் பேசிக் கொண்டனர்.

கடவுளே! விடுதலைப்புலிகள் அமைப்பு இல்லாமல் ஆக்கப்பட்ட பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் தாயும் தந்தையும் அனுபவித்த கஷ்டங்கள் கொஞ்சமல்ல.

அவர்கள் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை அவர்கள் சிறையிலேயே உயிரிழந்தார்.

அவர் சிறையில் உயிரிழந்ததால் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மையாரை விடுதலை செய்தனர்.

சுருங்கக்கூறின் வேலுப்பிள்ளை அவர்கள் தன்னுயிரை நீத்து தன் மனைவி பார்வதிக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார் என்று கூறலாம்.

இவையெல்லாம் நடந்தபோது, பிரபாகரனின் பெற்றோரை சிறையில் பார்ப்பது பற்றி தமிழ் அரசியல்வாதிகள் சிந்தித்திலர்.

அல்லது வியாதிப் பெற்றோர்களைச் சிறையில் அடைத்து வைத்து அநியாயம் செய்யாதீர்கள் என்றேனும் கூறவில்லை.

ஏன்? பார்வதி அம்மையாரை வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் வைத்துப் பராமரித்தபோது அவரைச் சென்று பார்க்க வேண்டுமென தமிழ் அரசியல் தலைமை என்று தங்களைக் கூறிக்கொண்டோர் நினைக்கவில்லை.

ஆனால் கடந்த மே தினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் புரட்சிப் பாடல்களை ஒலிபரப்பி தாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் பற்றுள்ளவர்கள். தங்களின் சித்தையெல்லாம் தமிழர்களின் உரிமை பற்றியது என்பதுபோல பாசாங்கு செய்கிறார்கள்.

இறைவா! இந்த அநியாயங்களுக்கு முடிவே இல்லையா? இதைச் சொல்வதற்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ சிவாஜிலிங்கம் மற்றும் சிலரும் நம்மை குறை விளங்கக்கூடாது.

தமிழினப் படுகொலை நாளில் பேதமின்றி அணி சேர்வோம்

உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு

(கொழும்பு)

தமிழினப் படுகொலை நாளில் அனைத்து தரப்பினரும் பேதமின்றி அணிசேர்வோம் என உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில்,

தமிழினப் படுகொலைப் பேரவலத்தின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் மே மாதம் 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

கட்டவிழ்த்துவிடப்பட்ட அநீதிகள், அராஜகங்கள் ஒன்றிணைந்து எம் உறவுகளை காவு கொண்ட கரி நாளாகும். இவ்வலிசுமந்த நினைவுகளை இதய சுத்தியோடு நினைவேந்த வேண்டியது தமிழர்களாகிய அனைவரதும் தலையாய கடமையாகும். அத்துடன் தமிழர் தம் ஒற்றுமையினை சர்வதேசத்திற்கு வெளிக்காட்ட வேண்டிய தருணமிதுவாக இருக்கின்றது.

நிகழ்கால தமிழர் தம் அரசியல் கட்சிகளையும் அரசியல் வாதிகளையும் எடுத்து நோக்கினால் பல கட்சிகளாக உடைந்து போயும் வெவ்வேறு பாதையில் முரண்டு பிடித்துக்கொண்டும் சுயநல அரசியலையே நடத்தி வருகின்றமை மனவருத்தமான விடயம்.

போர்வடுக்கள் இன்னமும் ஆறாத மக்களின் உணர்வுகளை அரசியலாக்காமலும் படுகொலைசெய்யப்பட்ட எம்மக்களின் ஆத்ம சாந்திக்காகவும் நாமனைவரும் ஒன்றிணைந்து இந்நினைவேந்தலை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகும்.

கடந்த காலங்களில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, ஏற்றுக் கொள்ளப்படுகின்ற முடிவுகளையே எடுத்து வருகின்றமை மறுக்க முடியாத விடயமாகும்.

அந்தவகையில் எம்மவர்களின் இனப்படுகொலை நினைவேந்தலிலும் மக்கள் பிரிவினையை தோற்றுவிக்காது, எம்மவர்களுக்கான நினைவேந்தலில் தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக கலந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது இம்முறை அனைவரும் தமிழ் மக்கள் என்ற ஒரே நாமத்தின்கீழ் நினைவேந்தலை மேற்கொள்ள வேண்டும் என்ற பேரவாவுடன் நினைவேந்தலை நடத்த அழைப்பு விடுத்திருக்கின்றது.

இந்நிகழ்விற்கு உலகத் தமிழ் மாணவர் ஒன்றியம் பூரண ஒத்துழைப்பினை வழங்குவதோடு பொதுமக்களை மற்றும் பொது அமைப்புக்களை கட்சிபேதமின்றி ஒத்துழைப்பை வழங்கி அணிதிரள வேண்டும்எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

கசிப்புடன் கைது; 25,000 தண்டம்

(கரணவாய்)

கசிப்புடன் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி நளினி சுபாகரன் தீர்ப்பளித்தார்.

கடந்த 01.03.2016 அன்று நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட துன்னாலையைச் சேர்ந்த நபரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு சுத்தவாளி என வழக்காடிய நபருக்கான தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதில் அவர் 5 லீற்றர் கசிப்பு வைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட நிலையில 25 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதித்த நீதவான் 6 மாதங்களுக்கு ஒத்திவைத்த ஒரு வருட சிறைத் தண்டனையும் விதித்தார். (இ-60)

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

புத்திமான் துன்ப காலங்களிலும்கூட மகிழ்ச்சியாக இருக்கிறார்

தொண்டு செய்பவர் துன்ப காலங்களிலும்கூட நல்ல நேரத்தையுடையவர்.

பஞ்ச காலங்களிலும் அல்லது போர்க்காலங்களில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் துன்ப உணர்வின்றி நன்றாகவே இருப்பார்கள். ஏனென்றால் அவர்கள் சேவை செய்கின்றனர். மற்றவர்களை எவ்வளவுக்கெவ்வளவு துன்பத்திலிருந்து விடுவிக்கிறாகளோ அவவளவும மகிழ்கிறார்கள்.

மற்றொரு பக்கம் தாங்கள் மாத்திரம் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என விரும்பும் சுயநலக்காரர்கள், நல்ல நேரங்களிலும்கூட வருத்தப்படுவார்கள்.

நல்ல நேரங்களில்கூட, சிறிய காரணங்களுக்காக மக்கள் தாங்கள் மகிழ்ச்சியை இழக்கிறார்கள். ஏதோ சிறியதைத் தவறவிட்டனர். யாரையோ அழைக்க மறந்தனர், யாரோ வரவில்லை, ஏதோ சிறு தவறு நேர்ந்தது என்ற நினைவுகள் விருந்து கொடுப்பவரை வருத்தத்திற்குள்ளாகி விருந்தின் பயனையே மாற்றி விடுகிறது.

புத்திமான் கெட்ட நேரங்களிலும் கூட மகிழ்ச்சியாக இருப்பார். முட்டாள் நல்லநேரத்தில் கூட மகிழ்ச்சியற்றிருப்பார்.

நேரத்தை நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ செய்வது நாங்கள் தான். சாதாரணமாக மக்கள் கெட்ட நேரம் பற்றிக் குறை கூறுவார்கள். நல்ல நேரத்திற்குக் காத்திருப்பார்கள். இது உங்களுக்கு மிக மோசமான நேரம் என்று சோதிடர் சொன்னாலும்கூட, அதை நல்லதாகச் செய்ய உங்களால் முடியும்!

வானிலை உங்கள் மேல் தாக்கத்தை உடையது போன்று நேரமும் உங்கள மேல அதன தாககததையுடையது. உங்களுடைய சத்சங்கங்கள் மற்றும் சாதனை தான் உங்களுடைய கவசம், உங்களுடைய பாதுகாப்பு!

நீங்கள் நேரத்தைவிடப் பெரியவர். நீங்கள் நேரங்காலமற்று தெய்வீகத்துடன் கொள்ளும் தொடர்பால் எந்த நேரத்தையும் நீங்கள் கடந்து செல்ல முடியும் என்பதை உணருங்கள்.

மனிதநேயம் மற்றும் தெய்வீகச் சிறப்பு பற்றிப் பேச வெட்கப்படவேண்டாம். இப்போது முழு உலகையும் அழைக்கும் நேரம் வந்திருக்கிறது!

பரமபொருள் அழைக்கிறது
உலகம் சுழலுகிறது
காலம் உருண்டோடுகிறது
ஆன்மா விளைகிறது.

ஒரு புதிய புத்தாண்டு வாழ்த்து: எப்போதும் புதுமையாக இருங்கள், நீங்களே மகிழ்ச்சி!

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** சுன்னாகம் சிவன் கோவிலடி, சூராவத்தை, மலப்பை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் சமணலங்குளம், குளவிசுட்டான், நெடுங்கேணி, றம்பைக்குளம், தண்டுவன், ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில் புளியங்குளம், பெரியமடு, சின்ன அடம்பன், நைனாமடு, மதியாமடு, நொச்சிக்குளம், பழையவாடி, தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு, உடையார்கட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், 68வது பிரிவு இராணுவமுகாம், 683வது பிரிவு இராணுவமுகாம், 18 VIR இராணுவ முகாம், நெடுங்கேணி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பரசன சபை, தண்டுவன் புழப்பதனிடும் நிலையம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** கணேசபுரம் கிராமத்திலும் **மன்னார் பிரதேசத்தில்** முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக்குளி, செம்மண்தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், பொன் பொஸ்கோ தலைமன்னார் கிராமம், படப்பாடி ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

அறிவாளியாக இருங்கள்

✦ போதுமென்ற மனப்பான்மை உள்ளவனாக இரு. மக்களில் நீயே நன்றியுள்ளவன்.

✦ மனத்தை அடக்கியாண்டு மறுமைக்கு பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி.

✦ மனம் போன போக்கில் நடந்து கொண்டு இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.

✦ ஒரு காரியததை நர செயய வரும்பினால, அதன முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர்.

✦ சுகபோகம் தேடும் நோக்கத்துடன் மார்க்கத்தை பயன்படுத்தாதீர்கள். அது மார்க்கத்திற்கு களங்கம் ஏறபடுததும.

✦ திருக்குர்ஆனை சுமப்பவர்களுக்கும், அறிவுத்துறை பயிறசியாளரகளுககும எதிராக உமது நாவை பயன்படுத்தாதீர்கள். ஏனென்றால் நரகத்தில் நாய்கள் உம்மைத் தாக்கக் கூடும்.

✦ பழித்துரைத்தல், ஒழுக்கம் கெட்ட முரட்டுத்தனமான பேச்சுக்கள் ஆகிய இரண்டும் நபவஞ்சகத்தின் இரு கிளைகளாகும.

சுபதீபன் - கனிஸ்ரன் சிறப்பாட்டம் அரையிறுதியில் மானிப்பாய் பரிஸ்

மானிப்பாய் பரிஸ் அணி, 67 ஓட்டங்களால் நியூ ஸ்ரார்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது.

கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச் சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும் ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி 1 தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டன.

இம்முறையில் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றின.

நான்காவது காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து நியூஸ்ரார்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி, 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரி.சுபதீபன் ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும், எஸ்.கனிஸ்ரன் 52 ஓட்டங்களையும், கிசோக் குமார் 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மோகனதிலீபன் 3 விக்கெட்களையும், தகீபன், றமணன் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

206 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலளித்தாடிய நியூஸ் ரார்ஸ் அணி, 26.2 ஓவர்களில் 138 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் திலீபன்-39, றமணன்-34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில், எஸ்.கிசோக் குமார் 4 விக்கெட்களையும், வினோத் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

சஞ்சயனின் அபார சதம் அரையிறுதியில் ஜொனியன்ஸ்

சஞ்சயனின் அபாரமான சதத்தின் உதவியுடன், 95 ஓட்டங்களால் ஜொலிஸ் ரார்ஸ் அணியை வீழ்த்தி கொக்குவில் சி.சி.சி. சுற்றுப் போட்டியின் அரையிறுதிக் குத் ஜொனியன்ஸ் அணி தகுதி பெற்றது.

கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப் பட்ட கழகங்களுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய மைதானங்களில் வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் 25 ஆவது வருடச் சுற்றுப்போட்டி தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இந்தச்

சுற்றுப்போட்டியில், 1996, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை.

இதுவரையில் நடைபெற்ற 24 சுற்றுப்போட்டிகளில், சென்றலைட்ஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஆகிய அணிகள் தலா 4 தடவைகளும், ஜொனியன்ஸ், ஜொலிஸ்ரார்ஸ், பற்றீசியன் அணிகள் தலா 3 தடவைகளும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 2 தடவைகளும், திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணி ஒரு தடவையும் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டன. இம்முறையில் சுற்றுப்போட்டியில் மொத்தமாக 24 அணிகள் பங்குபற்றின.

இந்தச் சுற்றுப்போட்டியின் 3 ஆவது காலிறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி, சஞ்சயனின் அதிரடியான சதத்தின் உதவியுடன் 30 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 263 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் சஞ்சயன் 113 ஓட்டங்களையும், பிருந்தாபன் 32 ஓட்டங்களையும், அன்புஜன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜனார்த்தனன், வாமணன், பிரசாத் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

264 ஓட்டங்களை வெற்றி யிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி, 25.4 ஓவர்களில் 168 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கஜானாத் 47, சந்தோஸ் 35, தனுசன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக, கஜீவன், கிசாந்துஜன் தலா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க-26)

அதிர்ச்சியில் கோலி

விராட் கோலிக்கு இரத்தத்தால் எழுதப்பட்டிருந்த ரசிகரின் கடிதத்தை பார்த்தவுடன் அதிர்ச்சி ஏற்பட்டதாக தனது அனுபவத்தை பேட்டியின் போது தெரிவித்தார்.

ஐபிஎல் தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக தற்போது விளையாடி வரும் விராட் கோலி தனது ரசிகருடன் ஏற்பட்ட மோசமான சம்பவத்தை நினைவு கூர்ந்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில், நான் டில்லியில் இருந்து காரில் பயணித்துக் கொண்டிருக்கையில், எனது காரின் ஜன்னல் வழியாக ஒரு கடிதம் எனக்கு கொடுக்கப்பட்டது.

அங்கு பலர் இருந்ததால் அதனை கொடுத்த ரசிகர் யார் என்பது எனக்கு சரியாக தெரியவில்லை.

அந்த கடிதத்தை திறந்து பார்த்தவுடன் அதிர்ச்சியடைந்தேன், அதே சமயத்தில் மிகவும் பயமாக இருந்தது. ஏனெனில் அந்த ரசிகர் தனது இரத்தத்தால் கடிதத்தை எழுதியிருந்தார்.

இது ஒரு மோசமான சம்பவம். இதனை என்னால் இன்றுவரை ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனக் கூறியுள்ளார். (க)

மூன்றாமிடத்துக்கான போட்டி கல்வியங்காடு ஜி.பி.எஸ். வெற்றி

அமரர் தம்பு தவராஜா ஞாபகார்த்தமாக ஸ்ரீமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மல்லாகம் நடத்தி வரும் மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூன்றாமிடம் மற்றும் இறுதிப்போட்டி ஆகிய ஆட்டங்கள் கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் எதிர் கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அளவெட்டி விநாயகர் அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது. இதன்படி களமிறங்கிய கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் நிறைவில் 9 இலக்குகள் இழப்பிற்கு 80 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக கிருபா 2 சிக்ஸர்களுடன் 23 ஓட்டங்களை பெற்றார்.

81 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு களமிறங்கிய அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் 6.4 ஓவர்களில் 10 இலக்குகளையும் இழந்து 54 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்துவீச்சில் பிரணவன், கிருபா, சரேஸ் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

இதன்படி 26 ஓட்டங்களால் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டுக்கழகம். ஆட்டநாயகனாக கல்வியங்காடு ஜி.பி.எஸ். அணியின் கிருபா தெரிவானார். (க)

அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

கஜேந்திரன் சிறப்பாட்டம் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றி

கம்பர் மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் உதைபந்தாட்டத் தொடரின் சுப்பர் 8 ஆட்டம் அண்மையில் நடந்தது.

இந்த ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து இளவாளை யங்ஹென்றிஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 4:3 என்ற கோல்கணக்கில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி வெற்றிபெற்றது.

வெற்றிக்கான கோல்கள் வரிசையில் குறிஞ்சிக்குமரன் அணியினர் நட்சத்திர வீரர் கஜேந்திரன் மூன்று கோல்களையும் ரிதுசன் ஒரு கோலையும் போட்டனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மூன்று கோல்களைப் போட்டு வெற்றிக்கு வழி வகுத்த கஜேந்திரன் தெரிவானார். (க)

சோளங்கன் விளையாட்டுக்கழகத்தின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பும்

(கரணவாய்)

சோளங்கன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரணவாய் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் தலைவர் ப.நிலாங்கதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தலைவர் த.ஜங்கரன், சிறப்பு விருந்தினர்களாக கரணவாய் மகா வித்தியாலய அதிபர் எஸ். சண்முகநாதன் மற்றும் வலம்புரி ஊடகவியலாளர் எஸ்.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொண்கின்றனர்.

இறுதிப் போட்டியில் மகாவாகம் சிறிமுருகன் அணியினரை எதிர்த்து மகேசன் அணி மோதவுள்ளதுடன் காட்சிப்போட்டிக்காக சோளங்கன் மகளிர் அணியினை எதிர்த்து டயமன்ஸ் மகளிர் அணி மோதும் வலைப்பந்தாட்டமும் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழகம் மோதும் கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது. (க-60)

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகள் அண்மையில் கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் முதலாம் இடத்தை கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் இரண்டாம் இடத்தை பன்னாலை கணேசன் இளைஞர் கழகமும் பெற்றுக் கொண்டது.

(படங்கள் - புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

மேலதிகமாக 3 ஆயிரம்...

ளாதார வளர்ச்சி வேகம் 6.4 வீதமாக இருந்தது.

கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 4.1 ஆக இருந்ததுடன் இந்த வருடம் பொருளாதார வளர்ச்சி வேகம் 3.1 ஆக குறைந்துள்ளது. கடந்த 28 ஆண்டுகளில் இதுவே குறைந்தளவான பொருளாதார வளர்ச்சி வேகம் எனவும் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் ஏற்கெனவே பெற்ற கடன்களை திரும்ப செலுத்தவும் கடன்களுக்கான வட்டியை செலுத்தவுமே கடன் பெற்று வருவதாக அரசாங்கம் கூறியுள்ளது. (ம)

முள்ளிவாய்க்காலில்...

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் புகைப்பட அல்பம் ஒன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இலங்கை முப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2009 ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் இறுதி யுத்தம் நடைபெற்றது.

அந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பெண் போராளி உறுப்பினர் ஒருவரினால் கைவிடப்பட்ட புகைப்பட அல்பம் ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இறுதி யுத்தம் நடைபெற்று 9 வருடங்கள் கடந்த நிலையில் குறித்த அல்பத்தில் காணப்படும் புகைப்படங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் என்பதை உறுதிபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

வெங்காயம், உருளை...

வந்துள்ளன.

இறக்குமதி செய்யப்படுகின்ற பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கிற்கான விசேட பண்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்தே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கிற்கான வரி 40 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு விவசாய உற்பத்தியாளர்களின் நலன் கருதியே அமைச்சு இத் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது. உருளைக் கிழங்கு மற்றும் வெங்காய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் உள்ளூர் விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் உருளைக் கிழங்கு மற்றும் வெங்காயம் ஆகியவனற்றை இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதனால் உள்ளூர் விவசாயிகளுக்கு தங்களது விளைச்சலை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடியவில்லை என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

தமிழ் மக்களின் பிரச்சினை...

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு 13ஆவது அரசியலமைப்பு தேசிய பிரச்சினைக்கு தீர்வாகாது என்பதை மாங்கள முனசிங்க தெரிவுகுழு உறுதிப்படுத்தியதாக பிரேமதாசாவின் 25ஆவது சிரார்த்த தினத்தில் சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு 13ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் ஒரு போதும் நிரந்தர தீர்வாக அமையாது. இதனை உணர்ந்து கொண்டதாலேயே மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அன்று மாங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவு குழுவை நியமித்தார் என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் , தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்த அரசியல் தலைமைத்துவத்தை துரதிர்ஷ்டவசமாக இழந்து விட்டோம் என ரணசிங்க பிரேமதாசவினுடைய 25 ஆவது சிரார்த்த தின நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பிரேமதாச முன்னெடுத்த சில முக்கிய விடயங்கள் தொடர்பில் குறிப்பிட வேண்டும். வீடற்றவர்களுக்கு வீடு வழங்க வேண்டும் என்பது அவரது கனவாக காணப்பட்டது. அதன்படி வீடற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடுகளை வழங்கும் நோக்கில் குடிமனை திட்டத்தை முன்னெடுத்தார். அத்திட்டத்தில் அவர் தனிப்பட்ட வகையிலும் நிதியினை முதலீடு செய்திருந்தார்.

மேலும் அவரது ஆட்சிக் காலத்திலே பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கினார். புதிய ஆடைத்தொழிற்சாலைகளை நிறுவியதோடு, அதன்மூலமாக பெருமளவிலான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தார். பிரேமதாசவின் காலப் பகுதியில் எமது நாட்டின் ஏற்றுமதி அளவு விரிவடைந்ததோடு, பொருளாதாரமும் முன்னேற்றம் அடைந்தது. அதே போன்று ஜனநாயக நாடொன்றில் இன, மத பேதமின்றி அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். அனைவரும் ஒரே நீதியின் கீழ் ஒன்றிணைந்து வாழவேண்டும் என்பதே மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாவினுடைய எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது .

பிரிக்கப்படாத நாட்டில் அனைத்து இன மக்களும் சம அதிகாரத்துடன் வாழ வேண்டும். சம அளவான அதிகாரங்களுடன், ஒரே நீதியின் கீழ் ஒன்றிணைந்து வாழ வேண்டும் . இதுவே அவரது எதிர்பார்ப்பாக காணப்பட்டது. 13ஆவது சீர்திருத்தத்தில் தேசிய பிரச்சினைக்கு தீர்வாக சில விடயங்கள் முன் வைக்கப்பட்டது. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அது நிரந்தர தீர்வாக அமையவில்லை. மாறாக பாராளுமன்ற தெரிவிக்குழுக்கள் ஊடாக தீர்வை நோக்கி தமிழ் மக்களின் பிரச்சினைகள் நகர்த்தப்பட்டது.

இதனப்படையில் பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட மாங்களமுனசிங்க ஆணைக்குழுவினால் தேசிய பிரச்சினை தொடர்பில் சிறந்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. குறித்த ஆணைக்குழுவிற்கான தலைமைத்துவமானது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் அல்லாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நியமிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கான ஆக்கப்பூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்த அரசியல் தலைமைத்துவத்தை துரதிர்ஷ்டவசமாக இழந்து விட்டோம் என தெரிவித்துள்ளார். (ம)

வட மாகாணத்தில்...

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டில் இருந்து மலேரியா பரம்பல் இல்லை என 2012ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் மலேரியா அற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. இருப்பினும் மீண்டும் மலேரியா இந்த நாட்டுக்குள் பரவாமல் இருப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது.அந்த வகையில் மலேரியா தினத்தை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மலேரியா ஒட்டுண்ணியால் பரப்பப்படும் நோயாக உள்ளது. மலேரியா நோய் உள்ள ஒருவரை நுளம்பு கடித்து அதே நுளம்பு வேறு ஒருவரை கடிக்கும் போது இந்த ஒட்டுண்ணி கடத்தப்படுகிறது. இவ்வாறு தொற்று ஏற்படுகிறது. இது பொருளாதார பின்னடைவை மட்டுமல்லாது அதிக உயிரிழப்பை ஏற்படுத்தியிருந்தது.

நீண்டகால விளைவு உடனடி விளைவுகளாக சிறுவர்கள் தாய்மார்கள் பெரியவர்கள் மீது தாக்கம் கூடுதலாக உள்ளது. மலேரியா பெரும் சவாலாக எமது நாட்டில் இருந்து வந்தது. இதை கட்டுப்படுத்துவதற்கு பெரும்தொகையான நிதி ஒதுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டது. தற்போது கடந்த 5 வருடங்களாக நாட்டுக்குள்ளேயே மலேரியா பரவக்கூடிய தன்மை தடுக்கப்பட்டது.

இருப்பினும் வெளிநாடுகள் இந்திய ஆபிரிக்கா போன்ற நாடுகளில் மலேரியாவின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் அங்கிருந்து இலங்கைக்கு வருபவர்கள் மற்றும் தேவை நிமித்தம் இலங்கையில் இருந்து அந்த நாடுகளுக்கு சென்று வருபவர்கள் மூலம் மீண்டும் அந்த நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகளவில் தற்போது ஏற்பட்டுள்ளது.

மலேரியாவை பரப்பக்கூடிய புதுவித நுளம்பினமும் (அனோபிளிஸ் ஸ்ரெபன்சி) அதாவது நகர்ப்புற மலேரியாவை பரப்பக்கூடிய நுளம்புகள் வட பகுதியில் கூடுதலாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே எமது பிரதேசம் மீண்டும் மலேரியா தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்து நிலமை ஏற்பட்டுள்ளது.

2012 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 11 நோயாளர்கள் (வெளி நாடு களில் இருந்து வந்தவர்கள்) இனங்காணப்பட்டுள்ளார்கள். இந்த வருடம் மலேரியா தாக்கம் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டவர்களில் வெளிநாடுகளுக்கு சென்று வந்த இராணுவ வீரர்கள், பொலிஸ் அதிகாரிகள், வெளிநாடுகளில் இருந்து வேலை நிமித்தம் வந்தவர்கள் தான் இனங்காணப்பட்டுள்ளார்கள்.

இதை தடுப்பதற்கு இந்தியா ஆபிரிக்கா போன்ற நாடுகளுக்கு செல்வோர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அல்லது பிராந்திய மலேரிய தடை இயக்க பணிமனையிலோ தாம் செல்வதை அறிவித்து அதற்குரிய தடுப்பு மருந்துகளை எடுத்து செல்ல வேண்டும். அங்கிருந்து வந்த பின்னரும் இரத்த பரிசோதனைகளை மேற்கொண்டு தடுப்பு மருந்துகளை பெற வேண்டும். நுளம்பு கூடுதலாக உள்ள இடங்களில் இருப்பவர்கள் நுளம்பு வலையினுள் தூங்குவதுடன், நுளம்பை விரட்டும் எண்ணை கிறீம் பாவித்தல், அவசியம் ஆகும். மலேரியா பரிசோதனைகள் அனைத்து அரச தனியார் வைத்தியசாலைகளிலும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு இல்லாத தன்மை காணப்படுகிறது. வந்த பின் தடுப்பதை விட வருமுன் காக்க வேண்டும்.

நகர்ப்புற மலேரியா பரப்பும் நுளம்பு இந்தியாவில் மிக வேகமாக நோயை பரப்பி வருகிறது. இது தீவிர மலேரியாவுக்குரிய தன்மையாக காணப்படுகிறது. இது வடக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது இலங்கையிலேயே முதன் முதலாக நகர்ப்புற மலேரியாவை பரப்பும் நுளம்பு 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மன்னார் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வடக்கு மாகாணத்தில் வேறு மாவட்டங்களிலும் அதிகளவில் கண்டு பிடிக்கப்பட்டது. மன்னார், யாழ்ப்பாணத்தில் அதிகமாகவும் அடுத்ததாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவில் மாவட்டங்களில் ஓரளவாகவும் கண்டுபிடிக்கபபட்டுள்ளது. அவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மலேரியா அபாயத்தை பார்க்கும் போது யாழ்ப்பாணத்தில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. யாழ்.மாநகர சபை கோப்பாய், நல்லூர் பகுதிகளில் இனங்காணப்பட்டது. அப்பகுதிகளில் 1500 கிணறுகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 269 கிணறுகளில் இந்த நுளம்பு கண்டுபிடிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்ட பின்னர் அதில் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு 372 கிணறுகள் பரிசோதிக்கப்பட்டது. அதில் ஒரு கிணற்றில் இந்த நுளம்பு இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் கட்டுப்பாட்டு நடவடிக்கை முற்றுப்பெறவில்லை.

மேலும் எமது தடுப்பு நடவடிக்கைகளுக்கு பாரிய சவாலக இருப்பது கைவிடப்பட்ட காணிகளில் உள்ள பராமரிப்பற்ற கிணறுகளில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் இருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்டவர்களின் ஒத்துழைப்பு அவசியமாகிறது. கிணறுகளை மூடி பாவித்தல் மீன்கள் விடுதல் போன்ற செயற்பாடுகளை பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டும். எனவே மலேரியா மீண்டுத் வராமல் இருப்பதற்கு பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிக அவதானமாக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-9)

மகாவலி கங்கை...

விசாரணைகள் சூரியபுர பொலிஸ் பொறுப்பதிகாரி ஜீ.கே.தேவபிரிய பண்டார தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(ம)

ஒட்டுசுட்டான் வீதிப்...

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதிப்பகுதியில் உள்ள தேக்க மரக்காட்டுப் பகுதியில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ள கடும் வரட்சி மற்றும் அதிகரித்துள்ள வெப்பநிலை மாற்றத்தினால் வனப்பகுதிகளில் தீ பரவல்கள் நடந்தேறிவருகின்றன.

கடும்வெப்பம் காரணமாக இந்த தீப்பரவல்கள் இடம்பெறுகின்றன குறிப்பாக பெரும் காட்டுப்பகுதிளாக காணப்படும் இடங்கள் மற்றும் தேக்கமர சோலைகளின் கீழ் இந்த தீபரவல்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று புதுக்குடியிருப்பிற்கும் மன்னா கண்டல் சந்திக்கும் இடைப்பட்ட பகுதி காட்டில் திடீரென தீபரவல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினை புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியவேளை புதுக்குடியிருப்பு பொலிஸார் வந்து குறித்த தீயினை பரவவிடாமல் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளார்கள். (ம-281)

அரிசி இறக்குமதி...

மற்றும் வர்த்தக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல் அறுவடை சந்தைக்கு வழங்கப்படுவதால், விவசாயிகளுக்கு தமது நெல்லை விற்பனை செய்ய சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம)

எச்.ஐ.வி தொற்றால்...

டுக்கப்படும் என்று அதன் பணிப்பாளர் சிறப்பு மருத்துவர் திலானி ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் எச்ஐவி தொற்றால் பாதிக்கப்பட்ட 75 பேர் அடையாளம் காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

மானிப்பாயில் வேலைவாய்ப்பு

◆ மானிப்பாயில் இயங்கிவரும் வணிக நிலையத்திற்கு கணினி அறிவுள்ளவர்கள் தேவை. மானிப்பாய் சுற்று வட்டாரத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தங்களது சுயவிபர கோவையை மின்னஞ்சலில் அனுப்பி வைக்கவும்.

businessbank.lk@gmail.com

077 233 3837

(C-2471)

விசேட கருத்தரங்கு

கிளிநொச்சியில்

"வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA)" பரீட்சைக்கானது.

எதிர்வரும் 07/05/2018 திங்கள்
9 AM - 2 PM

தேசிய ரீதியில் முதன்மை வளவாளர்

BY: P. கமல்தாசன் மற்றும் வளவாளர் குழு

(3845)

கம்பன் கல்லூரி -கனகபுரம் வீதி, சிவபூமி பாடசாலை அருகில்
077 526 5344,
077 548 3470

கடந்த 2017 ஆம் ஆண்டின் சாதனையுடன்...

A/L 2020 தொழில்நுட்பபிரிவு மாணவர்களை

TECHNO WORLD

வெலிங்டன் சந்தி (லிங்கன் கூல்பார் அருகாமை), யாழ்ப்பாணம்.

அன்புடன் வரவேற்கின்றது

புதிய பிரிவு - A/L 2020

அனுமதிக் கட்டணம் இலவசம்

வெளிமாவட்ட மாணவர்களுக்காக சனி, ஞாயிறு தினங்களில் விசேட நேர சூசிகள் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன.

05.05.2018 (சனிக்கிழமை)
காலை 8.30 வகுப்புக்கள் ஆரம்பம்

எமது கடந்தகால சாதனைகள்

மாவட்ட ரீதியில் முதல் நிலை சாதனையாளர்கள்

பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு
-தமிழின்யன் (1) கோகுலன் (3)
Z - புள்ளி 2.9808 - தேசிய நிலை 20 (2A,B)
உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
- கேசனா (1), சரண்சனா (3)

எமது நிறுவனத்தில் கல்வி கற்று 65 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

(C-2487)

077 017 5346

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

புதிய மூன்று மாடிக்கட்டடத் திறப்பு விழாவும் கண்காட்சியும்

மேற்படி நிறுவனத்தின் புதிய முதலாம் மாடிக் கட்டடம் நாளை மறுதினம் (06.05.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அரச அதிபர் திரு.நா.வேதநாயகன் மற்றும் திருமதி பிரதீபா வேதநாயகன் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு மாற்றுவலுவுள்ளவர்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சி திருமதி வனஜா செல்வரத்தினம் (மாகாணப் பணிப்பாளர், சமூக சேவைகள் திணைக்களம்) அவர்களால் திறந்து வைக்கப்படும்.

கண்காட்சி தொடர்பாக எங்களால் விற்பனை செய்யப்பட்ட வவுச்சர்களை கொண்டு வந்து அதற்கு பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்யலாம். கண்காட்சி மூன்று தினங்கள் 06,07,08 ஆம் திகதிகளில் நடைபெறும். கட்டடத்தை முழுமையாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நன்கொடைகளை தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். நன்கொடைகளை எமது காரியாலயத்தில் வழங்கி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

மாற்றுவலுவுள்ளவர்களின் நலனில் அக்கறை உள்ளோர் அனைவரையும் இவ்விழாவிற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்திய கலாநிதி ந.சிவராஜா
தலைவர்

க.கோபாலகிருஸ்ணன்
செயலாளர்

(சி-2459)

இலஞ்ச விசார...

இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவால் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர்.

20 மில்லியன் ரூபாய் பணத்தைக் கையூட்டாகப் பெற்ற குற்றச்சாட்டிலேயே அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் காணி ஒன்றை மாற்றும் நடைமுறையை விரைவாக மேற்கொண்டு தருவதாகத் தெரிவித்து இந்திய முதலீட்டாளரிடம் 30 மில்லியன் ரூபாய் பணத்தை இருவரும் கையூட்டாகப் பெற்றுக்கொள்ள பேரம் பேசியுள்ளனர்.

அதில் முதல் கட்டமாக 20 மில்லியன் ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொள்ள முற்பட்ட போதே டியுலக்ஸ் ஹோட்டலில் வைத்து மரக்கூட்டுத் தாபனத்தின் தலைவர் பியதாஸ திஸாநாயக்க நேற்று மாலை கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதம அதிகாரி கலாநிதி மகாநாம முன்னர் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர்.

அத்துடன் மரக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பி.திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் பிரத்தியேக செயலாளராக இருந்தவர்.

ஜனாதிபதியின் செயலாளரின் அடுத்ததாக நிர்வாக ரீதியாக அதிக அதிகாரங்கள் ஜனாதிபதியின் பிரதம அதிகாரிக்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

கடை வாடகைக்கு உண்டு

* நெல்லியடி நகரில், "பிரதான வீதியில்" இல. 77,79 :1500,2000 சதுரஅடி உடைய சகல வசதிகளும் உள்ள இருமாடிகளைக் கொண்ட இரு கடைகள் வாடகைக்கு உண்டு.

முஸ்லிம்களும் தொடர்பு கொள்ளலாம்.

(C-2482)

விபரம் நேரில் தொடர்பு:- 077 026 7711

A/L பொருளியல் 3

உற்பத்தி-செலவுக்கோட்பாடுகள்
சந்தை அமைப்புக்கள் & காரணிச்சந்தை
புதிய பாடத்திட்ட நூல்

A/L 2015, A/L 2016 பரீட்சைகளில் 99 புள்ளிகளும்
A/L 2017 பரீட்சையில் 100 புள்ளிகளும்
பெறவைத்த நூல்களின் ஆசிரியர்

வே. கருணாகரன்

புள்ளி 100 100

2018 A/L பரீட்சைக்குரிய வினாவிடை & MCQ நூல்களும் விற்பனையாகின்றது.

ரூபா 250/=

(3839)

பூபாலசிங்கம் புத்தகசாலை, அன்னை புத்தகசாலை

வீடு வாடகைக்கு

பலாலி வீதி உரும்பிராயில் ஒஸ்கார் லேன் அருகில் புதிய வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது

(C-2481)

தொடர்புகளுக்கு:- 077 0690275

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சுத்தம் செய்யப்பட்டது 1Kg - 450/=

U.S.A FARM குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
T.P:- 077 8689500

(C-2340)

6 மாதத்தில் 50,000 - 1 இல. சம்பளம் & வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்

புதிய அணி
TOURISM & Hotel Management
ஹொட்டேல் முகாமைத்துவக் நற்கை
4 மாதம் பயிற்சி
Entry Level with FREE ENGLISH COURSE

பதிவுகளுக்கு 0777 324 004

பெரு ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017

இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk

(C-2485)

இராணுவ புலனா...

இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் தளபதியாக மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ருக்மல் டயஸ், கடந்த மாதம் 27ஆம் திகதியுடன் ஓய்வு பெற்றார்.

இதையடுத்து, இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு நியமிக்கப்பட்டார். அவர் கரந்தெனியவில் உள்ள இராணுவப் புலனாய்வுப் படைப்பிரிவு தலைமையகத்தில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்(ம)

ஒரு...

ட்களை மீட்கும் நடவடிக்கையில் நேற்று பிற்பகல் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது 737 மோட்டார் குண்டுகள் மற்றும் கைக் குண்டுகள் கனரக துப்பாக்கி ரவைகள் மற்றும் ஆர்.பி.ஜி துப்பாக்கிச் சலுதத் தரிகள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக புலுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (ம-251)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சகல போட்டிப் பரீட்சைகளுக்கும்

யாழ்ப்பாணம்
கிளிநொச்சி
வவுனியாவில்

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு
076 6883394

(C-2489)

எதிர்வரும் 19ம் திகதி நடைபெறவுள்ள வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA)பரீட்சைக்கான வகுப்புக்கள்

புதிய பிரிவு ஆரம்பம்

பிரிவு I
சனி 9.30AM

பிரிவு II
ஞாயிறு
9.30AM

பிரிவு III
வார நாட்கள்
மாலை துரித மீட்டல்

கோலாசிற்றி
234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
077 843 5224

(C-2486)

19/05/2018 இல் பரீட்சை

வடக்கு MA வழிகாட்டி வெளிவந்து விற்பனையாகின்றது.
(Open & Limited)

தொகுப்பு
சி.என்.எச்.சாள்ஸ்
077 691 3337

யாழ்.நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வட மாகாணத்தின் முன்னணி புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(C-2484)

உடன் தேவை

சிறுவர் பாடசாலையொன்றிற்கு பாடசாலையை சுத்தம் செய்வதற்கு பெண்/ஆண் தேவை.

விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியில் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

154, Brown Road, Jaffna. T.P:- 0772444172/ 0212226242

(C-2484)

விளைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700/=Kg

DELIVERY IN 3-5 DAYS

மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை

0768226240

V2 TRAVELS

(C-2483)

விற்பனையாகின்றது

MA போட்டிப்பரீட்சை வழிகாட்டி ரூபா 550/=

பல்கலைக்கழக தெரிவு உளச்சார்பு பரீட்சை வழிகாட்டி:- ரூபா 500/=

By.P. கமல்தாசன் - SLPS

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

(3840)

45,000 - 80,000/- உடன்
சவுதி அல் மறாய் நிறுவனத்தில் உடனடி
வேலைவாய்ப்புக்கள்

மெக்கானிக், A/C, குளிர்சாதனப்பெட்டி டெக்னீஷியன், வெல்டர், வீட்டு & வாகன மின் இணைப்பாளர், பிளம்பர், பெயின்டர், கார்பென்டர், விற்பனை உதவியாளர், சாரதிகள், தொழிலாளர்

மே மாதம் பயண ஏற்பாடு

விபரங்களுக்கு 0777 324 004

SIKARAM ACADEMY
FAST TRACK to CAREERS

TGL
Trans Gulf (Pvt) Ltd.,

221 - 1/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
021 - 222 00 11
www.sikaram.lk

90, First Floor, Chatham Street, Colombo 2
www.tgl.lk

(C-2486)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.